Vol. III.] November, 1910 [No. 5

விவேக போதினி

VIVEKA BODHINI

பொருளடக்கம்

சர்வம் ... 139

முக்கிய உபநிஷத்துகள் VII தைத்ரீய உபநிஷத் ... 140

முற்காலத்திய வழக்கங்களிற் சில.—ம-ா-ா-ஸ்ரீ, V. S. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள் M.A. ... 144

வியாஸ விதானம்—I. வர்ணனை வியாஸங்கள்—(5) ஸாதாரண செயற்கைப் பொருள்கள்—கடிகாரங்கள் ... 146

ஸ்ரீமத் சங்கராசாரியார் ... 148

மாக்ஷிமைதங்கிய இந்திய சக்கிரவர்த்தினி மேரி மஹாராணியுார்.—ம-ா-ா-ஸ்ரீ, K. வெங்கிட ராமய்யர் அவர்கள், பி.ஏ. ... 153

நடுக்கங்கற்க நடந்த சிறுவன் ... 156

சட்டதிட்டங்களை மீறி நடக்கலாகாது.—பண்டித நடேச சாஸ்திரி ... 164

பதிவிரதைகளின் சிறப்பு.—ம-ா-ா-ஸ்ரீ, T. S. மூர்த்தி முதலியாரவர்கள் ... 165

சிறுவர்களுக்கான பக்கங்கள் ... 167

ஸ்திரீகளுக்கான பக்கங்கள் ... 169

விசேஷ வர்த்தமானங்கள் ... 173

[காபிரைட்.]

இப்பத்திரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் பிரசுரிக்கக்கூடாது.

சத்தியவல்லி

ஓர் சிறந்த கற்பனைக்கதை. பீமலா, எலேன் எனும் நாவல்களின் நூலாசிரியரான ம-ா-ா-ஸ்ரீ R. P. குழந்தைசாமிப் பிள்ளை B.A., L.T., அவர்களால் எழுதப்பெற்று, சென்னை ஸர்வகலாசாலை முக்கிய பரீக்ஷகரான ம-ா-ாஸ்ரீ, T. ராமகிருஷ்ண பிள்ளை அவர்கள், B.A., எழுதிய முகவுரையுடன் கூடியது. ஸத்தியமேஜெயம் எனும் படிப்பினையும், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் எனும் நீதியையும் கற்பித்தலோடு போதனைபுகட்டும் பாகங்களும் இனியநடையில் மனத்தை ப்ரமையுள் ஆழ்த்தும்படியாகக் கற்பனை வர்ணனை இயற்கையே ப்ரதிபளித்தாற் போலிருப்பதும் படிப்பவர் மனத்தைப் பற்றி இழுக்கும். தர்ம ஸங்கடங்களிலும் கஷ்டத்திலும் நன்மையையே கைபிடிக்க வேண்டுமென்னும் நிலைமையும் ஆழ்ந்த உணர்வோடு காட்டப்பட்டிருப்பதுடன் அக்காலங்களில் மனம் அலைபாயும் விதத்தை விவரிப்பதும் வியக்கத்தக்கது. வாக்கின் நடையும், பாஷையின் போக்கும், யுக்தியின் ஸௌசகமும், கதையின் தாட்டியும் மனதை இழுக்கும் வன்மையும் எவரும் வியக்கத்தக்கவை. விலை அணு **12**.

The "*Madras Standard*."

Sathiavalli, the heroine of this interesting story, is the type of ideal Hindu womanhood with immense faith in God and an almost inexhaustible patience under even the most trying circumstances. Born of humble parents and brought up amidst ideal surroundings, she grows into a flower of her race. So much innocence and love is stored up in her soul that she almost becomes sacred to us. Soon difficulties and sorrows come in quick succession and darken what was once a bright life. The pathos of the story goes on deepening till at last her sole earthly solace, her old father, is removed from her side by the cruel hand of Death. The patience, faith and resignation with which she meets every misfortune as a God-send should surely endear her to every Indian heart and force down silent tears of sympathy from every eye. *Sathiavalli* is a humble representative of her more glorious sisters, *Sita*, *Savitri* and others.

Purushottaman, the father of *Sathiavalli* is a typical Hindu of the olden times to whom every evil is meant for some good. His hopeful temperament never for a moment wavers even in the darkest hour and his whole life is one chorus to divine greatness and goodness. He radiates genial and sprightly spirits wherever he goes and is a centre of good thoughts and good deeds.

The author of this pathetic story has finely felt the pulse of Hindu domestic life and has successfully given an articulate expression to the same. Although the moral of the story is a common place one—the apparently unmerited persecution of truth and its final triumph, though real human beings in the workaday world do not always get what poetic justice would perhaps like to accord to them—the setting is fine.

Situations are contrived with skill and the plot is constructed in an appealing way. The performance is a decided success in modern Tamil Literature. The style is learned without pedantry, simple without being vulgar, and the descriptions of nature and other things are beautiful.

The Hindu:—*Sathiavalli* is a novel with a purpose. The father of Sathiavalli as a *Mentor* teaches his motherless daughter the sublime philosophy and eternal morality that shine as crystal in the vegetable kingdom, that a careful observer can gather all the ten commandments from common flowers points out the snakes that lurk unseen in every step of social advancement that one must guard oneself against the jealousy of one's compeers, and virtue *is* its own reward. The style approaches the easy literary model without being pedantic and the author on the whole is to be congratulated on his ideal in this novel. The book has an introduction by Mr. T. Ramakrishna Pillai and *we commend the book for ladies and boys.*

***

சுதேசமித்திரன்.—சென்னை சர்வகாலசாலை முக்கிய பரிட்சகரான மிஸ்டர் T. ராமகிருஷ்ண பிள்ளை இந்நூலைப் பாராட்டி ஒரு முகவுரை எழுதியிருக்கிறார். கதாநாயகியான சத்தியவல்லி எவ்வளவோ கஷ்டதசைக்கி வந்துகூடத் தனது சத்தியத்தையும், பிதாவின் ஆக்கினையும், தளரவிடாமல் பாது காத்த விதத்தை நூலாசிறியர் மிகநன்றாய் எடுத்துச் சொல்லுகிறார். இந்த நூல் சாதாரணமான தமிழ் கல்வியுடையவர்களுக்கு மிகவும் பிரயோஜன முடையதென்பதில் சந்தேகமில்லை. சுமார் 225-பக்கங்கொண்டதாய் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் ஜெனரல் ஸப்ளைஸ் கம்பெனியார் நன்றாய் அச்சிட்டிருப்பது சிலாகிக்கத்தக்கதே.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி,
மைலாப்பூர், மதராஸ்.

167

விவேக போதினி

" எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்

தொகுதி III } ஸாதாரண௵ ஐப்பசி௴ 1910-௵ நவம்பர்௴ { பகுதி 5

கர்வம்

PRIDE

ஒருவன் தன்னைப்பற்றிச் சிறந்த அபிப்பிராயம் கொண்டிருக்குங்கால் இருக்கும் மனோ நிலைக்கே கர்வம் எனப்படும். தாம் ஏதாவது சிறந்த தொழில் செய்யுங்காலத்திலாவது அல்லது தம்மிடத்தில் ஏதாவது ஓர் சிறந்த சக்தி அல்லது குணம் இருக்கின்றது என்பதை உணர்ந்த காலத்திலாவது இது ஸாதாரணமாக எல்லோருக்கும் நிகழும் மனோநிலை. இது சிற்சில லௌகிகர்களிடம், முகத்தின் அழகாலும் நடை உடை பாவனைகளாலும் வெளியாகும். மனத்தின் தொழில்களை உணரும் திறமை வாய்ந்தவர்களிடம் இது உள்ளே மறைந்து கிடக்கும். நிஷ்டாபரராகிய மஹா ஞானிகளிடத்தில் இது அதிஸூக்ஷ்மமாக இருக்கும். ஸாதாரணமாக வெளியில் அடிக்கடித் தோன்றும் இந்நிலைக்கு கர்வம் என்றும், மறைந்து கிடப்பதற்கு அகங்காரம் என்றும் பெயர்.

ஸாதாரண ஜனங்களுக்கு ஸாதாரண ஸமயங்களில் ஆத்மஸ்துதி ரூபமாகவும், தம்மைத் துதித்தால் வரும் ஓர்வித ஸந்தோஷ ரூபமாகவும் இந்தக் கர்வம் வெளியாகும்; வேறு சிலஸமயங்களில் தமது சக்தியைப் பிறர் ஸந்தேகிக்கின்றனர், குற்றங் கூறுகின்றனர், மதியாது நடக்கின்றனர் என்று அவர்களுக்குத் தோற்றுங்கால், இக்கர்வம், கோபம் பரிந்தை இந்த ரூபமாக வெளிவரும். அப்பொழுது இக்கர்வத்தால் விளையும் கேட்டிற்கு அளவே இல்லை. எவ்வளவு நல்லவனுயிருப்பினும் குற்றங்கூறுங்கால் கோபிக்காமலும், துதிக்குங்கால் ஸந்தோஷிக்காமலும் இருக்கமாட்டான். இம்மனோ நிலைகள் எல்லாம் கர்வ ஸூக்ஷ்மமாகிய அகங்காரத்தின் காரியமே. நன்றாகக் கற்றவர்களிடத்தும், கற்றபடி நடக்க முயலுபவர்களிடத்தும், சாந்தமான மஹான்களிடத்தும் இவ்வஹங்காரம் அதிக நுட்பமாக மறைந்து கிடக்கும். இது அப்போதைக்கப்போது அவர்கள் கூறும் வார்த்தைகளில் குறிப்பாக வெளியாகும். அவமதிப்பு முதலிய கொடிய நிலைகளை அடையுங்கால் மஹான்கள் சபிப்பதும், 'பெரியவர்களை அவமதிக்காதே மிகுந்த கேடுவரும்' என்று நேரிடக் கூறுவதும், 'நாம் கோபித்துக் கொள்ளுவானேன், அக்கொடியவனைப் பார்த்துக்கொள்ளக் கடவுளிருக்கிறார்,' என்று கூறுவதும், 'கொடியவர்கள் தூஷித்து நமது பாபத்தைக் கவர்ந்து போகின்றார்கள்,' என்று வாய் விட்டு வேண்டியவர்களிடம் கூறுவதும் இந்த ஸூக்ஷ்ம கர்வத்தின் ரூபபேதங்களே. ஆதலால் தான் ஓர் கவி 'கர்வம் கடைசிவரையில் உயர்ந்தோரிடம் இருக்கும் குணக் குறைவு' என்றார். இதையுணர்ந்து எக்காலத்திலும், எவ்வளவு தகுந்த முகாந்தரங்கள் இருந்தபோதிலும், கர்வத்தினது ரூபாந்தரங்கள் எதற்கும் இடங் கொடுக்கவேகூடாது.

ஸாதாரணமாக நம்மைச் சுற்றிலும் உள்ள அளப்பரும் ஸ்ருஷ்டி விசித்திரத்தை உள்ளபடி உணரமுடியாமலும் அது இவ்வாறிருக்கின்றது என்பதை மறந்தும் மயங்கிய காலத்திலேயே இக்கர்வம் நம்மை வந்து கவர்ந்துகொள்ளும். இந்த ரகஸ்யத்தை உற்று நோக்கி மனனம் செய்துவந்தால் நாம் எவ்வளவு சிறந்தவைகளை எவ்வளவு எளிதில் செய்தபோதிலும் எல்லாம் ஸ்ருஷ்டி விசித்திரத்தை விடச் சிறந்தவையாக இருக்க முடியா ஆதலால் கர்வப்படக் காரணமில்லை என்பது விளங்கும். ஓரோர்வழியில் உள்ள சிறப்பால் ஸாதாரணமாகக் கர்வம் நமக்கு உண்டாகுமாயின் ஔவையார் கூறியபடி,

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கரையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செயலரிதால்-யாம்பெரிதும்
வல்லோமே என்று வலிமைசொல வேண்டாம்காண்
எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது.

என்பதை மனனம் செய்து அதைத் தொலைக்க வேண்டும். மேலும் 'வல்லவனுக்கு வல்லவன் உலகில் உண்டு' என்ற பழமொழியின் பொருளும் நமக்கு ஸஹாயமாகும். மனிதராய்ப் பிறந்த நாம் சிறந்தவைகளைச் செய்யக் கடமைப் பட்டவர்கள்; மேலும் எங்கும் பரம்பொருளே பரவி நிற்றலால் அவனன்றி ஓரணுவும் அசையாது. ஆதலால் கர்வப்படக் காரணமில்லை என்று அடிக்கடி மனனம்செய்தால் நாளடைவில் இக்கர்வம் தலை எடுக்காமலே அழிய, நாம் பரிசுத்தராவோம்.

விவேக போதினி

தொகுதி 3] ஸாதாரண௵ ஐப்பசி௴ [பகுதி 5

முக்கிய உபநிஷத்துக்கள்

THE PRINCIPAL UPANISHADS

VII. தைத்ரீய உபநிஷத்து 1.

THE TAITHRIYA UPANISHAD

தக்ஷிணதேசத்திய பிராஹ்மணர்களிற் பெரும் பாலராலும் இந்த உபநிஷத் அத்யயனஞ் செய்யப்பட்டு வருவதால், இது மற்றைய உபநிஷத்துக்களைவிட அதிகமாக வழங்கி வருகின்றது. மேலும் இவ்வுபநிஷத்தில் ஓர்விதச் சிறப்பும் உண்டு. மற்றைய உபநிஷத்துக்களெல்லாம் பிரஹ்மத்தைப்பற்றி மாத்திரம் கூறுநிற்கும். இதுவோ அவ்வாறின்றிக் கர்மகாண்டத்திற்கும் ஞானகாண்டத்திற்கும் இடையே நின்று கர்மகாண்டத்தின் நோக்கங்களை வெளியிட்டு முமுக்ஷுவை, எளிதில் ஞானகாண்டத்துள் சேர்க்கத் தகுந்ததாகிய உபாஸனா காண்டமென்ற ஒன்றை முதலில் எடுத்து விரித்துக்கூறிப் பின்னர் பிரஹ்ம விஷயத்தைப்பற்றி விஸ்தரிக்கின்றது. இந்த உபாஸனா பாகத்தில் கர்மங்களைச் சிரத்தையுடன் செய்யும் விதம், நல்லொழுக்க முறை, உபாஸனா விதம், இவைகளால் அடையக்கூடிய சித்தசுத்தியாகிய பலன் என்னும் இவற்றை எடுத்து விளக்கி இவற்றிலிருந்து ஆசார்ய உபதேசமாகிய ஞானத்தைப்பெற ஓர் சிஷ்யன் பக்குவமாகும் விதத்தை நன்றாகக்காட்டப்பட்டிருக்கிறது. இந்த உபநிஷத் பாகத்திற்கு சீக்ஷாவல்லி என்று பெயர். அடுத்தபாகத்திற்குப் பிரஹ்மானந்தவல்லி என்று பெயர். இதில் பிரஹ்மஸ்வரூபமும் அதைச் சென்றடையும் முறைகளும் எடுத்துக் காட்டப்படுகின்றன. மூன்றாவது பாகத்திற்குப் பிருகுவல்லி என்று பெயர். இதில் ஓர் குரு சிஷ்யனுக்குத் திருஷ்டாந்த பூர்வமாக முன் வல்லியிற் கூறியவிஷயங்களை விளக்கும் வழி காட்டப்பட்டிருக்கிறது. இவ்வாறு இவ்வுபநிஷத்து ஞானகாண்ட பாகமாகிய பிரஹ்ம விஷயத்தையும், உபாஸனா காண்டமாகிய கர்மகாண்ட ரஹஸ்ய பாகத்தையும் அடக்கியிருப்பதால் இது மிகச்சிறந்ததாகின்றது. கர்மகாண்டத்தில் பழகியவர்கள் எளிதில் இவ்வுபநிஷத் மூலமாக உபாஸனா நிலையை அடைந்து பின்னர் ஞானநிலையில் நிலைபெறலாம். நம்மதங்களில் குற்றங் கூறுபவர் சிலர், தைத்ரீய உபநிஷத் பின்னிரண்டு வல்லியே ஒழிய, முதல் வல்லியை அடக்கியுள்ளதல்ல என்று வீண்தர்க்கம் செய்யத்தொடங்குகின்றனர். நாம் முன்னர் கூறியிருக்கும், 'சீக்ஷாவல்லி உபாஸனா பாகமே ஒழிய கேவலம் கர்மகாண்டபாகமன்று. கர்மகாண்ட ரஹஸ்யத்தை உணர்ந்து உபாஸனையில் பழகுவதே ஞானத்திற்கு முதல்படி' என்பதை அவர்கள் கவனித்தால் குதர்க்கம் செய்வதை நிறுத்தி இவ்வுபநிஷத்தின் சிறப்பில் ஈடுபடுவார் என்று நம்புகிறோம்.

I. சீக்ஷாவல்லி:—சீக்ஷை என்ற பதத்திற்கு, எழுத்துக்களின் மாத்திரை உச்சரிப்பு முதலியவைகளைப் பற்றிக் கூறும் சப்த சாஸ்திரம் என்று பொருள். இந்தப் பாகத்தில் வேதாத்யயனமாகிய பிராஹ்மணாது முக்ய கடமையை முன்னிட்டுக்கொண்டு ஞானம் பெற ஒருவன் அவசியம் செய்யவேண்டிய கடமைகளாகிய உபாஸனை, தியானம், ஸ்தோத்ரம், ஸத்கரம் முதலிய நல்லொழுக்கங்கள் எல்லாவற்றையும் இவ்வுபநிஷத்து எடுத்துக் கூறும்.

(1) முதலில் இந்த வல்லியில் சிஷ்யன் ஒவ்வொரு தேவதையின் பெயரைச்சொல்லி அதற்கு நமஸ்காரம் செய்துத்தானும் தன் ஆசாரியனும் நெடுங்காலம்வாழத்தான், வேத ரஹஸ்யத்தை உணர்ந்து வித்திபெற வேண்டும் என்று

வேண்டுகிறான். இவ்விடத்திலேயே சிஷ்யன் மெதுவாகக் கர்மகாண்ட நிலையை விட்டுப்பெயர்வதற்கு முயலுகிறான். கர்மகாண்டத்தில் சிஷ்யன், யாகஹவிர்ப்பாகஞ் சென்றடையும் தேவதைகளே சிறந்தவர்கள், அவர்களால் வரும் நன்மைகளே புருஷார்த்தங்கள் என்று கொண்டு கர்மங்களில் பழகிப் பின்னர் இவ்வுபாஸனைகாண்டத் தொடக்கத்தில், அந்த தேவதைகளுக்கு ஆதாரமாயிருக்கும் பரவஸ்துவாகிய ரஹஸ்யத்தை உணரத் தனக்குக் குருவுடன் நோய் அற்ற நீடிய வாழ்வு வேண்டும் என்று தேவதைகளையே பிரார்த்திப்பது அவன் மனோநிலையின் ஏற்றத்தைக் காட்டுகிறது. தன் சிஷ்யன் அதிமேதாவியாகி உலகில் சிறப்புற்று விளங்குவதைக் கண்டு பொறுமை கொண்டு மனமழிந்து அவனை அவமானம் செய்யத் தூர் எண்ணங் கொள்ளும் சில உபாத்தியாயர்களைப் போல, தேவதைகள் எவ்வளவு நல்லவர்களாயினும், கர்மகாண்டத்தில் தம் கீழ் இருந்தவர்கள் இப்பொழுது தமக்கு மேல் செல்ல எண்ணுவதைக்கண்டு பொறாமைகொண்டு அவர்களுக்கு வியாதி, மனச்சஞ்சலம், முதலிய பெரிய தடைகளை உண்டாக்கித் தடுக்க எண்ணும் தூர்க்குண முடையவைகளே. இந்த வேதரஹஸ்யத்தையே புராணங்களில் தவம்செய்ய எண்ணுபவரது மனோநிலையைக் கலைக்க பல வழிகளில் முயலும் இந்திரன் முதலியோர் கதைகளாக உருவகப்படுத்தி இருக்கிறது. எப்படி இருந்தபோதிலும் உபாஸனையில் நிலைபெறச்செய்ய கர்மமே இதுவரையில் ஸஹாயமாக இருந்ததால், சிஷ்யன், கர்மங்கள் சென்றடையும் தேவதைகளை வணங்கி அவர்கள் தனக்கு ஞானவழியில் யாதொரு தடையையும் செய்யாமலிருக்கும்படி பிரார்த்திக்க வேண்டியது நியாயமே. முதலில் சிஷ்யன் தேவர்கள் செய்யக்கூடிய கெடுதிகளைத் தடுக்க எண்ணி இவ்வாறு துதித்தபோதிலும், பின்னர் அவனுக்கு உண்டாகும் ஞானத்தால் அவனுக்குத் தான் நடந்துகொண்டமாதிரி தவறெனத் தோன்றாது. ஞான நிலையில் எவ்வுயிரையும் தன்னுயிர் போலப் பார்க்குங்கால் தேவதைகளையும் புண்படுத்தாது தான் நடந்துகொண்டு மேன்மை அடைந்தமாதிரி நியாயம் என்று என் அவனுக்குத் தோன்றாமல் போகும்?

(2, 3 & 4) இதன் பின்பு எழுத்து, உச்சரிப்பு, மாத்திரை, பிரயத்தனம், ஸ்வரபேதங்கள் என்னும் இவைகளைப்பற்றிக் கூறி, இவைகளாலாகிய வேதமாகிய ஸம்ஹிதை என்பதை ஓர் பிரதீகையாக (அடையாளமாக)க் கொண்டு அதை ஐந்து ரூபமாகத் தியானம் செய்யும் வகை கூறப்படுகிறது. இம்மாதிரியான வேத சப்தங்களின் அமைப்பை ஓர் குறியாகக் கொண்டு தியானிப்பதே, இப்பொழுது அவைகளின் கருத்துக்கள் அடங்கிய விக்கிரஹாராதனத்திற்கு மூலம். வேதத்தில் விக்ரஹாராதனம் இல்லை என்று கூறும் அறிவிலிகள் இவ்வுபநிஷத் பாகத்தையும் இதில் அடையாளமாகக் காட்டப்படும் பிரதீகைகளையும் நன்கு

தொ.	வஸ்து.	அடி.	இடை.	முடிவு.	சேர்க்கும் கருவி.
உபா	ஸம்ஹிதா	ஸம்	ஹி	தா	
1	உலகம்	பிருதிவி	ஆகாசம்	ஸ்வர்க்கம	வாயு.
2	தேஜஸ்	அக்னி	அப்பு	ஆதித்யன்	மின்னல்.
3	ஞானம்	குரு	வித்யா	சிஷ்யன்	போதித்தல்.
4	பிரஜை	மாதா	பிரஜை	பிதா	உண்டாக்குதல்.
5	ஆத்மா	அடிவாய்	வாக்கு	மேல்வாய்	நாக்கு.

ஆராய்ந்து தெளிவார்களாக. இதை ஆராதிக்கும் ஐந்து விதங்களாவன, பிரபஞ்சம், தேஜஸ், ஞானம், பிரஜை, ஆத்மா, ஆகிய இவைகளே. ஸம்ஹிதை என்பதைத் தியானம் செய்யும் வகையினை முன் காட்டியிருக்கும் அட்டவணையிற் காண்க. இங்குக் குறித்தவாறு உபாஸிப்பவன் இகபரம் இரண்டிலும் ஸுகமாக விருந்து பிரஹ்மதேஜஸ் நிறைந்தவனுவான். இம்மாதிரியான விஷயங்களைப் பெற்று முதலில் உலகில் தேறிய பின்னரே, சிஷ்யனுக்கு உள்ளபடி வைராக்யம் உண்டாக அவன் ஞானம் பெற அதிகாரியாவான். மேலும் இம்மாதிரியான தியானத்தால் மனம் ஒரு வழிப்படும். ஞானம் கைகூட உலகில் ஓர்விதமான கவலையற்ற நிலைவேண்டும். இது உண்டாவதற்குச் சிஷ்யன் முதலில் இந்தத் தியானம் செய்ய வேண்டியது அவசியமே. இந்தத் தியானத்தின் முடிவில் 'நோயற்றும் ஐச்வரியம் நிறைந்தும் உள்ள வாழ்வையும், உண்மை ஞானத்தையும் கொடுக்க வேண்டும்' என்ற பிரார்த்தனைகளடங்கிய மந்திரங்கள் காணப்படும்.

(5 & 6) இதன் பின்னர் வையாஹ்ருதி உபாஸனைகள் கூறப்பட்டிருக்கிறது. இதில் பூ, புவ,

தெ.	வையாஹ்ருதிகள்	உலகம்.	தேவதை	வேதம்	வாயுக்கள்
1	பூః	பூமி	அக்னி	ருக்	பிராணன்
2	புவః	அந்தரிக்ஷம்	வாயு	ஸாமம்	அபானன்
3	ஸுவః	ஸ்வர்க்கம்	ஆதித்யன்	யஜுஸ்	வ்யானன்
4	மஹః	ஸூரியன்	சந்திரன்	ஓம்	அன்னம்

ஸுவ.; என்பவை மூன்று. மஹர் என்பது நான்காவது; உயர்ந்தது. இது மாஹசமஸர் என்ற ருஷியால் உணரப்பட்டதாம். இவைகளை உபாஸிக்கும் விதம் மேலே காட்டிய அட்டவணையிலிருந்து அறியலாம். இவ்வையாஹ்ருதிகளைப் பிரஹ்மமாகவும், ஆத்மாவாகவும், மதித்து மற்றைய தேவதைகளை இவைகளின் அங்கங்களாகக் கருதவேண்டும். இங்குக் கூறப்பட்ட பிரஹ்மம் பிரபஞ்ச காரணமாகிய ஸகுண பிரஹ்மமே. இதன் பின்பு யோகசாஸ்திரப்படி பிரஹ்மத்தை ஹ்ருதயாகாசத்தில் தியானம் செய்து, பின்னர் வையாஹ்ருதிகளைத் தேவதைகள் உருவாகக் கருதித் தியானம் செய்து, முடிவில் அடையும் பலன் கூறப்படுகிறது. (இதில் பிராசீன யோக்யன் என்ற ஓர் சிஷ்யன் பெயர் காணப்படுகிறது).

7. இதுவரையில் வேதத்தைப் பிரபஞ்சம் முதலியவற்றிற்குக் குறியாகக்கொண்டு தியானம் செய்யும் வகை கூறி, இனி இந்தத் தியானம் நிலைபெறப் பிரபஞ்ச முதலியவைகளை வேதத்தின் உருவமாகக்கொள்ளும் உபாஸனை பின்னர் கூறப்படுகிறது. பங்தி என்பது ஓர்வித வேதசந்தஸ் (விருத்தம்). இதற்கு எவ்வெட்டு எழுத்துக்களாலாகிய அடிகளாக ஐந்தடியிருக்கும். பிரபஞ்சமும் ஐந்தன் கூட்டமாதலால் அதையும் பங்தி எனக்கொண்டு வேதமாகப் பாவிக்கலாம். இம்மாதிரியே ஒருவன் ஜீவாத்மாவையும் பாவிக்கலாம். பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம், முக்ய திக்குகள், உபதிக்குகள்; அக்னி, வாயு, ஆதித்யன், சந்திரன், நக்ஷத்திரங்கள்; அப்பு, செடி, மரம், ஆகாசம், ஆத்மா என்னும் இவைகளே அண்டத்தில் காணப்படும் ஐந்தன் கூட்டம். இம்மாதிரியே ஐந்து வாயுக்களும், ஐந்து இந்திரியங்களும்; தோல், மாம்ஸம், சதை, எலும்பு, மூளை என்னும் இவைகளும் பிண்டத்தில் காணப்படும் ஐந்தன்கூட்டம். ஆதலால் பிரபஞ்சத்தை வேதத்தின் உருவமாகப் பாவித்து ஸித்திபெற முயலவேண்டும்.

8. இதில் ஓம் என்ற பிரணவத்தின் தியானம் விஸ்தரிக்கப்படுகிறது. ஓம் என்பதே பிரஹ்மம். இதுவே எவ்விதக்காரியங்

களிலும் யாகத்தில் உபயோகப்படும் சொல். ஓம், என்பது ஸம்மதக்குறி, உத்தரவுக் குறி. ஸாமம் கூறுவதும் ருக்சொல்லுவதும், அத்வர்யூ பதில் உரைப்பதும், பிரஹ்மா உத்தரவளிப்பதும், ஆஹுதி கொடுக்கச்சொல்வதும் ஓம் ஆலேயே தொடங்கவேண்டும். வேதாத்யயனம் சொல்லுபவர்களும் இப்பதத்தாலேயே தொடங்கல் வேண்டும். பிரஹ்மத்தை அடையவேண்டும் என்று கருதி எல்லாமாகி நிற்கும் ஓம் என்பதை உச்சரிப்பவன் எண்ணம் நிறைவேறும்.

9. இப்பாகத்தில் உபாஸகன் கடமைகள் எடுத்து விஸ்தரிக்கப் படுகின்றன. நியாயம், ஸத்யம், தபஸ், தமை, அக்னி, அக்னிகர்மங்கள், அதிதிகள், மனித ஸம்பந்தம், பிள்ளை பெறுதல், வம்சவிருத்தி செய்தல், ஆகிய இவை விஷயமானவைகளைச் செய்து, இவைகளைப் பற்றி உணர்ந்து, இவைகளைப் போதிக்கவும் ஒருவல்லவனாக இருத்தல் வேண்டும். இதனாலே உபாஸனைசெய்பவன் தனது கடமைகளை விடவேகூடாது என்பது விளங்கும். முற்கூறிய கடமைகளுள் சிலவற்றைச் சிற்சிலர் சிறந்ததெனமதிப்பர். ரதீதரர்பிள்ளை, ஸத்யவசஸ் ஸத்யமே சிறந்ததென்றும், புருசிஷ்டர் பிள்ளை, தபோநித்யர் தபஸே சிறந்ததென்றும்; முத்கலர்பிள்ளை நாகர், உணர்தல், போதித்தல் ஆகிய இவைகளே சிறந்தவை என்றும் மதிக்கின்றனர்.

10. இந்தப் பாகத்தில் ஞானம் வேண்டும் என்று பிரியப்படும் சிஷ்யன் ஜபிக்கவேண்டிய மந்திரம் கூறப்படுகிறது. இதை உணர்ந்தவர் திரிசங்கு என்ற ரிஷி, '(பிரபஞ்ச) விருக்ஷத்தைத் தூண்டுபவன் நான், என்கீர்த்தி மலையின் கொடுமுடி போன்றது (எங்கும் விளங்குவது) பரம்பொருள் என்னைப் பரிசுத்தமாக்கிவிட, ஸூர்யனுள் இருக்கும் வஸ்துவைப் போல நானும் அழிவற்றவனானேன்! நானே தேஜஸ் நிறைந்த ஐச்வரியம்! சிறந்த ஞானத்தால் எனக்கு அழிவில்லாமலும், நிலைத்திருக்கவும், கூடிய நிலை வந்து விட்டது!' என்பதே அம்மந்திரத்தின் பொருள். இதில் விடுபட்ட திரிசங்கு ரிஷி தமது அனுபவத்தை மெய்ம்மறந்து வெளியிட்டபோதிலும், இந்நிலையை அடையாது அதை அடைய ஆவல்கொண்டிருக்கும் முமுக்ஷுவும் இதை மிகுந்த சிரத்தையோடும் பக்தியோடும், ஒழுக்கத்தோடும் தியானித்துவந்தால் முடிவில் அவனுக்கு ஞானநிலை கைகூடுவது எளிதாகும்.

11. இங்கு ஆசார்யன் சிஷ்யனை நோக்கி அவன் செய்ய வேண்டிய கடமைகளைத் தொகுத்துக் கூறுகிறார். 'உண்மையை உரை. அறஞ்செய விரும்பு. கல்வியது கைவிடேல். பொருளைக் குருதக்ஷிணையாகக் கொடு. பிள்ளை பெறுமலிராதே. இந்தக் கடமைகளை விடவே கூடாது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். ஆசாரியனும் அதிதியும் அத்தகைத் தெய்வமே. ஸத்கர்மத்தையும் பரோபகாரத்தையுமே செய்ய வேண்டும். நம்மைவிடச் சிறந்தோர் முன்னிலையில் மூச்சுக்கூட விடக்கூடாது. சிரத்தையாயும், தாராளமாயும், அடக்கமாயும் தானம் செய். கொடுக்குங்கால் மனதில் ஓர்வித அச்சமும், அன்பும் இருக்கவேண்டும். ஸந்தேஹம் வருங்காலும் பாபிகளோடு ஸம்பந்தப் படுங்காலும் சிஷ்டாசாரத்தையே பின்பற்று. இதுவே வேதரஹஸ்யமானபுத்திமதியும் கோட்பாடும். இதன்படி நீ நட, என்று இவ்விரு பாகங்களிலும் வேதம் நன்னடக்கைக் கோட்பாடுகளை எல்லாம் வெளிப்படையாகக் கூறியிருக்கிறது. இவைகளையே பின்னர் புராணங்கள், கதைகள் ரூபமாக உருவகப்படுத்தி எல்லோரும் எளிதில் உணரும்படி செய்கின்றன.

12. இங்கு ஆதியில் கூறிய தேவதாப் பிரார்த்தனையே மறுபடியும் காணப்படுகிறது. இதுவரையில் த்யானம் நடத்தை முதலியவைகளை உள்ளபடி உணர்ந்த சிஷ்யன் மன

172

முதிர்ச்சி அடைய அவன் மனத்தில் முன்னர் இருந்த பயம் குறைந்து, ஓர்வித அன்போடு தேவதைகளை இங்கு அவன் முற்கூறிய மந்திரத்தாலேயே துதித்து ஞானம்பெற அதிகாரியாகிறான்.

இதுவரையில் கூறிவந்த சிக்ஷாவல்லியின் சுருக்கத்தை எடுத்துக் காட்டுவோம். இதில் 12-அனுவாகங்க ளிருக்கின்றன: அவைகள் (1) தேவதைகளால் கேடு விளையாமலிருப்பதற்காகச் செய்யப்படும் துதியும், (2) வேதஸ்வர உச்சாரணம் முதலியவைகளும், (3) ஸம்ஹிதையை ஐந்துவிதக் குறிகளால் தியானிக்கும் விதங்களும், (4) நோயும் கவலையுமற்ற வாழ்வு வேண்டும் என்னும் பிரார்த்தனையும், (5) நான்கு வையஹ்ருதிகளை நான்கு விதமாகத் த்யானம் செய்யும் ஒழுங்குகளும், (6) பிரஹ்மத்தை ஹ்ருதயத்தில் தியானம் செய்யும் வகையும், (7) தோற்றரூபத்தில் பிரஹ்மத்தைத் தியானம் செய்யும் வகையும், (8) பிரணவத்தியானமும், (9) உபாஸகன் கடமைகளும், (10) அவன் ஞானம் அடைய ஜபிக்கவேண்டிய மந்திரமும், (11) அவன் கடமை முதலியவைகளின் சுருக்கமும், (12) முதலில் கூறப்பட்ட பிரார்த்தனையுமே. இவ்வாறு இருப்பதால் கேவலம் கர்மகாண்டம் என்று கூற முடியாததாயும், ஞானகாண்ட ரஹஸ்யங்கள் ஆங்காங்கு வெளிப்படையாக ஆற்றுமணலில் தங்கச் சன்னங்கள் போல பிரகாசிக்கப் பெற்றதாயும் உள்ள இப்பாகத்தை உபநிஷத் பாகமென்று கூற என்ன தடை? இத்தகைய உபாஸனை பாகம் இவ்வுபநிஷத்தில் இவ்வாறு விரிந்து கிடப்பதால்தான் இது எல்லா உபநிஷத்துக்களையும் விட மிகச் சிறந்ததென்று மதிக்கப்பட்டுப் பிராஹ்மணருள் பெரும்பாலராலும் அத்யயனம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வுபநிஷத்தின் சிறப்பை மேலுள்ள இரண்டு வல்லிகளிலும் நன்றாகக் காணலாம்.

முற்காலத்திய வழக்கங்களிற் சில

SOME ANCIENT CUSTOMS

புறநானூறு முதலிய பழைய தமிழ் நூல்களைக் கொண்டு அறியக்கூடிய முற்காலத்திய வழக்கங்களுட் சில இங்கு எடுத்துக் கூறுவாம்:—

1. அரசர்களில், யுத்தத்தில் இறவாமல் நோயால் இறந்தவர்களைச் சுவர்க்கம் புகுவிப்பதற்காக அவர்களுடம்பைத் தருப்பையிற் கிடத்தி வாளாற் பிளத்தல் வழக்கமாம். நான்கு வேதங்களையும் கற்றுவல்ல அந்தணர் பசிய தருப்பைப் புல்லைப் பரப்பிக்கிடத்த "உண்மையான போர்வீரராய வேந்தர் செல்லும் உலகத்திலே செல்க" என்று அவ்வுடலை வாள் வீசிப் பிளத்தல் வழக்கமாம்.

2. அரசரது அரண்மனை வாயிலில் பள்ளியெழுச்சிக் காலத்தில் வலம்புரிச்சங்கம் ஊதுவது வழக்கம்.

3. இறந்தவர் உடலைத் தகிப்பித்தல் வழக்கம்.

4. அரசர், பகைவர் ஊரைக் கொளுத்தலும், பாணர்க்குப் பொற்றாமரை முதலிய பரிசளித்தலும், வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

5. படைக்கலம் பயில்வோர் முருக்க மரத்தாற் செய்த தூணத்தை இலக்காகக் கொண்டு அதன்கண் ஆயுதங்களைச் செலுத்திப் பயில்வது வழக்கம்.

6. பகைவர் ஊரை அழிப்பதற்கு முன், பசு, பசுபோலுஞ் செந்தன்மை பூண்டுள்ள அந்தணர், மகளிர், நோயாளிகள், பிண்டோதகக் கிரியையைப்பண்ணும் பொன்போலும் பிள்ளைகளைப் பெறாதவர் ஆகிய இவர்களை ஒரு புறம் விலக்கியே ஏனையவற்றை அழிப்பது வழக்கம்.

7. ஊர் காப்பவர் நள்ளிரவில் விளக்குக் கொண்டு நகர் சோதனை செய்வது வழக்கம்.

8. பகையரசர் கொடுத்த திறைகளை அரசர் பரிசிலர்க்குக் கொடுத்தலும், பகைவருடைய ஆர்ணிற் கொண்ட பொருள்களை அவர்களுக்குக் கொடுத்தலும், பகைவருடைய நாட்டின்கணுள்ள ஊர்களைச் சுட்டழித்தலும், பகைவருடைய நாட்டு வயலில் தமது குதிரை முதலியவற்றைச் செலுத்தலும், அவ்வயல்களைக் கொள்ளை யூட்டுவித்தலும், பகைவரது நாட்டையும் அரண்களையும் அழித்துக் கழுதையோரால் உழுது வரகு, கொள் முதலியவற்றை விதைத்தலும், பகைவருடைய பொருள்களைத் தம் வீரரால் கொள்வித்தலும், பகைவர்களது கிரீடத்திருந்த பொன்னால் தமது காலுக்குக் கழல், செய்வித்துப் புனைந்துகொள்ளுதலும், பகைவருடைய முரசத்தை வெளவுதலும், பகைவருடைய யானையின் நெற்றிப் பட்டப் பொன்னினால் தாமரை செய்வித்து அதைப் பாணர்க்குச் சூட்டுதலும் வழக்கமாம்.

9. போரில் புறங்கொடாது இறந்த வீரர்களது ஞாபகார்த்தமாகச் சிலையை நாட்டி, இறந்தவர் பெயரை அதன்கண் எழுதி, அக்கல்லுக்குச் சிவந்த மாலை, மயிற்பீலி முதலிய சூட்டி, அதற்கு மது நிவேதனஞ் செய்து அதைத் தொழுது வழிபடுதல் வழக்கமாயிருந்தது.

10. கணவனை யிழந்து மகளிர் அழுகை ஆரவாரத்துடனே தமது கூந்தலைக் களைவதும், கைவளை முதலிய அணிகலன்களை நீக்குவதும் அல்லியினிடத்துண்டாகும் புல்லரிசியை உண்ணுவதும், பாயின்றிப் படுப்பதும் வழக்கம். இது,

கொய்ம்மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய
கழிகல மகளேப் போலப்
புல்லென் றனையாற் பல்லணி யிழந்தே—என்னும்

'புறநானூறு' என்னும் நூலிலுள்ள 261-வது செய்யுளால் விளங்கும். கணவன் இறந்துபட சிலமகளிர் தீப்பாய்தலும் வழக்கம். பூதபாண்டியனது தேவி பெருங்கோப்பெண்டு என்பவள் தீப்பாயும்போது அவள் பின்வருமாறு சொல்லியதாக மேற்சொன்ன நூலில் ஒரு செய்யுள் இருக்கின்றது. "சான்றோர்களே! நின் தலைவன் இறந்தான், ஆதலின் நீயும் தீப்பாய்ந்து இறந்து படு என்றல்லவோ நீங்கள் எனக்குப் புத்திமதி சொல்லவேண்டும். அப்படிச் சொல்வதைவிட்டு 'இறத்தலைத் தவிர்க' என்கிறீர்களே. நெய்யில்லா உண்டியை உண்டும், பருக்கைக்கற்கள் பரப்பப்பட்ட படுக்கையில் பாயில்லாமற் படுத்தும், கைம்மை நோன்பால் வருந்தும் பெண்டிருள் ஒருத்தி அல்ல நான். என் கொழுநன் இறந்து பட்டானாகை,தீயும் தாமரைத் தடாகமும் இனி எனக்கு ஒரே தன்மைத்து."

11. அரசர் சிவாலயத்தை வலம் வருகையில் அவர்கள் கொற்றக்குடையைத் தாழ்த்தல் வேண்டுமோம். ஒரு பாண்டிய ராஜனை ஒரு புலவர் பின்வருமாறு வாழ்த்துகின்றார். "வடதிசையில் இமயமலை வரையும், தென்றிசையில் கன்னியாறு வரையும், கீழ்த்திசையினும் மேற்றிசையினும் கடலளவும் உன் புகழ் பெருகுக. துலாக்கோல் போல நீ நடுநிலைமையினின்றும் தவறாத ஒழுக்கத்தை மேற்கொண்டிருக்க. நினது படை குடி முதலிய அங்கங்கள் விளங்குக. உனது வெற்றிக் குடை முனிவரால் பரவப்படும் மூன்று திருநயனத்தையுடைய சிவபெருமானது கோயிலை வலம் வரும்போது தாழ்க. உனது மாலை உன்பகைவரது நாட்டைச்சுடும் புகை உறைத்தலால் வாடுக. நீ சூரிய சந்திரரைப்போல என்றும் நிலைபெற்று வாழ்க.

வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம்.எ.

174

வியாஸ விதானம்

ESSAY WRITING

I. வர்ணனையுள்ள வியாஸங்கள்

DESCRIPTIVE ESSAYS

5. ஸாதாரண செயற்கைப் பொருள்கள்—கடிகாரங்கள்

Common artificial things—*Clocks &tc.*

தோற்றம்.—இனங்கள்--உபயோகிக்கும் விதம்—உட்பாகம்;அவைகளின் உபயோகம்—எச்சரிக்கை—முன்னவர்கள் இவை இல்லாதிருக்கையில் இருந்த நிலை.

கடிகாரம் என்பது காலத்தை அளவிட ஏற்பட்ட ஒரு கருவி. இதில் வட்டமாயும் வெளுப்பாயும் உள்ள ஒரு முகப்புத் தட்டிருக்கும். அதன் ஓரத்தில் கூடிய வரையில் பெரிதாய் கறுப்பாக 1-முதல் 12-வரையிலுள்ள எண்கள் வரைந்திருக்கும். இவைகளுள் ஓரெண்ணுக்கும் அடுத்த எண்ணுக்கும் இடையே எங்கும் ஒரே மாதிரியாக இடைவெளியிருப்பதோடு ஒவ்வொரு இடைவெளியும் 5-ஸமபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும். பிரிக்கப்பட்ட முகப்புத்தட்டு முழுவதும் 60-ஸமபாகங்களாகி இருக்கின்றது. இந்த வட்டத்தட்டின் மத்தியில் சேர்க்கப்பட்டதாக இரண்டு முள்ளுகள் காணப்படும். அவைகளுள் ஒன்று நீண்டதாகவும் மற்றொன்றைவிட வேகமாகச் சுற்றி வருவதாகவும் காணப்படும். நீண்ட முள்ளுக்கு நிமிஷமுள் என்றும், குறுகியதற்கு மணிமுள் என்றும் பெயர். நிமிஷமுள் 12-இல் இருக்குங்கால் மணிமுள் ஏதாவது ஒரு எண்ணிலிருக்கும்படி அமைக்கப்பெற்று, இவைகள் உள்ளே இருக்கும் சக்கரங்கள் சுற்ற இருவித வேகங்களோடு தள்ளப்படுகின்றன. அப்பொழுது நிமிஷமுள் 12-இலிருந்து புறப்பட்டு மறுபடியும் 12-க்கு வரும் காலத்தில் மணிமுள் முன்னிருந்த எண்ணிலிருந்து அடுத்த எண்ணுக்குப் போய் நிற்கும். ஆகவே நிமிஷ முள் 60-ஸமபாகம் போகும் காலத்தில் மணிமுள் 5-ஸமபாகம்தான் போகும்; அதாவது நிமிஷ முள் மணி முள்ளைபோன்ற 12-மடங்கு வேக முள்ளது. கடிகாரங்கள் தூசிபடிந்து கெடாமலிருக்க முன்புறம் கண்ணாடியாலும், பின்புறம் நல்ல மூடிகளாலும் மூடப்பட்டிருக்கும்.

கடிகாரங்களில் அநேக விதம் உண்டு. இவைகள், பெயரையும் அவைகளின் பருமனையும் உள்ளிருக்கும் சக்காமுதலியவைகளின் அமைப்பையும் பொறுத்தவை. எப்படியாயினும் பொதுவாகக் கடிகாரங்களைத் தோற்றமாத்திரத்தில் இரண்டுவிதமாகப் பிரிக்கலாம். அவைகள் தொங்கலால் தூண்டப்படும் கடிகாரங்கள், எஃகுச் சுருளையால் தூண்டப்படும் கடிகாரங்கள்,என்பவைகளே. முதல் வகுப்பிலுள்ளவைகளுக்கே கடிகாரங்கள் என்று பெயர் ; இவைகளை வாரத்திற்கு ஒருதரம் தூண்டினாற் போதும். இரண்டாம்வகுப்பிலிருப்பவைகளுக்குக் கைக்கடிகாரங்கள் என்று பெயர் ; இவைகளை ஒரு நாளைக்கு ஒருதரம் தூண்ட வேண்டும்.

இவ்விருவிதமாகக் காணப்படும் கடிகாரங்களை உபயோகிக்கும் விதம் எப்படி என்பதைப்பற்றி விவரிப்போம். இவைகளைத் தூண்டுவதற்கு வாரத்திற்கு ஒருதரமாவது அல்லது ஒரு நாளைக்கு ஒருதரமாவது சாவி கொடுக்க வேண்டும். உடனே இவைகள் ஓடத் தொடங்கும். பெரியமுள் முற்குறிப்பித்தபடி வேகமாயும், சிறியமுள் வேகக் குறைவாயும் போகும். மணிக்குத் தொடக்கம் 12-என்ற எண்ணே. அப்பொழுது நிமிஷமுள் 12-இல் இருக்க மணிமுள் 7-இல் இருப்பதாகக் கொள்ளுவோம். மணி அப்பொழுது 7-என்று சொல்லப்படும். பெரிய முள் நகர்ந்து 4-இல் வருவதாகக் கொள்ளுவோம். வட்டத்தில் காணப்படும் 60-ஸம இடை வெளியுள் ஒவ்வொன்றிற்கும் நிமிஷம் என்று பெயராதலால், அப்பொழுது 20-

நிமிஷங்களாயிருக்கும். மணிமுள் 7-இல் இருந்து புறப்பட்டுப்போய் 7-க்கும் 8-க்கும் இடையிலிருப்பதால் அப்பொழுது மணி 7-அடித்து 20-நிமிஷம் ஆய்விட்டது என்று சொல்லப்படும். முன்னர் நிமிஷமுள் 12-இல் இருக்குங்கால் இம்மாதிரியே மணிமுள் எந்த எண்ணிலிருந்து புறப்பட்டதோ அது மணியையும், நிமிஷமுள் அப்பொழுது இருக்கும் எண்ணுக்கு 12-இல் இருந்து பிரதக்ஷிணமாக எவ்வளவு நிமிஷ இடை இருக்குமோ அதுவே அதிகமாக ஆகி இருக்கும் நிமிஷத்தையும் உணர்த்தும். தவறாது மாத்திரம் கடிகாரத்திற்குச் சாவி கொடுத்து வந்தால் ஒவ்வொரு சமயத்திலும் இதிலிருந்து ஸரியான மணியையும் நிமிஷத்தையும் அறியலாம். இதனாலேயே இம்முள்ளுகளுக்கு முற்கூறிய பெயர்களும் ஏற்பட்டன.

இக்கடிகாரங்களின் உட்புறத்தில் அநேகம் பற்களுடைய சக்கரங்கள் காணப்படும். இவைகளுள் பெரிதாகிய ஒன்றோடு ஓர் கிண்ணம் ஸம்பந்தப் பட்டிருக்கும். இதனுட்புறம் பட்டையான எஃகுச் சுருளையால் நிரப்பப்பட்டிருக்கும். இதன் ஒரு நுனி மத்தியிலிருக்கும் இரும்பு ஆணியில் கட்டப்பட்டிருக்கும். இந்த ஆணியில்தான் சாவியை மாட்டிக் கடிகாரத்திற்குச் சாவி கொடுப்பது. சாவி கொடுத்தவுடன் அக்கிண்ணத்திலிருக்கும் எஃகுச் சுருளை சிறிது சுற்றளவில் குன்றிவிடும். உடனே இதன் இயற்கையால் இது அகலத் தொடங்க கிண்ணச் சக்கரம் சுற்றத்தொடங்கும். இது மற்றைய பற்சக்கரங்களோடு ஸம்பந்தப்பட்டிருப்பதால் அவைகளால் மெதுவாக ஒருநாளிலாவது, ஒரு வாரத்திலாவது முன்போலாகும். இவ்வாறுதுப்பொழுது மற்றைய சக்கரங்கள் மூலமாக இந்தச்சுற்றும் வேகம் ஒழுங்குபடுத்தப்பட்டு முன்வட்டத்தின் மேலிருக்கும் முட்களை முற்கூறிய இருவித வேகங்களுடன் ஓட்டும். சாவி சக்கரத்தைச் சுற்ற இடந்தருவது தொங்கல் அல்லது அதற்குப்பதிலாகக் கைக் கடிகாரத்திலிருக்கும் சிறிய எஃகுச் சுருளை. இக்கைகளின் அசைவால் பெரிய எஃகுச்சுருளை ஒழுங்காகப் பிரிந்துகொண்டும், அது அவ்வாறு பிரிவதால் இவை ஒழுங்காக ஆடிக்கொண்டும் இருக்கும்.

இவ்வளவு நுட்பமான சக்கரங்களாலாகிய கடிகாரங்கள் இக்காலத்தில் மிகமலிந்து விட்டன; ரூ. 3-க்குக்கூட அகப்படும். ஆயினும் 20 அல்லது 25-ரூபாய் கொடுத்து வாங்கப்படும் கடிகாரங்கள் நல்லகடிகாரங்கள். அவற்றை ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டிருந்தால் சற்றேறக்குறைய 20-அல்லது 25-வருஷம் வரை ஸரியாக மணி காட்டி வரும். கடிகார விஷயத்தில் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய ஒழுங்குகள் சிலவுள: அவையாவன (1) கடிகாரத்திற்கு ஒழுங்காகத் தவறாது சாவி கொடுப்பது; (2) சாவிகொடுக்குங்கால் முடிவில் பலமாகச் சாவியைத் திருகாதிருப்பது. வலிவுடன் திருகினால் பெரிய எஃகுச்சுருளை முறிந்து விடும்; (3) கடிகாரத்தை கீழேயாவது ஜலத்திலாவது போடாதிருத்தல்; (4) தூசி படியும்படியான இடத்தில் வைக்காதிருப்பது; (5) முள்ளுகளைப் பின்னே திருப்பாதிருப்பது ஆகிய இவைகளே.

முற்காலத்தில் கால அளவை உணர இம்மாதிரியான நுட்பயந்திரங்களில்லை. நம் முன்னோர்கள் பகலில் ஸூர்யன் இருக்கும் இடத்தாலும், நிழலின் நீளத்தாலும் காலத்தை அளவிட்டும், இரவில் நக்ஷத்திரங்களின் நிலைகளாலும், பக்ஷிகளின் சப்தங்களாலும் காலத்தை அளவிட்டும் வந்தனர். மற்றும் சில ஜாதியார் நாழிகைவட்டிலாலும் உடுக்கை போன்ற குவளையுள் மணலிட்டு அது அடிக்குவளையில் விழும் நேரத்தாலும் காலத்தை அளந்துவந்தனர். இந்தக்கருவிக்கு மணற்குவளை என்றுபெயர். இம்மாதிரி அநேகவிதக் கஷ்டங்களினால் சிலம்தர்ச்சி அடைந்தவர்களால்மாத்திரம் காலத்தை ஒழுங்காக முற்காலத்தில் அளவிட முடிந்தது. இப்

பொழுது கடிகாரத்தின் ஸஹாயத்தால் எல்லோருக்கும் காலத்தின் அளவை உணரும் திறன் உண்டாகிவிட்டது.

[இம்மாதிரியே விவரிக்கக் கூடிய வியாஸ விஷயங்கள்

1. தூரதிருஷ்டிக்கண்ணடி	6. தீப்பெட்டி
2. காற்காலி	7. துப்பாக்கி
3. வண்டி	8. அலமாரி
4. த்விசக்ரவண்டி	9. அச்சுயந்திரம்
5. புஸ்தகம்	10. விளக்கு

போதக் குறிப்புகள்

(இக்குறிப்புக்களுள் சிற்சில எல்லா வியாஸங்களிலும் விஸ்தரிக்க முடியாமலும் இருக்கலாம்.)

1. தோற்றம்.
2. இனங்கள்.
3. உபயோகிக்கும் விதம்.
4. உட்பாகங்களும், அவைகளின் உபயோகங்களும்.
5. எச்சரிக்கைகள்.
6. இவ்விஷயத்தில் முன்னோர்கள் இருந்த நிலை].

நிச்சயமாய் தெரிந்ததைமட்டும் தெரியும் என்று சொல்.—இது பெரும்பாலும் சில சிறுவர்களிடமிருக்கிறதில்லை. நம்மை யாராவது ஒருவன் எவ்விதமாயாவது ஒரு சமாசாரம் கேட்பானேயானால் அது நமக்குத் தெரிந்தாற்றான் தெரியும் என்று ஒப்புக்கொண்டு மறுமொழி சொல்ல வேண்டும்; தெரியாமலிருக்கையில் தெரியும் என்று சொல்ல வேகூடாது. பல பெயர்கள் பல தடவைகளில் மோசம் போயிருக்கிறார்கள். ஒருவன் தனக்கு ஒரு விஷயம் தெரியாமலிருக்க மற்றொருவன் கேட்கும் போது தெரியும் என்று சொல்லி அதை அவன் நம்பி அந்நம்பிக்கையின்மேல் நடந்து கடைசியாய் அது அவனுக்குத் தெரியாது நாம் மோசம் போனோம் என்று அம்மற்றொருவன் எண்ணும்பொழுது நமது கௌரவம் என்னவாயிற்று. ஆகையால் நமக்குத் தெரிந்ததைதான் நாம் தெரிந்ததாகச் சொல்ல வேண்டும்; தெரியாததைத் தெரியும் என்று சொல்ல வேகூடாது. இதனால் பெருத்த அவமானங்கள் நேரிடும்.

ஸ்ரீமத் சங்கராசாரியர்

SRI SANKARACHARYA

ஸ்ரீமத் சங்கராசாரியர், கொச்சிஷோரனூர் இருப்புப் பாதையில் ஆல்வாய் என்ற ஊருக்கு அருகாமையில் 5,6-மைல் கிழக்கேயிருக்கும் காலடிஎன்னுங் கிராமத்தில் சுமார்*2400-வருஷங்களுக்கு முன் அவதரித்தவர். இவர் தாய் தந்தையருக்கு முறையே ஆர்யாம்பாள் என்றும், சிவகுரு வென்றும் பெயர். இவர்கள் மகாசிவபக்தர்களா யிருந்தனர். பரமசிவமே இவர்கள் பக்திக்கு மெச்சி இவர்களிடம் ஸ்ரீமத் சங்கராசாரியராக அவதரித்தாரென்றுஇவரைப் பற்றிய சரித்திரங்கள் கூறும். இவர் இளமைப் பிராயத்திலேயே மிகுந்த புத்தி நுட்பமுடையவராயிருந்து ஸகல சாஸ்திரங்களையும் வெகு சீக்கிரத்தில் கற்றுணர்ந்தார். இளமையிலேயே இவர், தம் தகப்பனாரை இழக்கும்படி நேரிட்டது. பின்னர் தாய்க்கு உதவியாக இவர் வளர்ந்துவரும் காலத்தில் இவரது கல்யாண பிரஸ்தாபம் ஏற்பட, தமக்குத் துறவறத்திலேயே மனம் இருக்கிறதென்றும், ஆதலால் விவாகம் வேண்டாம் என்றும் மறுத்தார். அப்பொழுது இவர் தாயார் மிகுந்த துக்கப்பட அந்த வார்த்தையை அவ்வளவில் நிறுத்திவிட்டார். கொஞ்சநாள் கழிந்தபின்னர் இவரும் இவர் தாயும் அருகாமையிலிருந்த ஆற்றுக்கு நீராடச் சென்றனர். அங்கு ஓர் முதலை இவர் காலைக் கவ்விக்கொள்ள "எனக்கு முடிவுகாலம் வந்துவிட்டது, இப்பொழுதாவது ஆபத் ஸந்யாஸம் வாங்கிக்கொள்ள அனுமதி கொடுக்க வேண்டும்" என்று தாயை வருந்திக் கேட்

* இவர்காலம் சுமார் 1200-வருஷங்களுக்கு முன்புதான் என்று இக்காலத்தவர் மதித்திருக்கின்றனர். ஆனாலும் சுமார் 2400-வருஷங்களுக்கு முன்னர் இவரது அவதாரகாலம் இருக்கவேண்டும் என்பதற்கு தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றனவென்று இவ்விஷயத்தில் நூதனமாய் ஆராய்ச்சி செய்தோர் அபிப்பிராயப்படுகின்றனர்.

டார். இந்தக் கஷ்ட ஸமயத்தில் தாய் மனமிரங்கி அனுமதி கொடுக்க இவர் மனதினாலேயே ஸங்யாஸத்துக்குரிய மந்திரங்களையெல்லாம் தியானம் செய்துகொண்டு ஸங்யாஸியாகத் தீர்மானித்தார். முதலையும் இவரை விட்டுவிட்டது. கரை ஏறியதும் தாயாரைத் தம் உறவினரிடம் ஒப்புவித்து அவள் முடிவு காலத்தில் தாம் எப்படியாவது வந்து உதவுவதாக வாக்களித்துக் குருவைத் தேடிக்கொண்டு தேச ஸஞ்சாரஞ்செய்யப் புறப்பட்டனர்.

போகும் வழியில் அநேகம் வித்வான்கள், சிறு வயதாயிருப்பவர் ஸங்யாஸம் கொள்ளலாகாது என்று விஸ்தாரமாக இவருடன் வாதிக்க இவர் சுருதி, யுக்தி முதலியவற்றால் வெகுநேரம் அவர்களுடன் தர்க்கா செய்து "ஸங்யாஸ ஆச்ரமம் மிகச் சிறந்தது; மோக்ஷத்திற்கு முக்கிய ஸாதனம்; இதையடைய, வயது முக்கியஸாதனமாகமாட்டாது; எவ்வயதில் இருந்தாலும் தகுந்த சாஸ்த்ர ஞானத்தின் பேரில் உலகவிஷயங்களில் உண்மையான மாறா வெறுப்பு ஏற்பட்டால் அப்பொழுதே ஸங்யாஸம் கொள்ளலாம்" என்று முடிவுகூறி அவ்வித்வான்களை வாய் எடுக்கவொட்டாமற் செய்தார். அவர்களிடமிருந்து ஸங்யாஸபிரதிஷ்டாபனாசாரியர் என்ற பட்டப்பெயர் பெற்று வடக்கே செல்லுகையில்

நர்மதா நதி தீரத்தில் ஸ்ரீ கோவிந்த யோகி என்ற யதீசுவரரைக்கண்டு அவரிடம் சிஷ்யனாக அமர்ந்து நிஷ்டை பழகி ஸித்திபெற்றார். இவரிடத்தும் இவர் குருவாகிய ஸ்ரீ கௌடபாதரிடத்தும் தமக்குள்ள நன்றியறிதலை சங்கராசாரியர் தாம் பின்னர் செய்த கிரந்தங்களில் அடிக்கடிக் காட்டியிருக்கிறார்.

ஆசாரியரது ஆஞ்ஞைப்படி காசிக்ஷேத்திரம் அடைந்து அங்கு அவர் சிஷ்யர்களை அங்கீகரிக்கத் தொடங்கினார். அங்கே இவருக்குப் பத்மபாதர், என்ற ஒரு சிறுவரும் சிஷ்யராக வந்து அமர்ந்தார். இங்கு தான் சங்கராசாரியர் தமது வியாக்யானங்களையும் அற்புதமான சிறிய சுலோகங்களையும் இயற்றியது. இங்குத் தான் இவர் ஓர் பறையனைத் தூர விலகு என்று கூறின காலத்து, அவன் கேட்ட அத்வைதக் கேள்விகளுக்குப்பதிலாக "பிரபஞ்சத்தை அத்வைத திருஷ்டியால் உணருபவன் எவனோ அவன் சண்டாளனாயினும் துவிஜனாயினும் என் குருவே" என்று முடிவுபெறும் மனீஷா பஞ்சகம் என்ற ஐந்து சுலோகங்களையும்; அநியாயமாய்த் தனது ஆயுள் முழுவதையும் இலக்கணப் பயிற்சியில் வீணாகக் கழித்த ஒருவனை நோக்கி பஜகோவிந்தம் என்று முடிவு பெறும் சுலோகங்களையும் இவர் வெளியிட்டார். காசி க்ஷேத்திரத்தில் இவருக்கும் மஹாஞானியான ஓர் கிழப் பிராஹ்மணருக்கும் பிரஹ்மஸூத்ர பாஷ்ய விஷயமாக வெகு தர்க்கம் எற்பட முடிவில் தகுந்த ஆதாரங்கள் காட்டி சங்கராசாரியர் அவரைத் திருப்திபடுத்தினார். வியாஸரே கிழவர் ரூபமாக வந்து சங்கராசாரியரது அறிவின் நுட்பத்தைக் கண்டு ஆனந்தித்தார் என்று ஸ்ரீ சங்கரர் சரிதைகள் கூறும்.

பின்னர் காசி க்ஷேத்திரத்திலிருந்து இவர் அத்வைத ஸித்தாந்தத்தைப் பரவச்செய்ய வெளியேறினார். பிரயாகையண்டை வருங்கால், அங்கு மாறு வேஷம் பூண்டு பௌத்த மதத்தின் குற்றங்களைப் பௌத்த குருக்களிடமிருந்தே தெளிவாகத் தெரிந்து கொண்டு பின்னர் அவைகளை எடுத்துக்காட்டிப் புத்த மதத்தைக் கண்டித்து வேதத்தின் கர்மகாண்ட பாகங்களே மிகச் சிறந்தவை; அவைகளே ஈசுவரனைவிடச் சிறந்தவை என ஆரியதருமத்தை நிலை நிறுத்திய குமாரில பட்டரைக் கண்டார். அவர் அப்பொழுது சுற்றிலும் உமி முதலியவைகளால் மூடப்பட்ட நெருப்பில் பாதி எரிந்து கொண்டிருந்தார். இம்மாதிரி செய்யக் காரணம் என்னவென்று சங்கராசாரியர் கேட்க, அதற்கு அவர் "நான் என் குருக்களாகிய புத்தர்களுக்குத் துரோகம் செய்தேன், கர்மங்களின் சிறப்பை நிலைநிறுத்த ஈசுவரனைக் கூட லக்ஷ்யம் செய்யாது விட்டுவிட்டேன்; இவ்விரண்டு பாபங்களுக்கும் இதுவே பிராயச்சித்தம்' என்றார். பின்னர், அவருடன் சாஸ்திர ஆராய்ச்சி செய்யவேண்டும் என்ற சங்கரரை நோக்கி "எனக்கு மரண காலம் வந்து விட்டமையால் என்னால் ஒன்றும் செய்யமுடியாது. ஆதலால் மாஹிஷ்மதி என்ற பட்டினத்தில் என் சிஷ்யன் மண்டனமிச்ரன் என்னும் ஒரு மஹா வித்வான் இருக்கிறான். அவனை நீர் திருப்தி செய்தால் என்னைத் திருப்தி செய்ததற்கு ஸமானம்" என்று கூறி தேகம் நீங்கினார். இவரது நேர்மையையும் மனதின் சுத்தியையும் கண்டு மிகுந்த அன்பு கூர்ந்து சங்கரர் சற்று வியப்படைந்தார்.

கொஞ்ச நாளைக்கெல்லாம் மாஹிஷ்மதிக்கு வந்து மண்டனமிச்ரரோடு வெகுநாள் வாதம் செய்து அவரைத் திருப்திப்படுத்தி ஸந்யாஸியாக்கினார். அப்பொழுது அவர் பெண்சாதியாகிய பாரதி தேவியும், துறவறம் பூண்டு சங்கராசாரியரோடு கணவன் பின்னே புறப்பட்டாள். மண்டனமிச்ரருக்கு இந்த ஆச்ரமத்தில் ஸுரேசுவர ஆசார்யர் என்ற பெயர் வந்தது. பின்னர் சங்கரர் தக்ஷிணதேசத்தை நோக்கிப் புறப்பட்டார். இதற்குள் இவருக்கு தோடகர், ஹஸ்தாமலகர், என்ற இரண்டு

சிஷ்யர்களும் ஏற்பட்டார்கள். இவர் போன வழியில் அநேக கொடிய வழக்கங்களுடைய மதஸ்தர்கள் எதிர்பட்டனர். அவர்களது மதங்களும் வழக்கங்களும் இன்னவையென்றுஅவர்

களிடமிருந்தே ஸாவதானமாகத் தெரிந்து கொண்டு அவர்களிடம் இருந்த கெட்ட பழக்கங்களை யெல்லாம் வேதங்கள் முதலியவைகளிலிருந்து தகுந்த ஆதாரங்களைக் காட்டி மறு

த்து, அவர்கள் ஆராதனையை நிலை நிறுத்தி, அது சென்று முடியும் நிலையாகிய அத்வைத நிலையை நன்கு விளக்கி மதத்துவேஷங்களை ஒடுக்கி அவர்களை யெல்லாம் சீர்திருத்தினர்.

பின்னர் தேற்கே துங்கபத்ரா நதி உற்பத்தி ஸ்தானத்தருகில் அவர் வந்து சேர்ந்தார். அங்கு அவர் சிருங்கேரி எனும் இடத்தில் ஓர் மடத்தை ஸ்தாபித்து அதில் தமது சிறந்த

சிஷ்யரான ஸுரேசுவர ஆசாரியாரை அதிபதியாக ஏற்படுத்தினார். அங்கு அவர் கொஞ்ச காலம் தங்கியிருக்க அப்பொழுது கூடவேயிருந்த பாரதி என்பவளுடைய ஒழுக்கம், பரிசுத்தம் முதலிய சிறந்த ஆத்மகுணங்களைக் கண்டு அவளது பிற்காலத்தில் அவளை அங்கேயே ஆராதிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். இன்னும் அவள் சாரதாம்பிகையாக அம்மடத்துள் ஆராதிக்கப்பட்டு வருகிறாள்.

இங்கு இருக்கையில் இவர் தாயாரது அபாய நிலை இவருக்குத் தெரியவந்தது. உடனே சிஷ்யர்களை விட்டு விட்டுத் தாம் தனியாகக் காலடிவந்து சேர்ந்தார். அங்குச் சாகும் தருணமாயிருந்த தாயாருக்குத் தகுந்தபடி உபதேசங்கள் செய்து ஸுகமாக அவளைப் பரலோகம் சேர்ப்பித்து, விட்டு அவளுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களைச் செய்ய யத்தனித்தார். அங்கிருந்த பிராஹ்மணர்களெல்லோரும் ஸந்யாஸிக்குக் கர்மம் செய்ய அதிகாரம் இல்லைஎன்று கூறி இவருக்கு ஸஹாயம் செய்யாது ஒதுங்கி விட்டார்கள். தாமே தம்மால் இயன்ற மட்டும் தாய்க்குச் செய்ய வேண்டியவைகளை ஸரிவரச் செய்து முடித்து, தம்மைக் கஷ்டப்படும்படி விட்டுவிட்டவர்களது ஒழுக்கங்களை மாற்றிவிடவேண்டுவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தார். இவர் தாய் விஷயத்தில் ஸஹாயமில்லாததால் எந்த எந்த மாதிரிஎல்லாம் செய்யும்படி நேர்ந்ததோ அந்த அந்தமாதிரியாக இவரைத் தடுத்தவர்களெல்லாம் எப்பொழுதும் செய்துவர ஏற்பாடுகள் செய்தார்.

இதன் பின்னர் இவர் தக்ஷிண தேசத்தின் கீழ்க்கரை யோரமாக யாத்திரை செய்யப்புறப்பட்டுத் திருவானைக்காவல், காஞ்சிபுரம், திருவொற்றியூர் முதலிய இடங்களிலிருந்த சாக்தேயர்களைச் சீர்திருத்திக் கொண்டு ஜகந்நாதம் வந்து அங்கு ஓர் மடம் ஏற்படுத்தினார். பின்னர் ஆரியாவர்த்தம் வழியாக யாத்திரை செய்து அங்கிருந்தகொடிய மதஸ்தர்களைச் சீர்திருத்தித் துவாரகை வந்து அங்கும் ஓர் மடம் ஏற்படுத்தினார். பின்னர் காஷ்மீரம் சென்று அங்கிருந்த பௌத்தர் முதலியோரை ஜயித்து வியாஸ பௌர்ணிமையன்று ஸர்வஞ்ஞபீடம் ஏறி, மிகச்சிறப்புற்று விளங்கினார். இவ்வாறு மடங்களைச் சீர்படுத்திக்கொண்டு ஆஸாம் தேசத்தில் காமரூபம் என்ற பட்டினம் வந்து அங்கிருந்த அபிநவகுப்தன் என்ற பெரிய சாக்தேயனை எதிர்த்து, தோல்வி யுறச் செய்தார். இதனால் அவன் கோபங்கொண்டு சங்கராசாரியர் மேல் ஆபிசாரப்ரயோகம் செய்து அவருக்கு மூலவியாதி வரும்படி செய்துவிட்டான். இதனால் வரவர இவர் பலம் குறைந்து கொண்டே வந்தது. இதைப் பத்மபாதர் உணர்ந்து தகுந்த மந்திரங்கள் மூலமாக இதை மாற்றிவிட்டார். ஆயினும் இந்த வியாதியின் வேகம் முற்றிலும் போகவில்லை. தேகம் தளர்வதைக்கண்ட ஆசாரியர், பதரிகாசிரமம் சென்று அங்கோர் மடம் ஏற்படுத்தி அருகாமையில்ஓர்நாராயணக்ஷேத்திரத்தையும் கட்டிவைத்தார். பின்னர் கேதாரம் வந்து இளம் பிராயமாகிய 32-ம் வயதில் ஸித்தி பெற்றார்.

பேச்சியின் மத்தியில் தடுக்காமை.—ஒரு மனிதன் பேசிக்கொண்டிருக்கையில் நாம் வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டாவது அல்லது வேறு விதமான சம்பாஷணைகளை ஆரம்பித்தாவது அவன் பேச்சைத் தகையக்கூடாது. இந்தச் சமாசாரம் ஒரு இளங்குழந்தைக்குக்கூட தெரிந்த விஷயம்.

ஒரு சங்கத்தில் போய் உட்கார்ந்தால் நமக்கு இன்ன சங்கதி தெரியுமென்ற சொல்லி அதைப் பற்றி வாதிப்பதைக்காட்டிலும் அவர்கள் எந்தச் சங்கதியைக் கொடுத்து வாதிக்கச் சொல்லுகிறார்களோ அதை அங்கீகரித்துக்கொண்டு வாதிப்பது நலம், ஏனெனில் நாமே ஒரு விஷயத்தைத் தடுத்து வாதிக்க எத்தனித்துப் பின்னால் பின்வாங்குவதைப்பார்க்கிலும், இதரர்கள் சொன்ன சங்கதியில் சரிவரப் பேசத்தெரியாமல் பின்வாங்குவது அவ்வளவு மரியாதைக் குறைவல்ல. நமக்குச் சுவயமாய்ச் சக்தியிருக்கும் பக்ஷத்தில் எதிலும் சரிவர விளங்கும்.

மாட்சிமை தங்கிய இந்திய சக்ரவர்த்தினி மேரி மஹாராணியார் *

HER GRACIOUS MAJESTY QUEEN MARY

(*A Life-sketch*)

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று" என்று

பெருநாவலர் சொன்னதின் பொருள், பிறத்தலுக்கு முக்கிய பிரயோஜனம் கீர்த்தியாம்; கீர்த்தி பெறாமல் வாழ்நாட்களைக் கழித்தலினும் பிறவாமலிருத்தல் நலமென்பதாம். நமது நாட்டிற்குத் தற்காலம் சக்கிரவர்த்தியாயிருக்கும் ஐந்தாவது ஜார்ஜ் என்பவருக்குப் பட்டமஹிஷியான மேரி என்னுஞ் சீமாட்டியின் சரித்திரத்தை நோக்குங்கால் புகழுடம்பு ஓம்புதற்கே அவதரித்த பெண்மணி யென்றே சொல்லலாகும். புண்ணியவசத்தால் ராஜ ஐசுவரியம் கிடைப்பது உண்மை. "விளையும் பயிர் முளையிலே" என்னும் முதுமொழியும் பொய்த்துப் போவதில்லை. முளையைச் சரிவரப் பரிபாலிக்காவிடின் பயனுண்டாகா 'தல்லவா? நமது மஹாராணி அவர்கள் குலத்திலும் குணத்திலும் உயர்ந்தவரா யிருந்ததோடு நல்லொழுக்கமும் அவருடன் செழித்து வளர்ந்தமையால் இப்போதடைந் திருக்கும் உத்தம பதவி அவர்கட்குத் தகுந்ததாக ஏற்பட்டது. சிறு பிராயமுதல் இந்தச் சீமாட்டியின்சரித்திரம் எல்லோரும் மெச்சும்படி யிருத்தலால் அதனைச் சற்று விஸ்தரித்தே இங்குச் சொல்லுவோம்.

இங்கிலாண்டில் 1760-ம் ஆண்டுமுதல் 1820-ம் ஆண்டுவரையில் மூன்றுவது ஜார்ஜ் என்னும் அரசன் ஆண்டுவந்தார். அவருடைய சௌஹித்ரி டசேஸ் அப் டேக் என்பவர் காலஞ்சென்ற விக்டோரியா மஹாராணி அவர்களுக்கு அத்தையின் பெண்ணுகவேண்டும். மேரி மஹாராணி அவர்கள் மேற்சொன்ன டசேஸ் அப் டேக் என்பவரின் ஸ்ரீமந்த புத்ரியாக 1876-ஆு மேமீ 26-உயில் அவதரித்தனர்.

தாயைப்பார்த்து பெண்ணைக் கொள்ளவேண்டுமென்று பெரியோர் சொல்வது வாஸ்தவம் என்பது மேரி மஹாராணியின் சரிதையால் நன்ருய் விளங்கும்.

நமது மஹாராணி அவர்களின் தாயார் தெய்வ பக்தி மிகுதியா யுடையவர். குடித்தன வேலைகளைச் செய்து முடித்த பின்னர் "பைபில்" என்னும் கிறிஸ்தவ வேத புத்தகத்தைப் படித்து அதன் ரகஸ்யார்த்தங்களைச் செவ்வையாயுணர்ந்து வேதோக்தமான காரியங்களையே தானுஞ் செய்து தன் மக்களுக்கும் அந்த நற்பழக்கமே படியும்படி செய்து வந்தார். அங்கிலேய ராஜவம்சத்தைப்பற்றிய ஒரு ஐதிகமுண்டு: அதாவது— பூர்வத்தில் இஸ்ரேல் ஜாதியாருக்கு அரசனுயிருந்த டேவிட் என்னும் புருஷனிடத்தினுதித்தவர்கள் என்பதாம். இஸ்ரேல் ஜாதியார் தெய்வகடாக்ஷம் பெற்றவர்கள். ஆதலின் அங்கிலேய அரச வம்சத்தாரும் தெய்வகடாக்ஷம் பெற்றுப் பெரியநாடுகளுக்கு எக்காலத்திலும் அரசுரிமையை யுடைத்தாயிருக்கின்றனர். இந்த அபிப்பிராயம் மேரி மஹாராணியின் தாயாரின் மனத்தில் நன்ருய்ப் பதிந்திருந்தது. அதற்கொத்தவாறுகவே, புத்ரியும் ராஜஸம்பத்தைப் பெற்றிருக்கின்றனர்.

இளம் பிராயமுதல், நமது மஹாராணி அவர்களுக்கு ஏழைகள் குடித்தனம் நடக்கும் மாதிரியைத் தெரிந்து கொள்ளுகிற பழக்கம் உண்டாயிருந்தது. செல்வத்தில் உதித்தவர்களுக்குப் பெருமையுண்டாவது அச்செல்வத்

* W. T. ஸ்டெட் என்பவர் பிரசாரம் செய்துவரும் பத்திரிகையின் ஸகாயத்தாலும், டௌன் ஹைஸ்கூல் பிரதம தமிழ்ப் பண்டிதர் ம-ள-ள-ஸ்ரீ K. நாராயணசாமி அய்யர் செய்த வெண்பாவின் ஸஹாயத்தாலும் இச்சரித்திரம் எழுதப்பட்டது.

தைப் பாத்திரமறிந்து பகுத்தலாலே என்னும் வாஸ்தவஞானம் உடையவராயிருந்தனர் அவர் அன்னைக்கும் அதுவே சம்மதமான காரியம். ஏழைகளிடத்தில் இரக்க முண்டாகும் மார்க்கத்தை உயர்ந்த பதவியிலுள்ளவர்கள் தேடுவாராயின் உலகத்தில் துக்கம் கஷ்டம் இரண்டும் இல்லாமலே போய்விடும். நமது நாட்டுச் சீமாட்டிகளைப்போல அறையிலடைபட்டிராமல் வீட்டிற்கு வெளிப்புறத்தில் பாதசாரியாகவாவது குதிரைமேலாவது அடிக்கடிப் போவதுண்டாம். அக்காலத்தில் வேலைக்காரர்கள் யாரையாவது கண்டால் குலப்பெருமையை எள்ளளவேனும் பாராட்டாமல், குசல பிரச்னம் செய்து குளிர்ந்த முகத்தோடு பேசுவார்களாம். இதுவன்றோ பின்வரும் க்ஷேமத்திற்கு ஸூசனையாயிருந்தது.

நமது நாட்டுச்சிறுமியரைப்போலிராது, இங்கிலீஷ், ஜர்மன், ப்ரெஞ்சு, இடாலியன், என்ற நான்கு பாஷைகளிலும் விசேஷ பாண்டித்யத்தை யடைந்தார். ஷேக்ஸ்பியர் முதலான சிரேஷ்ட கவிகளின் கிரந்தங்களை வாசிப்பதிலும், அர்த்தத்தை அறிந்து களிப்பதிலும் காலங்கழிக்க அவர்கட்கு மிகப்பிரியம். வயது வளர வளர தேகதிடமும் புத்தி கூர்மையும் விருத்தியாய்க் கொண்டே வந்தன. வேலை செய்து ஜீவனஞ்செய்யும் ஸ்திரீகளின் சங்கத்தைப்பற்றியும், ராஜாங்கத்தார் ஏழைகளுக்கு ஸகாயமாகச் செய்திருக்கும் சட்டங்களைப் பற்றியும் மேரிமஹாராணி அவர்கள் ஐயமறக் கற்றிருந்தார். ஸங்கீத ஞானமும் மிகுதியாக உண்டு. பெண்களுக்கு வேண்டிய ஸகல ஸத்குணங்களும் மேரிமஹாராணி அவர்களை உறைவிடமாகக் கொண்டனவென்று உறுதியாய்க் கூறலாம்.

இச்சீமாட்டி தீனசரண்யை என்பதற்கு எல்லாரும் அங்கீகரிக்கும்படி ஒரு திருஷ்டாந்தம் உண்டு. ஏழைகள் அங்கிலேய தேசத்தில் குளிராற் பீடிக்கப்பட்டுத் துன்பமடைய அவர்களுக்கு உபகாரமாக நமது மஹாராணியார் அவர்கள் 13,000-ஆடைகள் சேகரித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

காலஞ்சென்ற நமது சக்கிரவர்த்தியவர்கள் தமது மருமகளிடத்திலிருந்த பூததயையைக் கண்டு களிகூர்ந்தாரென்றும் கூறுப.

திருமணம்.

முதலில் மேரி அம்மாளைத் தற்காலத்தில் சக்கிரவர்த்திப் பட்டத்தைப் பெற்றிருக்கிறவருடைய ஜேஷ்ட பிராதாவாகிய (Duke of Clarence) என்பவருக்கு மணம் புரிவிப்பதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 1892-ம் வருஷ ஆரம்பத்தில் அவ்விராஜ குமாரன் பரமபதமடைந்தார். சிறிது காலம் விவாகப்பேச்சுக்கள் நின்றேபோயிருந்தன. அக்காலத்தில் ஓர் கவிப்பெண் எழுதியதை இங்கு மொழிபெயர்த்தெழுதுவோம்.

"தமது பாதம் சிங்காதனத்தை ஏறுவதற்கிருந்தது. அரச குமாரரைப் பாணிக்கிரஹணம் பண்ண இருந்தீர். மகுடமும் தமது சிரஸிற் பதிய இருந்தது. நாடெங்கும் தமக்கு ஆசி கூறப்பட்டுக்கொண்டிருந்தது. இச்சமயத்தில் இடிவிழுந்தாற்போல தாம் உத்தேசித்த நாயகருக்கு யமதூதன் வந்து தம் மனத்தை வருத்தினன். மகுடமும், சிங்காதனமும், ராஜ்யமும், தாம்பத்யமும் போயின. எல்லாம் சொப்பனம் போலாயிற்றே. இது என்ன பாவம்!" மேரி மஹாராணி அவர்களுக்கு அக்காலத்திலுண்டான துக்கத்தை என்னென்று சொல்வோம்?

மேற்குறித்த கருத்தமைந்த வெண்பா

"வண்குடியின்மேரியுனை மக்கள்தாம்வாழ்த்தியதும்
பண்பமைசிங்காதனந்தான்பற்றியதும்-நண்பரைய
மைந்தனின்கைபற்றுவதும்மாமுடிநீதாங்குவதும்[ன்
முந்தைவினைநீக்கியவாமுன்"

ஜேஷ்ட பிராதாவுக்கு நிச்சயம் பண்ணப்பெற்ற மாதுசிரோமணி அவர் இறந்த

பின் இளையவரை மணம் புரிந்தனர். மேற்கு நாட்டிலுள்ள கிறிஸ்தவர் ஆசாரத்திற்கு இவ்வகைக் கலியாணம் விலக்கே அல்ல. நியாயத்திற்கும் ஒத்ததாகவே யிருக்கிறது. நமது காருண்ய சக்கிரவர்த்தினியா யிருந்த விக்டோரியா சீமாட்டியும் மேரியை அன்றி வேறொருவரும் அங்கிலேய நாட்டில் இராணிப் பட்டம் பெறுதற்குத் தக்கவரல்லரென்று அபிப்பிராயங் கொண்டிருந்தமையால் மேரி அம்மாள் ஜார்ஜ் என்னும் இளவரசருக்கே வாழ்க்கைப்பட்டுப் பட்டமஹிஷிப் பதவியையும் அடைந்திருக்கின்றனர்.

கிருஹஸ்தாச்ரம தர்மங்கள் ஸரிவர நடத்தப் பெறுவதற்கு மனையாட்டியிடத்தில் இருக்க வேண்டிய குணங்களையும் செய்கைகளையும் ஆராய்வோமாயின் அவற்றிற்குக் கணக்கில்லை. மேரிப் பெருமாட்டி யிடத்தில் அவை குடிகொண்டிருக்கின்றன வென்றால் அவ் விலக்குமியைமனைவியாகக்கொண்ட நமது சக்கிரவர்த்தியின் பாக்கியத்தை என்னென்று கூறுவது? "குடித்தனமோ துரைத்தனமோ" என்பார்களே. குடித்தனத்தில் தேர்ந்தவர்களே துரைத்தனத்துக்கும் தகுதியுள்ளவர்கள் ஆதலின் மேரி அம்மாளே அரசியாதற்குரியவர்.

நமது அரசிக்கு இப்போது ஐந்து பிள்ளைகளும் ஒரு பெண்ணுமிருக்கிறார்கள். மக்கட்பேறு பெரும்பாக்கியந்தான். அம்மக்களை நல்வழிப்படுத்தல் அதனினும் பெரிய பாக்கியம். "எனக்கேன் இத்தனை குழந்தைகள் பிறந்து என் வாணாளை வருத்துகின்றன?" என்று துக்கிக்கிற மாதாபிதாக்கள் அநேகர் உண்டு. ஞானஹீனமான மாதாபிதாக்கள்தான் இவ்வாறு கூறுவார்கள். ஸன்மார்க்கமறிந்த மாதாபிதாக்கள் மக்களைத் தெய்வத்தின் கொடைகளாகப் பாவித்துத் தம்முடைய ஒழுக்கங்களைக் கற்பித்துச் "சான்றோரென்கை ஈன்றோர்க் கழகு" என்னும் முதுமொழியைக் கைப்பற்றிக் கடவுளை நோவாமல் எப்பொழுதும் அவருடைய கருணையை நினைந்து நினைந்து நன்றி பாராட்டுவார்களன்றோ? நமது மஹாராணி அவர்களும் அத்தன்மையை உடையவர் என்பதற்குச் சாட்சி வேண்டுவதில்லை. "இன்சொலாலன்றி யிருநீர் வியனுலகம், வன்சொலாலென்று மகிழாதே" என்ற ஆன்றோர் வாக்கை மறவாமல் மக்களை இன்சொலாலேயே நன்னெறியி லொழுகச்செய்து களிக்கின்றனர். தம்மக்களில் எவராவது சற்று மூர்க்ககுணத்தைக் காட்டுவாராயின் அவரைத் தன் முதுகின் மேலிட்டு இன்சொற் சொல்லி ஒழுங்கு படுத்துவர். ஸாமானிய ஜனங்கள் தம்மக்களை முதுகில் தூக்கிக்கொண்டு போதல்போல், நமதரசியும் தூக்கிக்கொண்டு போவார். ஸாத்வியினுடைய சரீர ஸ்பர்சத்தாலேயே நல்ல ஸ்வபாவங்கள் குழந்தைகளுக்கு அந்தக்ஷணமே படிந்து விடுகின்றனபோலும்.

மேரி மஹாராணி வீட்டிற்குள்ளே எப்பொழுதும் அடைபட்டிருப்பதில்லை. காற்றுலாவுமிடத்தில் தாமும் தம் மக்களும் உலாவுவதுண்டு. மக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கைத்தொழில் பயின்றவர். அவ்வாறு தம் கையாற் செய்தபொருளை ஏழையாயிருக்கிறவருக்குக் கொடையாகத் தருகிறது வழக்கம்.

இளங்குமரர்களில்ஒருவர் உபாத்தியாயினிக்குக் கீழ்படியாமல் பிடிவாதம் பண்ணினபொழுது உபாத்தியாயினி "இளவரசரே, இத்தனை விளையாட்டுக் கருவியை வைத்துக்கொண்டு முரட்டுத்தனஞ் செய்கின்றீரே. அதோ இருக்கும் ஏழை பிள்ளைகளுக்கு ஒரு மரப்பாவை கூட இல்லையே. உமக்குரிய பதுமைகளில் இது தேவையில்லை யல்லவா? இதை அவனுக்கு நான் கொடுத்து விடட்டுமா?" என்று கேட்க இளவரசர், "எனக்கு உபயோகமில்லாததையா பிறருக்குத் தருதல் பெருமை? நான் மிகவும் விரும்பிய இந்தப் பதுமையை

அவனுக்குக்கொடுத்தல் வேண்டும்," என்பார் "நன்றாயிருந்தாலுங் கொடுப்பார்களா?" என்றபடி நடக்காத இளவரசன் பட்டத்துக்கு வருவாராயின் நாம் என்ன பெரு நன்மைகளைத் தாம் அடையமாட்டோம்?

வெகுநேரம் பாடம் படிப்பதில் குழந்தைகளை மடக்கிவைக்க மஹாராணியவர்கள் ஸம்மதிப்பதில்லை. அவ்வாறு மடக்கிவைத்தல் புத்திக்கு மந்தத்தையும் தேகத்திற்கு நோயையும் தருமென்பதாம். ஒவ்வொரு குழந்தையும் ஸ்வயநயம் பாராட்டாமலும், தன்னையடக்கி நடக்கவும் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

வேலைக்காரர்களுக்கு ஒய்வு காலங்கொடுத்து அவர்களும் ஸந்தோஷ மடைதற்கு இடங் கொடுப்பதுண்டு.

நமது மஹாராணியவர்களுக்கு ஸங்கீதஞான முண்டென்றோம். சிங்காரப் பாட்டுகள் பாடுதலேயில்லை. கடவுள் துதியாயிருக்கும் கீதங்களையே செவ்வையாயும் பக்தியாயும் பாடுவார்களாம்

நமது சக்கிரவர்த்தியும் அவர் பட்டமஹிஷியும் நீடூழிகாலம் நம்மையாண்டு வாழ்க, வாழ்க.

இச்சரித்திரத்தை நாம் எடுத்துரைக்கப் புகுந்தது பின்வரும் ஒரே காரணம் பற்றியென்க. ஆரியப்பெண்கள் இந்நாட்டில் கல்வி,ஒழுக்கம், தயா,தாக்ஷணியம் முதலிய உத்தமமான பொருள்களை யடைய முயலாமல் மௌட்டியத்தில் மூழ்கிப் பொன்னிலும் ஆடையிலும் ஆடவர் தேடும் பொருளை அழித்துச் சீர்குலைந்து புகழற்று வாணாளை வீணாக்காமல் இகபர ஸாதகமானவற்றில் புத்தியைச் செலுத்தி மேன்மையை அடையவேண்டு மென்பதே.

கே. வேங்கட்ராம அய்யர்.

நடுக்கங்கற்க நடந்தசிறுவன்

THE BOY THAT LEARNT TO SHUDDER

ஓர் தகப்பனுக்கிரண்டு பிள்ளைகள் இருந்தனர். அவர்களுள் மூத்தவன் புத்திமான். அவனுக்கு எதையுஞ் செய்யுந் திறமை யுண்டு. இளையவன் மந்தன், மடையன். கல்வியென்பது அறியாத நிரக்ஷரகுக்ஷி. அவனைக் கண்டபொழுதெல்லாம் ஜனங்கள், 'குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு' என்று சொல்வது வழக்கம்.

எதையுஞ்செய்ய மூத்தவனே வரவேண்டியது. ஆனால் அவனைத் தன் தகப்பன் மாலைவேளையிலாவது, இருட் காலத்திலாவது, ஊர்க்கு வெளியிலிருக்கும் இடுகாட்டுக்கு அருகிலுள்ள வழியிலாவது போகும்படிச் சொன்னால், "அப்பா, என் உடல் நடுங்குகிறது" என்று பயந்து சொல்வான். சாயுங்காலங்களில் எல்லாமானதும் இரவில் உண்டு படுக்கைக்குப் போகும்பொழுது வீட்டில் எல்லாருங்கலந்து கதைகள் சொல்லுங்காலத்திலேதாவது மனத்தைப் பயத்துக்குள்ளாக்கிப் பீதி உண்டாக்கக்கூடிய ஸமாசாரம் ஏதேனும் வந்தால் கூட்டமுழுதும் "உடல் நடுங்குகிறது, நிரம்ப பயமாயிருக்கிறது" என்று சொல்வார்கள். இக்காலங்களிலெல்லாம் மூலையொன்றில் பதுங்கிக்கிடக்குஞ் சிறியவன் அவர்கள் எதைப்பற்றிப் பேசுகிறார்கள் என்றாவது என்ன பேசுகிறார்கள் என்றாவது அறியாமல் திகைப்பான். "அவர்களெல்லாம் எங்களுடம்பு நடுங்குகிறது, மனங்கலங்குகிறது என்று சொல்லுகிறார்கள், அது என்னவாகவிருக்கலாம். ஒருவேளை அது எனக்குத் தெரியாத ஓர் வித்தையாய் இருக்கலாம்" என்று எண்ணுவது வழக்கம்.

இப்படி இருக்க ஓர் நாள் தகப்பன் சிறுவனை நோக்கி "நீ பெரும் மூடன். மூலையிற் பதிவாய்; கற்க அறியமாட்டாய். நீ இருப்பது எனக்

கோர் பாரமாகவிருக்கிறது. உன் தமையன் நன்றாகக் கற்று வருகிறான். உனக்குச் சொல்வதை எல்லாம் ஓர் காதால் வாங்கி மறுகாதால் விட்டு விடுகிறாய். உனக்கு எத்தனை நாளைக்கு வீணாகப் பிண்டம் படைப்பது? போதும். என் எதிரில் நிற்காதே. ஏதேனுங் கற்று உன் உணவிற்கு வழி தேடினாலன்றி என் எதிரில் வாராதே போ" என்றார்.

"எனக்கும் அப்படித்தான் அண்ணா பட்டது. நானும் ஏதேனும் கற்கவேண்டுமென்று ஆவலாயிருக்கிறேன். ஆகையால், நடுக்கங் கற்க நான் அறியவேண்டும். அது இன்னதென்றே என்னால் அறியமுடியவில்லை" என்று சிறுவன் கூறினான்.

இதைக் கேட்டுத் தமையன் பல்லெல்லாம் தெரியச் சிரித்தான். தந்தை கவலைப்பட்டு "உனக்கு நடுக்கமின்னதென்று தானே தெரியவரும். உன் ஜென்மத்தில் பிழைப்பு, உழைப்பு இவை யொன்றும் அறியமாட்டாய். ஒரு காசு உன்னால் ஸம்பாதிக்க முடியாது" என்று நெட்டுயிர்ப்புவிட்டான்.

மனமுறிந்தவனாகித் தன் மகனது ஸ்திதியைக் குறித்துத் தன் அன்பரிடமெல்லாங் கூறி வியஸனமுற்ற காலத்தி லொருவர் 'உன் மகனை அவன் வழியே நடப்பித்துப் பின் நம் வழி நடக்கச் செய்யவேண்டும்; ஆகையால் அவனுக்கு நடுக்க மின்னதென்று அறிவிக்கவேண்டும். அதற்கு அவனை என்னுடன் அனுப்பும். அவனை என் ஸ்நேகிதனாகிய மந்திரவாதியிடம் விட்டு நடுக்கமின்னதென்றறியச் செய்கிறேன்" என்றான். அதைக்கேட்டு மிக்க ஸந்தோஷத்தோடு எவ்வாறேனும் அவன் விருத்தி அடையவேண்டும் என்று தன்மகனை அவனிடம் ஒப்புவித்தான்.

மந்திரவாதியிடம் அச்சிறுவன் ஒப்புவிக்கப்படவே நடுராத்திரியில் மயானத்திற்குச் சென்று சில மயான வஸ்துக்களைக் கொண்டுவரும்படியாகச் சொன்னான். தனியாகவே சென்று கேட்டவை எல்லாம் கொஞ்சமேனும் பயமில்லாமல் எடுத்து வந்தான். வந்ததும் மந்திரவாதி 'நடுக்க மின்னதென்று தெரிந்ததா?" என்றான். மிக வியஸனத்தோடு சிறுவன் "தெரியவில்லையே" என்றான்.

"ஆனால் இன்று நீ உணர்வாய். மயானத்தில் பிணமெரியுங் காலத்தில் பக்கத்தில் இருந்து ஜாக்கிரதையாகக் கைகால்களை வீசி எறியும் பிணத்தின் மண்டை ஓட்டை எடுத்து வருவாய். ஆனால் இடையே அங்குச் சில பேய்கள் வந்து பயத்தை யுண்டாக்கும். அதைக்கண்டு பயப்படாமல் வா. அப்பொழுது நடுக்கம் இன்னதென்று அறிவாய்" என்று மந்திரவாதி கூறினான்.

சிறுவன் அவ்விராத்திரி மிக உத்ஸாகத்தோடு, எரியும் பிணத்தினருகு உட்கார்ந்து, புலால் நாற்றம் வீசும் புகையின் திரளை ஒதுக்கிக்கொண்டு, கைகால்களை யெல்லாம் எரியின் பரவலால் வீசி எறிதலை விசித்திரமாகப் பார்த்துக்கொண்டிருந்தான். இடையே எதிரில் ஓர் உருவம் மயிர் அங்கி போர்த்து மஹா விகாரமாகி வெண் கோரப்பற்களைக் காட்டிக் குட்டைக்கால்களால் அசைந்து ஒதுங்கி யொதுங்கி அவனருகு வந்தது.

சிறுவன் அதை நோக்கி "நீ யார்? உனக்கிங்கென்ன வேலை. என் வேலையைக் கெடுக்க நீ யேன் இங்கு வந்தாய்" என்று கேட்டான் பதில் ஒன்றுமில்லை. மறுபடியும் "நீயார்? ஏன் இங்குவந்தாய். பதில் சொல்" என்றான். அப்பொழுதும் பதில் ஒன்றும் இல்லை. மற்றுமொருமுறை அவ்வாறே கேட்டான். அப்பொழுதும் பதிலில்லை. மிகக் கோபத்தோடு அச்சிறுவன் "பதிலும் சொல்லுவதில்லை. வாயும் திறப்பதில்லை. உனக்கென்ன இங்கு வேலை. ஓடிப்போ. இல்லாவிட்டால் உன் மண்டையை உடைத்து அம்மண்டையை எடுத்துக்கொண்டு போவேன், மந்திரவாதிக்குக் காட்ட" வென்று கூறிக்கொண்டெழுந்து

அப்பேயை அடிக்க எழும்பி, இச்சிறுவனை வெருட்ட எண்ணி இவ்வடிவங்கொண்டு வந்த மந்திரவாதியை மோதிக் கீழே தள்ளிவிட்டு மண்டை ஓட்டை எடுத்துக்கொண்டு வீடு சேர்ந்தான்.

பொழுது விடிந்ததும் மந்திரவாதியின் மனைவி கணவனைக் காணாது "இன்னும் என் கணவன் வீட்டிற்கு வரவில்லையே. யாது காரணமோ அறியேன். நீ அவரை எங்கேயேனுங் கண்டதுண்டோ" என்று சிறுவனைக் கேட்டாள். அதற்கவன் "அவரை நான் இராத்திரிமுதல் காணவில்லை" என்றான். "நேற்று இராத்திரி சுடலைக்குப் போவேன் என்று போனார்" என்றாள். "அப்படியாகில் இரவில் ஒரு உருவம் வந்தது. அது அவர்தானோ என்னமோ தெரியாது. அந்நள்ளிருளில் வந்ததால் திருடனாயிருக்கலாமென்று எண்ணி பல முறை யாரென்று கேட்டேன். பதில் சொல்லாமையால் நான் மோதி அவரை அங்குக் கீழேதள்ளினேன். ஒருவேளை அவராயிருக்கலாமோ என்னமோ பாரும்: அவராயிருந்தால் நான் வேண்டுமென்று செய்யவில்லை. என்னை மன்னிக்கவேண்டும்" என்று மிக்க வணக்கத்தோடு சொன்னான்.

மிக்க ஆத்திரத்தோடு அவளங்குச் சென்று கணவன் காலொடிந்திருப்பதைக் கண்டு கவலையுற்று சிறுவனது தந்தையிடஞ் சென்று "இந்த அநியாயமுண்டா! உலகத்திற் கொக்குமா! காலையா ஒடித்து விடுவது. இதுவும் என் தலைவிதியா! உன் மகன் செய்த அநீதியைப் பாரும்! இது அடுக்குமா! இப்பாழா போவானால் வந்ததைப் பாரும். என் கோலமிது"வென்று அழுதாள். இதைக் கேட்டதும் "அப்பா! உன்னால் எனக்கு வந்தபெயர் போதுமடா! என்னெதிரில் நில்லாதே. இவ்வைம்பது ரூபாயைக் கொண்டு நீ எங்கேனும் தொலைந்து விடு. என் எதிரில் நிற்கவேண்டாம். என்னை உன் தகப்பனென்று எங்கும் சொல்ல வேண்டாம். உன்னை மகன் என்று சொல்வதே எனக்கு மானக்கேடாய் இருக்கிறது. என்று மிகக் கோபத்துடன் அச்சிறுவனைக் கழுத்தைப்பிடித்து நெட்டித்தள்ளினான்.

"அண்ணா கொஞ்சம் பொறுத்துக்கொள்ளும். இதோ நான் போய் விடுகிறேன். ஆனாலும் நான் நீங்கள் எண்ணிய விதம் துஷ்டத்தனம் செய்தவனல்ல, நான் நிரபராதி. நான் அடித்தபொழுது அவரின்னாரென்றே தெரியாது. யாரோ துஷ்டன் இராத்திரிவேளையில் ஸஞ்சாரஞ் செய்கிறானென்று அடித்தேன். அவர் வேஷமும் அவரை அறியும்படியாக இருக்கவில்லை. நான் மூன்றுமுறை நீ யாரென்று கேட்டேன்; பதிலே! இல்லை" என்று சிறுவன் கூறினான்.

"சீ! போ! உன்னால் எனக்கெப்பொழுதும் தொந்தரையே தவிர மற்றொன்றும் இல்லை. இவ்வாசலில் உன் நிழல்கூட வீழவிடவேண்டாம். இந்தக்ஷணமே ஓடிவிடு" என்று உரத்து தகப்பன் கூவினான்.

"ஸரி நான் போகிறேன். கோபம் வேண்டாம். நான் நடுக்க மின்னதென்று கற்கவேண்டும். அதன் மூலமாகவாவது ஸம்பாதிக்க வழிதேடுவேன்." என்று சொல்லி ஊரைவிட்டு 50-ரூபாயை இடுப்பில் செருகிக்கொண்டு "எப்பொழுது நடுக்கமின்னதென்றறிவேன், நடுக்கமின்னதென்று எப்பொழுது அறிவேன்" என்று உரத்துச் சொல்லிக்கொண்டே வழிநடந்தான்.

வழியில் இவன் செயலைக்கண்ட ஓர் மனிதன் 'உன் மனத்தில் என்ன குறை' என்றான். 'ஒன்றுமில்லை. நடுக்க மின்னதென்று என்னால் அறிய முடியவில்லை. அதை இன்னதென்று கற்கவேண்டுமென்பதுதான் குறை' என்று சொன்னான்.

இதைக்கேட்ட அம்மனிதன் வழியில் இருந்த கழுமரத் தருகு ஓர் மரத்தின் கிளையில் ஏழு திருடர்களைத் தூக்கிட்டு இருப்பதைக் காட்டி 'இங்கு நீ இன்று தங்கிஇருந்தால் நடுக்க மின்னதென் றறிவாய்' என்றான். சிறுவனும் ஸந்தோஷத்துடன் அன்றிரவு அங்குத் தங்குவதாகவும் தான் நடுக்கமின்னதென்று கற்றால் தன்னிடமுள்ள ஐம்பது ரூபாய்களை அவனுக் களிப்பதாக வாக்களித்து அவனை அனுப்பினான். இரவு மிகவும் குளிராய் இருந்ததால் குளிர் காய அங்கிருந்த கட்டைகளை எல்லாம் கூட்டி எரி ஒன்றுண்டாக்கி ஸந்தோஷமாக விருந்தான். ஆனால் காற்று நாலாபக்கங்களினால் வீசியதால் மரத்திலிருந்து தொங்கிக் கொண்டிருக்கும் பிணங்கள் ஒன்றோடொன்று உராய்ந்து அசைந்துக் கொண்டிருந்தன. இதைக்கண்ட அச்சிறுவன் மிக்க அன்போடு "சீ முட்டாள்களே! ஏன் வீணாகச் சண்டையிடுகிறீர்கள். உங்களுக்குக் குளிராயிருந்தால் என்னோடு குளிர்காயும்" என்று சொல்லிக் கொண்டவைகளை மரத்தினின்று இறக்கி நெருப்பருகு வீழ்த்தி ஸுகமாகக் குளிர் காய்ந்துக்கொண்டிருந்தான்.

ஆனால் காற்று மிக வீசியதால் தீ நாலா பக்கங்களிலும் படர ஆரம்பித்தது. இதைக் கண்ட சிறுவன் அப்பிணங்களை நோக்கி 'மூடர்களே! ஜாக்கிரதையாக இருங்கள். நெருப்பு உடம்பைக் கொளுத்திவிடும்' என்று சொல்ல அவை அசைவற்று இருந்தன. அன்றியும் அவற்றிடத்து துணிகளிலும் நெருப்புப் பற்றிக்கொண்டது. இதைக் கண்ட சிறுவன் "சீ! உங்களுக்கிங்கிருக்கத் தகுதி அல்ல. முன்னிருந்த இடந்தான் ஸரி" என்றவைகளை மறுபடியும் தூக்கிவிட்டான். பின்பு தூக்கம் கண்ணை ஒடுக்கிக்கொண்டு வந்ததால் மெய்ம் மறந்து தூங்கினான்.

காலையானதும் அம்மனிதன் வந்து "நடுக்கமின்னதென்று அறிந்திருப்பாயென்று எண்ணுகிறேன்" என்றான். "அது-தான்-இல்லை" என்று சிறுவன் கூறினான். பின் அம்மனிதன் தன்வழியே போனான். சிறுவனும் வழி நடந்துக் கொண்டிருந்தான்; இடையே ஓர் வண்டிக் காரனிவனுடைய கூச்சலைக் கேட்டு 'நீயார்' என்றான். 'எனக்குத் தெரியாது' என்றான். 'உன் பெயர் என்ன?' 'அதுவும் தெரியாது.' 'உன் தகப்பன் பெயராவதென்ன?' 'அது சொல்ல முடியாது.' 'உன் ஊரெது?' 'அதுவும் சொல்லமுடியாது.' 'நீ மொணமொணப்பது என்ன' என்றான். 'ஒன்றும் இல்லை. எனக்கு நடுக்கம் இன்னதென்று தெரியவில்லை. அது தெரியவில்லையே என்று மொணமொணக்கின்றேன்" என்றான். "நிரம்ப நன்றாயிருக்கிறது உன் கதை. ஸரி. வாயை மூடு. என் வண்டியில் ஏறிக் கொள். உனக்குத் தங்கத்தகுந்த இடத்தில் விட்டுவிட்டுப்போவேன்" என்றான். ஸரியென்றவ்வண்டியி லேறிக்கொண்டு ஓர் ஸத்திரத்தை அடைந்தான்.

அவ்விடத்திலும் நடுக்கமென்பது இன்னதென்று என்று அறிவேன் எனவே த்யானஞ் செய்துகொண்டிருந்தான். இதைக் கேள்வியுற்று, அருகிலறையுள் இருந்த அந்த ஸத்திரத்தின் தலைவன் "உனக்கென்ன பைத்தியமா" என்றான். "இல்லை எனக்கு நடுக்கமென்பது இன்னது என்று தெரியவில்லை. அதை நான் அறிய வேண்டுமென்று ஆவலாய் இருக்கிறேன்" என்றான். அதற்கு அந்த ஸத்திரக்காரன் உனக்கு நிஸ்சயமாக அவ்வெண்ணம் இருக்குமானால் இவ்வூருக்கருகாமையில் மாந்திரிகத்தால் வயப்படுத்தப்பட்ட ஓர் அரண்மனை இருக்கிறது. அதில் நித்திரை செய்தால் நீ நடுக்கமின்னதென்று அறிவாய்" என்று சொன்னான். அவன் மனைவி "உமக்கென்ன ஆலோசனை இல்லை போலிருக்கிறது. பாழும் வீட்டிற்கு இவ்வழகிய பாலனையா அனுப்புவது" என்றான். சிறுவன் அஞ்சாது "அது எதுவாயினும் பயமில்லை. எமனேதான் வரட்டு

மே. அவனையும் நான் பார்த்துக் கொள்வேன். நான் கற்றுக்கொள்ளத்தானே வந்திருக்கிறேன்" என்றான். "ஆனால் ஸரி அவ்விடத்து நீ மூன்று இராத்திரி படுத்துத் தூங்கி மீண்டு வந்தால் இவ்வூர் அரசன் மகளை மணம் செய்துக் கொள்ளலாம்" என்றான். சிறுவனும், "ஆனால் நான் அரசனை நேரில் காண்பேன்" என்று சொல்லிவிட்டு நாளை நடுக்கமின்னதென்று அறியலாகும் என்னுமாசையால் நித்திரையின்றி இரவுமுழுதுங் காலங்கழிக்க வாரம்பித்தான்.

"நடுக்கமுணரா-உடற்கொண்-டென்-பயன்" என்னும் பதத்தைக் கரடுமுரடாக நாதநாமக்கிரியையில் பாட வாரம்பித்தான். அது மயங்கி பிலஹரியிற் பாய்ந்து ஸாவேரியில் முடிந்தது. இருளும் முடிந்தது பொழுதும் விடிந்தது. சிறுவன் உடனே கைகால் கழுவிக்கொண்டு அரசனிடம்போய் "நான் இவ்வூருக்கு வெளியிலிருக்கும் அரண்மனையில் படுத்து நித்திரைசெய்ய விரும்புகிறேன். தயவு செய்யவேண்டும்" என்றான். அரசனும் சிறுவனது அழகைக்கண்டு மனமிசைந்து "நீ போகலாம். உனக்கேதேனும் பொருள் வேண்டுமானால் கேள்; அவை மூன்று பொருள் தான் கொடுக்கப்படும். அவை ஆனால் உயிரில்லாதவாயிருக்கவேண்டும்" என்றான். "உடனே சிறுவன் மட்டமாகிய கைவாள் கூடிய ஆயுதம் நிறைந்த தச்சனது ஆயுதப் பெட்டி, படுக்கும் நாற்காற் பலகை ஒன்று, நெருப்பு ஆகிய இவை மூன்றும் கொடுத்தால் போதும்" என்று கேட்டு அவைகளைப் பெற்றுக்கொண்டு அந்தப் பாழ் அரண்மனை வாயிலை அடைந்தான்.

சாயுங்காலம் குளிர்ச்சி அதிகமாக இருந்தது. சிறுவனும் குளிர் தாங்காது பெரும் அனலில் குளிர் காய்ந்துக் கொண்டிருந்தான். இரவு நடு ஜாமத்தில் அனலை ஊதிக்கொண்டிருக்கும்போது ஓர் மூலையில் "மி—பாவ், ம்யூ, மி—யாவ், என்ன குளிர்கிறது" என்னுமொரு சப்தம் அவன் காதிற் பட்டது. "சீ மடையர்களே! குளிராயிருந்தால் நெருப்பண்டை உட்கார்ந்து குளிர் காயுங்கள்" என்றான். என்றதும் இருண்ட இரண்டு றுகம் பூனைகள் அங்கு அவன் இருபக்கத்திலும் உட்கார்ந்து குளிர்காய ஆரம்பித்தன. பின் அவை அவனை நோக்கி "நேசா உனக்கு எங்களோடு சதுரங்கமாட விருப்பமுண்டா" என்றன.

"உண்டு. ஆனால் உமது பாதத்தின் நகங்களைக் காட்டின பிந்தி தான் பதில்சொல்வேன்" என்றான். அவைகளும் பாதங்களைக் காட்ட "ஹோ! அப்பாடா! இவ்வளவு வளர்ந்திருக்கின்றனவே. அவைகளை உமக்காக நான் செதுக்கிவிடுகிறேன். அசையாது காட்டுங்கள். பின் நான் உங்களுடன் ஆடுவேன்" என்று சிறுவன் சொன்னான். அவைகளும் காட்ட அவற்றின் பாதங்களைத் தச்சனது பலகையில் பதித்து ஆணி அடித்து அப்பூனைகளை அசைவில்லாமலிருக்கும்படிச் செய்தான். பின் சிறுவாளை எடுத்து அவற்றைக்கொன்று அருகிலிருந்த நீர் ஓடையில் சுழற்றி எறிந்து, 'உம்முடன் நான் ஆட்ட மிவ்வாறுதான் ஆடுவது' என்று உரத்துக் கூவினான்.

அவ்வாறு செய்ததும் கூட்டம் கூட்டமாய்ப் பூனைகளும் நாய்களும் கூவிக்கொண்டும் குரைத்துக்கொண்டு சிறுவனை எதிர்க்க வந்தன. அவன் அனலை எல்லாம் கிளரி அவனைத் தொந்தரை செய்யவும் ஆரம்பித்தன. 'பௌ-வௌ-வௌ—பௌ—வௌ' என்னும் சப்தமும், 'ம்யூஉ—மிப்யாஅவ்—மிப்யாஅவ்' என்னும் இரைச்சலும் அவனைக் கொஞ்சநேரம் பிரமையுள் ஆழ்த்தியதாயினும், பொறுமை அவனைச் சும்மா இருக்கும்படி செய்தது. அவனும் பொறுக்க முடியாது போகவே மிகுந்த ஆத்ரத்தோடு எதிர்த்தவைகளை எல்லாம் குத்தியும் வெட்டியும் கொன்று எறிய செத்தவை தவிர மற்றையவை எல்லாம் பயந்தோடின. மரித்தவைகளை அருகிலிருந்த ஓடையிலெறிந்தான்.

பின் நெடுநேரம் விழித்திருந்ததால் கண் மூடிக்கொண்டு வந்து, அவிந்த அனலைத் தூண்டி மூட்டிவிட்டு, அதனருகு உட்கார அவன் இமைவிழிக்க முடியாமையால் தூங்க வேண்டுமென்ற எண்ணமுண்டாகியது. சுற்றுமுற்றும் திரும்பிப் பார்க்க அடுத்த மூலையில் ஓர் பெருங் கட்டிலில் படுக்கை விரித்திருந்ததை கண்டான். மிக்க ஆநந்தத்துடன் அவன் அதில் படுத்ததும் அக்கட்டில் நகர ஆரம்பித்தது. அதிக வேகமாகவும் நகர ஆரம்பித்தது. வீடுமுழுதும் சுற்ற ஆரம்பித்தது. சிறுவனும் மஹா குதூஹலத்தோடு 'அப்படித்தான் ஓடு; நன்றாக ஓடு' என்று கூவிக்கொண்டே இருந்தான். 'சரசர,' 'தடதட' 'படபட' 'கடுபுடு' என்னும் சப்தங்களோடு அக்கட்டில் வீடு, மெத்தை, படிக்கட்டு எங்கும் சுற்ற ஆரம்பித்தது. கடைசியாக ஓர் மூலையில் குப்புற வீழ்ந்து, ஓர் மலைபோலிருந்தது. படுக்கை முதலியவைகளை எல்லாம் உதரிக்கொண்டு மேற்கிளம்பி "யார் வேண்டுமானாலும் இப்படுக்கையில் ஸவாரி செய்யட்டும்" என்று சொல்லிக்கொண்டு அனலருகு வந்து படுத்து அயர்ந்து நித்திரைபோனான்.

காலையானதும் அரசன் அங்குவந்து சிறுவன் கால் நீண்டு விழுந்திருப்பதைப் பார்த்து "அநியாயமாய் சிறுவன் பிசாசுகளால் கொலையுண்டான்" என்று நெட்டுயிர்ப்பு விட்டான். அதைக்கேட்ட சிறுவன் "அப்படி ஒன்றுமில்லை. நாங்கள் ஸுகமாகத்தான் இருக்கிறோம்" என்றான். அரசன் "ஸரி. ஒன்றாகியது. இன்னமிரண்டு நாளிருக்கின்றது" என்றான். "நேற்று கடந்ததுபோலவே அடுத்த இரண்டு நாளும் கடந்து விடும் ஆயினும் இன்னமும் நடுக்க மின்னதென்று அறிய முடியவில்லை" என்று சிறுவனும் சொல்ல அரசன் தன்னூர்ப் புகுந்தான்.

மறுநாள் இரவு மெல்லென வந்தது. சுற்றுமுற்றும் காற்றுமசையாது ஸ்தம்பித்து நின்றது. மரத்திலிருந்த இலையும் ஆடவில்லை, அருகிலிருந்த ஓடையிலிருந்து விழும் நீர்த்தாரைகள் ஜர்ஜல சப்தத்துடன் வந்தாலும் அந்நள்ளிரவில் பயத்தையே யூட்டும். ஊர்க்கு வெளியிலெங்கும் இருள். பயம் கொண்டவன் மனம்போல் வீடும் அவ்விரவில் பிரமையிலேயே ஆழ்ந்திருந்தது. அச்சம், பெரும்பயம், மனக்குழப்பம் இவையெல்லாம் ஒருவனைக் கைக்குள் கொள்ளும்படியான வேளை. அவ்வேளை நமது சிறுவனும் அனலை மூட்டி அதனருகு முக்காடிட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான். இதற்குள் இரண்டு மூன்றல்லது நான்கு ஜாமப் பொழுதாயிருக்கலாம். அப்பொழுது சாளரத்தின் வழியாக ஓர் முண்டமாகிய மனிதனது அறையுடல் வீழ்ந்தது. "ஹெஹஹே! பலே! அது எப்படி முடியும்" என்று கூவினான். உடனே மறுபாதியுடல் வீழ்ந்தது. பின் இரண்டு பாகங்களும் கூடி ஓர் மனிதவுருவங்கொண்டது. அது பார்ப்பதற்கு மஹா கோரமாயிருந்தது. அச்சிறுமனிதன் பலகையின்மேல் படுத்தான். சிறுவனும் அவனைப்பார்த்து "அது முடியாது அது முடியாது! பலகை என்னுடையது" என்று கூவிக்கொண்டு தன்னை எதிர்த்த மனிதனைக் கீழ்த்தள்ளிவிட்டு அதன்மேல் உட்கார்ந்தான்.

இதற்குள் இன்னமநேகம் மனிதர்கள் அவனைப் போலவே வந்தார்கள். இவர்கள் எல்லாம் கைகளில் மண்டையோடும் எலும்பும் கொண்டு வந்து மண்டையோட்டை பந்தாட ஆரம்பித்தனர். சிறுவனும் பொழுது போகாமையால் ஆடவேண்டும் என்றாசைகொண்டு "நானும் ஆடலாமோ" என்றான். உடனே 'பணம் தந்தால் ஆடலாம்' என்றார்கள். சிறுவனும் அம்மண்டையோட்டை பந்தய வாட்டமாகப் பந்தாடிக் கொண்டிருந்து தான் கொண்டு வந்த செல்வத்திற் பாதி தொலைத்தான். நடுஜாமம் ஆனதும் யாரையும் கண்ணெதிரில் காணமுடி

யாமையால் பலகைமேல் படுத்து அயர்ந்து நித்திரை செய்தான்.

மூன்றாவது இரவில் ஓர் பெருங்கிழவன் அங்கு வந்து நின்றான். அவனுடைய நீண்ட தாடியும், சடைத்த மயிரும், எலும்பைப் போன்ற கைகால்களும், உள்ளடங்கிய கண்ணும், வளைந்த மூக்கும், வெளிவந்த பல்லும், சிரிப்புக்குட்பட்ட குதூஹலத்தையும் பறக்கச் செய்யும். அவன் வந்ததும் சிறுவனை நோக்கி "யாரடா நீ. இங்கெப்படி வந்தாய். ஜாக்கிரதை. இங்கு ஏன் வரவேண்டும்" என்று உரத்துக் கூவினான். கொஞ்சமும் அஞ்சாது "நடுக்கம் இன்னதென்று கற்க இங்கு வந்தேன்" என்றான். இதோ "உன்னைக் கொன்று கசக்கி நடுக்கம் இப்படி இருக்கும் என்றுனக்குக் கற்பிக்கிறேன். உன்னைச் சும்மா விடேன். என்னோடுவா. உன்பாடு இனித் தெரியும்" என்று சொல்லிக்கொண்டு அச்சிறுவன் கையைச் சரசரவென் றிழுத்தான். சிறுவன் கோபத்தோடு "ஏன் வீண் அகந்தை. அஹங்காரம் வேண்டாம். அதிகப் பேச்சு வேண்டாம். உம்முடைய வீண் வியவஹாரங்கள் எல்லாம் எனக்கென்ன செய்யும். யாரிடத்து நீர் பேசுகிறீர் என்று ஆலோசித்துப் பேசும். மிதமிஞ்சி பேசவேண்டாம். எல்லார்க்கும் ஒவ்வொன்றெளிது. தாடியும் மீசையும் நரைகொண்டு பூமியிற் றவழ இருக்கும்பொழுதும் உனக்கு அகந்தை என்பது போகாமலிருக்கிறது. சீ! உன் ஜன்மம் எதற்கு உதவும். பயனற்றதாயன்றோ—" என்று கடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது அக்கிழவன் மிகச் சிடுசிடுத்து "அவ்வளவோடு பேச்சை நிறுத்து; போதும். நீ என்னை ஜயித்து விட்டால் உன்னை விடுவதேயன்றிச் சும்மா விடேன்" என்று கூவிக்கொண்டு சிறுவனை, மனத்திருளையும் இருளடிக்கும்படியான அந்தகாரக் கொடுவழியின் வாயிலாக ஓர் கொல்லன் உலைக்களத்திற்கு வந்து சம்மட்டியைக் கொண்டு பட்டடையையும் பூமியில் பாயும்படி மோதினான். அதைக்கண்டு சிறுவன் "இவ்வளவுதானா? நான் இதைக் காட்டிலும் விசித்திரமாகச் செய்யக்கூடியவன். உன்னையும் ப்ரமிக்கச் செய்யும் திறமை என்னிடத்துள்ளது" என்று சொல்லிக்கொண்டு அவன் கையிலிருந்த சம்மட்டியைப் பிடுங்கிக் கொண்டு அப்பட்டடை விரிந்து அப்பிளவையின் இடுக்கில் கிழவனுடைய தாடியானது புதையும்படி மோதினான். கிழவன் மேல் நிமிரமுடியாது கவிழ்ந்த தலை நிமிராது வெருண்டிருந்தான். "இனி சாவடைவது உன் முறை" என்று கூவிக்கொண்டு கிழவனது முதுகெலும்பு முறிய அருகிலிருந்த ஓர் உலக்கையால் சாடினான். கிழவன் கெஞ்சினான். அப்பொழுதுஞ் சாடினான். "அப்போதும் நீ நல்லவன். உனக்கு வேண்டிய பொருளும் ஸௌபாக்கியமும் தருவேன். என்னை விட்டு விடு. நான் சொல்வது நிஜம்" என்று மிக வணக்கமாகக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

பின்னச்சிறுவன் அச்சம்மட்டியை அழுந்திய விர்விலிருந்தெடுத்து தாடியை வெளியேவிட்டான். கிழவனும் சிறுவனை அரண்மனை முற்றும் அழைத்துச் சென்று ஓர் அறையுள் அவனை அழைத்துப்போய் "இதோ எதிரில் உள்ளது மூன்றுபைகள். ஒவ்வொன்றும் பொன்னுடையது. ஒன்றை ஏழைகளுக்குக் கொடு. மற்றொன்று அரசனைச் சேர்ந்தது. மூன்றாவதுன்னுடையதே" என்று சொல்லி விட்டு மறைந்தான்.

காலையானதும் அரசன் வந்து சிறுவனை நோக்கி மஹாஸந்தோஷங் கொண்டு அவனை மார் போடணைந்து "இம்மனை மந்திரக்கட்டிலிருந்து விடுபட்டது. இனி என்னுடைய குழந்தையை மணந்து இந்நாட்டை ஸுகமாக ஆள்வாய்" என்றான். "அதற்கொன்றும் தடையில்லை,

என்தாய் தந்தையர்களை அழைத்து அவர் நோக்காணும்படி ஓர்மாத காலத்திற்குள் மணந்து கொள்வேன்" என்றார். அரசனு மதற்கு ஒப்பினான்.

இதற்குள் சிறுவனது தகப்பனாரை யாரோ ஒரு வேதியன் தோன்றி இவ்வண்டியிலேறும் என்றான். அதில் அவன், அவனுடைய மனைவி, மூத்தமகன் மூவரும் ஒன்றும் சொல்லாது திப்பிரமைகொண்டேறினார்கள். வழியில்தமது சிறுவனுடைய பிரதாபமும் வீரமும் கொடி கட்டிப் பறப்பதைக்கேட்டு ப்ரமைப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது ஓர் பெரிய பூந் தோட்டத்தில் அவர்கள் கொண்டு சேர்க்கப் பட்டனர். அங்கு அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் தனி விடுதியில் விடப்பட்டனர். அங்கு உடை எல்லாம் மாற்றப்பட்டுப் பார்ப்பதற்கு மஹாஉன்னதபதவியிலிருப்பவர்போல் செய்யப்பட்டனர், பின் சில நாளானதும் மூவரும் தனி வண்டியில் குதூகலத்தோடு கூடிய நகரத்தில் ஓர் பெரிய மண்டபத்திற்கு மஹா மரியாதையோடு அழைத்துக்கொண்டு போகப் பட்டனர். அதே ஸமயத்தில் அங்கு மற்றோர் இராஜவண்டியில் மந்திரவாதியும் அவன் மனைவியும் ப்ரமையோடு வந்திறங்கினர்.

இவர்களையெல்லாம் சிறுவன் இன்னாரின்னாரென்று சொல்லிச் சபையில் அவரது பேருதவியால்தான் இந்நிலைமைக்கு வந்ததாகவும் கூறித் தன் தமையன் மணஞ்செய்யாதிருப்பதால் தான் மணஞ்செய்துக்கொள்வதும் தகுதியல்ல என்றான். என்றதும் அரசன் தனது தம்பியின் குமாரத்தியை அவனுக்களித்துத் தன்மகளைச் சிறுவனுக்களித்து ராஜ்ய பட்டாபிஷேகத்தையும் சிறுவனுக்குச் செய்து ஆனந்தமடைந்தான்.

மந்திரவாதிக்குக் கால் கூடி விட்டது. அவர்க்கு ஓர் நாடளிக்கப்பட்டது. சிறுவன் தன் தாய்தந்தை தமையனோடு ராஜாங்கத்தை மஹா ஸந்தோஷத்தோடும் ஆண்டு வந்தானாயினும் நடுக்கமின்னதென்று தெரியவில்லையே யென்று கவலையுற்றிருந்தான்.

இப்படி இருக்குநாளில் சிறுவன் மனைவி "ஏனோ இவர் மனம் இன்னம் நடுக்கம் தெரியவில்லை என்று அலைகின்றது" என்று வியஸனமுற்றிருந்தாள். பின் தன்கணவனோடு ஒரு நாள் இனிது வீற்றிருக்கும்போது அவன் அயர்ந்து நித்திரை செய்ய நாலு பக்கங்களிலும் சாமரை வீசுகையில் பக்கத்திலிருந்த தீர்த்தபாத்திரம் தவறி கீழே வீழ்ந்ததில் நீர்த்திவலைகள் இவன்மேல் ஜில்லென வீழ்தலும் "ஹா ஹா ஹா என்றலறி என் உடம்பு நடுங்குகிறது" என்றுதனக்கும் தெரியாது குழறினான். அருகிலிருந்த நாயகி கண்விழித்துக் கொண்டு நீங்கள் நடுக்கம் தெரியாதென்றீர்களே கற்றுக் கொண்டாய் விட்டதோ என்றாள். ஹா அப்படிக் குளிர்கிறது, இன்றுதான் நடுக்கம் இன்னதென்றறிந்தேன் என்று சொல்லிக்கொண்டே ஸுகமாகத் தூங்கினான்.

பின்அவன் பல நாள் ராஜ்யத்தை ஆண்டு ஸுகமாகவிருந்தான்.

நீ கற்றவித்தையைச் சங்கத்திற் காட்டாதே.—சில விசேஷ சந்தர்ப்பங்களில் மாத்திரமன்றி வேறு சமயங்களில் நீ கற்றவித்தையை ஒருபொழுதும் காட்டிக்கொள்ளாதே. அதைவித்வான்களுக்கென்று எப்பொழுதும் அடக்கி வைத்துக்கொள். அவர்கள்கூட உன்னிடத்திலிருந்து அதைத் தாங்களே முயன்று அறிந்துகொள்ள வேண்டுமேயல்லாது நீ அவர்களுக்குப் பலவந்தமாய்க் காட்டாதே. இப்படிச் செய்யும்பக்ஷத்தில் நீ மரியாதை பெறுவதுடன் உனக்கு எவ்வளவு தெரியுமோ அதைவிட நீ அதிகமாய் அறிந்திருப்பதாக ஜனங்கள் எண்ணிக்கொள்வார்கள். ஒரு சங்கத்தின் மத்தியில் உட்காரும் பொழுது அந்தச் சங்கத்தைவிட உனக்கு அதிகமாய்த் தெரிந்திருப்பதாக நீ எண்ணவே எண்ணாதே. அப்படி நீ எண்ணிக்கொண்டு உன் வித்தையை வெளியில் காட்ட ஆரம்பித்தால், உன்னை நோக்கி ஜனங்கள் பல கேள்விகள் கேட்பார்கள். அவைகளுக்குத் தகுந்த மறுமொழிகள் சொல்ல ஒருக்கால் உன்னால் முடியாமற்போனால், "சீ, இவன் இவ்வளவுதானா" என்று எல்லாரும் உன்னை இகழ்ச்சியாய் எண்ணிவிடுவார்கள். நம்மிடத்தில் உண்மையான சரக்கு இருக்குமாகில் அதை எப்பொழுதானாலும் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். எவனிடத்தில் சரியான சரக்கு இல்லையோ அவன் தனக்குத் தெரிந்த கொஞ்சத்தை வெகுவாய்ப் பாடாடோபத்துடன் வெளியில் காட்டிக் கடைசியாய் அவமானப்படுகின்றவனாவான்.

சட்டதிட்டங்களை மீறி நடக்கலாகாது.

THE LAW SHOULD NOT BE BROKEN

ஏன்? என்றைக்காவது ஒருநாள் அகப்பட்டுக் கொள்ளவே வேண்டும் என்பது திண்ணம். அநியாயம் எப்பொழுதும் செய்துகொண்டே வந்து வாழ்ந்தவர்களை இதுவரையில் நாம் கண்டதில்லை. இராஜாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் சட்டங்களைப்பற்றி மட்டும் நாமிங்குச் சொல்லப் புகவில்லை. எல்லாவிதச் சட்டதிட்டங்களையும் பற்றிச் சொல்லுகின்றோம். சூரியன் காலை உதித்து மாலை அஸ்தமிப்பதுபோல சில சட்டதிட்டங்கள் எப்பொழுதும் இயல்பாகவே நடக்கும்படி ஈசுவரனால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வண்ணம் ஈசுவரனால் அமைக்கப்பட்டிருக்கும் திட்டங்களில் ஒரு மயிரிழையேனும் வழுவு என்பது இருக்காது. இம்மாதிரிதான் நாம் இவ்வளவுநேரம் தூங்கவேண்டும், இவ்வளவு பிரமாணம் சரீரத்தைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டும், என்ற பல திட்டங்களும். இவைகள் எல்லாம் இயற்கையான திட்டங்கள். ஒரு பொழுதும் நாமிவைகளுக்கு விரோதமாய் நடக்கவே முடியாது. அவ்வாறு விரோதமாய் நடந்துவாழ்ந்தவன் ஒருவனுமில்லை. முதல்முதல் தூக்கம் விழிப்பதால் ஒன்றுமில்லைபோல நமக்குத்தோன்றும்; கடைசியாய் நாம் இவ்வழுவால் படாத அவஸ்தைப் படவேண்டும். என்ன பட்டும் தேகத்துக்கும் மனத்துக்கும் சுகமேயில்லாமல் வியாதிக்காரனாய், கைப்பொருளை வைத்தியம் செய்துகொள்ளுவதில் இழக்கலாகும்.

இராஜாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் சட்டங்களை விட்டு நாம் வழுவி நடப்பதாலும் இவ்வாறுதான் நமக்குத்துக்கம் விளையும். திருடப் புத்திசொல்லிக்கொடுத்த பாட்டியை ஒரு இளைஞன் நம்பி அவ்வாறு திருட்டு வித்தையில் தேறிப் "பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்" என்ற சித்தாந்தப்படி அகப்பட்டுக்கொண்டு இராஜாங்கத்தாரால் சிறைச்சாலைக்கு அழைக்கப்படும் பொழுது தன் பாட்டியையும் அழைத்துப் போக விண்ணப்பம் செய்துகொண்ட கதையை நாம் கேட்டிருக்கின்றோமல்லவா? துர்ப்புத்தி, துர்நடத்தை, சட்டத்துக்கு அடங்காத குணம், இவைகளை எல்லாம் நாம் இளமைப்பருவத்திலேயே நம்மைவிட்டு நீக்கவேண்டும். முதல் முதல் நம்மை அடக்கி ஆளப்பட்டவர்கள் நம்மைப் பெற்றெடுத்து வளர்த்த தாய் தந்தைகள். அவர்களுக்கு அடங்கி நடக்கும் குணம் நமக்குச் சிறுவயதிலேயே அமையவேண்டும். அவ்வண்ணம் அமைந்தால் நாம் பெரியவர்களாய் உலகத்தாரோடு ஒத்துநடக்கும்பொழுதெல்லாவிதச் சட்டதிட்டங்களின்படியே நாம் நடக்க அதுஒரு பெரும் காரணமாகும். "விளையும்பயிர் முளையிலே தெரியும்" என்னும் மூதுரை பொய்யல்ல. சிறு வயதில் சட்ட திட்டங்களின்படி நாம் நடப்பது பெரிய வயதிலும் அப்படியே செய்வோம் என்பதற்குப் பெரும் அத்தாட்சி.

"செய்வன திருந்தச்செய்".—நாம் ஆரம்பிக்கும் காரியத்தைத் திருந்தச் செய்யவேண்டும். இது முதலில் வெகு கஷ்டமாயிருக்கும், பழகப்பழக வெகுசுலபமாய் நமக்குஇக்குணம் வந்துவிடும். அதன் பிறகு யாராவது ஒருவன் அரை குறையாய் ஒரு காரியத்தைச் செய்வதை நாம் பார்ப்போமேயானால் அது நமதுமனத்திற்கே அருவருப்பை உண்டாக்கும். அரைகுறையான வேலைஎவ்வளவுவெட்கமானவேலை! ஒன்றைஅரைக்கால்செய்து, மற்றொன்றைக்கால் செய்து, எல்லாவற்றையும் குறைவாகவைத்து விட்டு, இன்று ஒரு காரியமாவது முடியவில்லையே, ஈசுவரா! என்று ஏங்கி நிற்பதைக்காட்டிலும், குரங்குப் பிடியாய் ஒரு காரியத்தைப் பிடித்து முடிப்பது எவ்வளவு மேன்மை. இக்குணம் நம்மிடமிருப்பதைமற்றவர்கள் கண்டால் நம்மிடம் அதிக மரியாதை பாராட்டுவார்கள். ஒருவிஷயத்தில் இப்படிவாதமும், இவ்வுறுதியும் நம்மிடமுண்டாய் விட்டால், அது மற்ற எல்லா விஷயங்களிலும் நம்முடன் கூடவே நின்று இருந்து நமக்குப் பெருங்கௌரவத்தை விளைவிக்கும். பல்லுத்தேய்ப்பதைச் சரியாய்த்தேய்ப்பவன் நன்றாய்த் தேய்த்தும் குளிப்பான். நன்றாய்த் துணிகளைத் தோய்த்து வைத்துக்கொள்வான். தான் உபயோகப்படுத்தும் பாத்திரங்களையும் நன்றாய்த் துலக்கி வைத்துக்கொள்வான். வெளி விஷயங்களிலிருப்பதுபோல புத்தி சாத்தியமான விஷயங்களிலும் வெகு சட்டதிட்டமாயிருக்க ஒவ்வொரு கருமத்தையும்திருத்தமாகச்செய்வான். இக்குணம் வெகு மேன்மையானதாகையால் நாம் சிறு வயதிலேயே இதைப் பயிலல்வேண்டும்.

பதிவிரதைகளின் சிறப்பு

THE DIVINITY OF CHASTITY

முக்கண்ணர்தண் டலைநாட்டில் கற்புடைமங்
கையர்பெருமை மொழியப் போமோ?
ஒக்குமெரி குளிரவைத்தா ளொருத்தி; வில்வே
டனையெரித்தா ளொருத்தி ; மூவர்
பக்கமுற வமுதளித்தா ளொருத்தி ; யெழு
பரிதடுத்தா ளொருத்தி ; பண்டு
கொக்கெனவே நினைந்தனையோ கொங்கணவா
வென்றொருத்திக் கூறி னாளே.

இந்தப் பாட்டு பதிவிரதைகளின் விசேடத்தை யெடுத்துக் கூறுகிறது. இதில்,—

1. எரிகுளிர வைத்தவள் :—ஹரிச்சந்திர மஹாராஜனுடைய மனைவி சந்திரமதி. நாட்டைத் துறந்து காட்டுமார்க்கமாய் நட்சத்திரேயனால் நடத்தப் பட்டுப் போகும்பொழுது விஸ்வாமித்திர முனியின் ஆக்கினையால் தோன்றிய அக்கினிப் பிரவாகத்தைத் தன் கற்பென்னும் தண்ணீரினால் அவித்தாள்.

2. வில்வேடனை யெரித்தவள் .—நளமஹாராஜனுடைய மனைவி தமயந்தி. சூதாட்டத்தில் நாட்டை யிழந்து தன் பத்தினி சமேதராய் காட்டையடைந்து அங்கு அவள் படும் துயரம் கண்டு சகிக்க முடியாமல் இரவே யெழுந்து நளமஹாராஜன் போய்விட, மறுநாள் சூரியன் உதயமானதும் கண்விழித்துப் பார்க்க, தன் கணவன் பக்கலில் இல்லாமையைக் கண்டு காடெங்கும் அழுது திரியும் சமயத்தில் ஒரு மலைப்பாம்பால் விழுங்கப்பட்டாள். அந்த வேளையில் அங்குற்ற வேடனொருவன் அந்தப் பாம்பைக்கொன்று, தன்னைச் சேரும்படி அவளை வேண்டினான். தான் எடுத்துச் சொல்லிய நியாயங்களைக் கேளாமல் பலாத்காரப் படுத்தவே தன் கண்கள் இரண்டையும் அவன்பேரில் சாய்த்து அந்த க்ஷணமே அவ்வேடனைச் சாம்பலாக்கினாள்.

3. மூவர் பக்கமுற அமுதளித்தவள்:—அத்திரி மஹாரிஷியின் மனைவி அனுசூயை. ஒரு காலத்தில் நாரதமுனிவர் பெரு மணல்களைப் பார்வதியினிடம் கொண்டுபோய் கடலைப் பதமாய் வறுத்துத் தரும்படி கேட்க, அவள் சிரித்து அவரைப் போகச் சொல்லிவிட்டாள். பிறகு முறையே, மஹாலட்சுமியினிடமும், சரஸ்வதியினிடமும் போக, பார்வதி செய்தது போலவே அவர்களும் நகைத்து அவரைப் போகச்சொல்லிவிட்டார்கள். நாரதர் கோபங் கொண்டு தான் பூலோகத்திற்குச்சென்று ஒரு பதிவிரதையைக்கொண்டு அவைகளை வறுத்துவருவதாய் வந்துவிட்டார். பூலோகத்தில் மேற்கண்ட அனுசூயையினிடம் போக அவள் நாரதர் வேண்டிய வண்ணமே செய்து கொடுத்தாள். இவ்வற்புதத்தை மும்மூர்த்திகளின் மனைவிகளுக்கும் சொல்ல அவர்கள் பொறாமைகொண்டு அனுசூயையின் கற்பையழிக்க வெண்ணி தங்கள் பர்த்தாக்களை ஏவினார்கள். அவர்கள் பிச்சைவாங்குபவர்கள்போல் ஜாடையாய்ப்போய் பிச்சைகேட்க, அனுசூயை பிச்சையிட வந்தாள். ஆனால், அவர்கள் நிர்வாணமாய்ப்பிச்சையிட்டால் மாத்திரம் வாங்குவோமென்று சொல்ல, உடனே அவர்கள் மூன்று பேரையும் பாலகர்களாக்கி நிர்வாணமாய்த் தன் பக்கலில் இட்டுப் பால் ஊட்டி வைத்திருந்தாள்.

4. எழுபரி தடுத்தவள்:—நளாயினி யென்னு மாது. குஷ்டரோகத்தினால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கும் தன்கொழுநன் வேசைவீடு போக இச்சைகொள்ள, அதைப் பூர்த்தி செய்வதற்காகவேண்டிப் பலநாள் ஒரு வேசைக்கு அவளறியாமல் ஊழியம்செய்துவர, ஒருதினம் இதைக் கண்ட அப்பொதுமகள், கருத்தையறிந்து அவள் ஒரு பதிவிரதையென்று பயப்பட்டு அவள் கொழுநனைக் கொண்டு வரும்படிச்சொன்னாள். இவ்வாறே அவள் தன்கொழுநனை ஒரு கூடையில் வைத்தெடுத்துக்கொண்டு வந்து, பொழுது விடியுமுன் திரும்பிப் போகை

யில் வழியில் கழுவிலேற்றப்பட்டிருந்த மாண்டவ்யனென்னும் ரிஷியின் காலில் அந்தக்கூடை பட்டு அதனால் மாண்டவ்ய ரிஷிக்கு நோயதிகரித்தது. நோயுண்டாக்கக் காரணம் யாரென்று பார்க்கக் கூடையில் எதையோ தூக்கிக் கொண்டு போகும் ஒரு பெண்ணைக்கண்டார். உடனே அவள்பொழுது விடியுமுன் அமங்கலியாய்ப் போகக் கடவதென்று சபித்தார். இந்தச் சாபம் காதில் விழுந்ததும், பொழுது விடியாமற் போகக் கடவதென்று அந்தக்கற்பரசி மறு சாபமிட்டாள். அவ்வாறே பொழுது விடியாமலிருக்க, தேவர்களின் வேண்டுகோளால் தனக்கிட்ட சாபத்தைப் போக்கிக் கொண்டு பொழுது விடியும்படி உத்தரவளித்தாள்.

5. பண்டு கோக்கேனவே நினைந்தனையோ கோங்கணவா என்றவள்.—திருவள்ளுவ நாயனாரின் மனைவி வாஸுகியம்மை. கொங்கணரென்னும் ரிஷி ஒருவர், தன் வழியேவந்து கொண்டிருந்தபொழுது, மேற் பறந்து போய்க் கொண்டிருந்த கொக்கொன்று எச்சமிட அது அவர் தலையின் பேரில் விழுந்தது. முனிவர் வெகுண்டு அந்தக் கொக்கை உற்று நோக்கனும் அவர் தபோ மகிமையால் அது எரிந்து போய்விட்டது. பிறகு அவர் ஓர் ஸமயம் திருவள்ளுவர் மனைக்கு வந்து பிச்சை கேட்டார். அந்தச்சமயம் வாசுகியம்மை தன் கணவருக்கு அமுது படைத்துக்கொண்டிருந்தாள். ஆகையினால் பிச்சையிடுவதற்குச்சற்றுத் தாமதித்து வந்தாள். அதைப்பொறாராகி அவளைக்கொங்கணர் உற்று நோக்கினார். உடனே தன் பதிவிரதா சக்தியினால் அறிந்த அவள் "முன் தாங்களெரித்த கொக்கென்று அடியாளையும் நினைத்தீரோ" என்று சொன்னாள். வழியில் நடந்த விருத்தாந்தத்தை அறிந்தது அவளுடைய கற்பினுடைய சக்தியென்றறிந்து உடனே அவளை வணங்கிச் சென்றுவிட்டார்.

இவ்விதமாகிய பதிவிரதைகள் சரித்திரம் நம்முடைய புராணங்களில் ஏராளமாய்க் கிடக்கின்றன. இந்தக் காலத்தும் அப்பேர்ப்பட்டவர்கள் இல்லாமற் போகவில்லை. ஒருத்தியாகிலும் இருப்பாள். அவள் பொருட்டுத்தான் உலகம் உய்கின்றது.

"நல்லா ரொருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யு மழை"—

T. S. மூர்த்தி முதலியார்.

வேலைக்கள்ளனாய்த் திரியாதே.—உன்னை ஒரு யஜமானன் ஒரு தொழிலில் நியமித்திருந்தானேயானால் நீ எப்பொழுதும் அத்தொழிலைச் செய்ய உனக்குக் குறிப்பிட்டிருக்கும் இடத்தில் ஸ்திரமாயிருந்து அத்தொழிலைச் செய்யவேண்டும். இக்குணந்தான் சிலரிடம் இருக்கின்றதேயில்லை. அவ்விடத்தை விட்டு அடிக்கடி மறைந்துபோகும் குணம் அவர்களிடத்தில் அதிகமாயிருக்குமேயானால் அது அவர்களுடையக்ஷேமத்திற்கு மிகவும் குறைவு. தாம் இல்லாத சமயத்தில் தமது யஜமானன் அவ்விடம் வந்து தம்மை விசாரிக்கும்பொழுது தமக்கு அடுத்தபதவியிலிருந்து வேலைசெய்யும் மற்றொரு வேலைக்காரன் இப்பொழுது தான் நீரருந்தப் போனார் அல்லது குளத்தங்கரைக்குப் போனார் என்று ஒரு நாளைப்போல் சொல்லி வருவானேயானால் அதை அடிக்கடிக்கேட்டுக்கொண்டுவரும் யஜமானனுக்குத் தம்மிடத்தில் என்னமாய் நம்பிக்கை இருக்கும்? மேலும் இக்கொடியகுணம் நம்மிடமதிகமாக ஊன்றிவிட்டால் நாம் ஒரேவிதமான சாக்குப்போக்குகள் சொல்லுவதற்குப் பதிலாகப் புதியவைகளையும் இல்லாதவைகளையும் சொல்லத் தொடங்கிப் பொய்யும் சொல்லப் பழகி விடுவோம். ஆகையால் வேலைக்கள்ளனயிருக்கும் ஸ்வபாவத்தை நாம் முற்றிலும் அகற்றவேண்டும். கஜானாவில் சிப்பாய் பாராகொடுப்பது போல் நாம் ஒரு நிமிஷங்கூடத் தவறாமல் தமக்குக் குறிப்பிட்ட இடத்திலிருந்து கொண்டு வேலை செய்ய வேண்டும்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

ஓநாயும் கோக்கும்

காட்டின் வழியாய்க் களைத்து ஓடியபோர்
வாட்ட மடைந்த ஓநாய் வல்பசி
சேட்டைக் குடைய திரிந்தலைந் திடையே
எதிர்த்தவோ ராட்டின்மேல் குதித்துயிர் குடித்து
மதிய தெண்ணுது மாமிச முண்ட
ஆத்திரமதனெடு வாய்த்திறந் திடையே
புலாலிடைச் செறிந்த என்பு தைத்து
அலாவழி யாக நெஞ்சிடைப் பட்டிட
நெடுமூச்சு வாங்கி நீங்கலாத் துயரில்
அடுத்திட ஓநா யடுத்தோர் நொடியுள்
கழுத்தது நீண்ட கொழுத்ததோர் கொக்கை
"நண்ப! என் நெஞ்சிடை நாடிய வென்பினை
கண்டெடுத் திடுவையேல் கொண்டிடத் தருகுவன்
உண்டியுஞ் சீரும் உறுஞ்செல் வமுமே"
எனநோக்கி யுரைத்து, தன் மனநோக்கி ஆழ்ந்து
வாயாங் காத்து வகையுடன் காட்ட,
சாய்ந்த கழுத்தை வாயுள் தந்து
என்பை எடுத்து எறிந்துடன் கீழே—எறிந்து,
"என்றெனக் கியைந்த செல்வம் ஈட்டுதி"
என்றுரை விளிக்க "வாயுட் பொதிந்த
தொண்டையைத் துண்டாய்க் கண்டஞ் செய்யா
துண்ணுது விடுத்தது ஒன்றே
பலநாட் செல்வங் குலவி யொருநாள்
கிடைத்தது போலென முடிந்த துவன்றே
உயிரைக் காட்டினும் உயரது முண்டே"
என்றுரை நாட்ட எண்ணிய மனத்துள்
'தீயதோர் தமக்குச் செய்திடு நன்மைக்
கேதிரது நோக்கலு மதிவழிறு' என
பற்பல வெண்ணி அற்புத முற்று
நற்குணந் தேட நடந்ததக் கொக்கே.

***

உனக்கென்ன ஒரு கொம்பு முளைத்திருக்கிறதோ?—இந்த வசனம் ஸாதாரணமாக உபயோகித்துவரும் பழமொழிகளில் ஒன்று. உலகில் ஒவ்வொருவனிடத்திலும் ஒவ்வொரு அற்புத சக்தி அமைந்திருப்பது ஸஹஜமே. அப்படி இருப்பவருள் சிலரைப் பெரும்பாலார் பொதுவாக மிகச்சிறந்தவர்கள் எனக் கொண்டாடுவது வழக்கம். இதைக் கேட்குங்கால் பொறாமையாலாவது, அல்லது ஒன்றில் சிறந்தவன் மற்றெல்லா விஷயங்களிலும் சிறந்தவனாக இருத்தல் அவசியமன்று என்ற நுண்ணறிவாலாவது தூண்டப்பட்டு வேறு சிலர் ஒன்றிற் சிறந்தவரது பெருமை அவ்வளவு சிறந்ததன்று என்பதைக் காட்ட 'அவனுக்கு என்ன ஒருகொம்போ? அவன்நெற்றியில் ஒருகொம்பு முளைத்திருக்கிறதோ? அவன் கொம்பு முளைத்தவனோ?' என்று இவ்வாறு பலவிதமாக எடுத்துரைப்பது வழக்கம். மனிதனுக்குக் கொம்பு இல்லை. அவ்வாறில்லாத வஸ்து ஒருவனிடம் இருக்குமாயின் அது எல்லோருக்கும் மிகுந்த ஆச்சரியத்தை உண்டாக்கும். எல்லோரையும் அவனைப் பற்றியே பேசும்படி செய்யும். ஆகவே அவனுக்குக் 'கொம்பு முளைத்திருக்கிறதா?' என்ற தொடருக்கு மனிதனிடம் இதுவரையில் இல்லாத வஸ்து அவனிடம் என்ன இருக்கிறது? அவனைப்பற்றி இவ்வளவு சிறப்பித்து வாயோயாது நீங்கள் ஸதா பேசிக்கொண்டிருக்கத் தலைப்பட்டீர்கள், என்பது பொருள்.

கம்பனது கவித்திறத்தைப் பற்றி எல்லோரும் அவன் காலத்தில் புகழ்ந்துபேசி அவனை ஓர் தேவதையாக மதித்து அவனைப்பற்றிப் பேசுவதிலேயே வீண் காலம் கழித்துவர அவர்களை நோக்கி, இப்பழமொழியின்கருத்தமைந்த ஓர்பாடல்கூறி ஔவை அவர்கள் வீண்காலப்போக்கைத் தடுத்தாள். அந்தப் பாட்டு வருமாறு:—

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யார்க்கும் செயலரிதால்-யாம்பெரிதும்
வல்லோமே என்று வலிமைசொல வேண்டாம்காண்
எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது.

இதனால் ஒருவன் சிறப்பைக்கண்டு அடிக்கடிப் பேசுவதால் மாத்திரம் பயனில்லை. அவ்வாறு மாத்திரம் செய்துவிட்டு விடுவதால் பேசுபவர்களுக்கு வீண்காலம் கழிவதேதவிர யாதொரு நன்மையும் வாராது; சிறப்பு உடையவர்களுக்கு வீண் கர்வமும் அதனால் பெரும் கேடுகளுமே உண்டாகும். ஆதலால் ஓர் சிறப்பை எங்காவது கண்டால் அதைப் பற்றிச் சற்றுப்பேசி நிறுத்திவிட வேண்டும். மேலும் அது மிகச்சிறந்ததென்று நம்மனத்திற்கு அடிக்கடிப் பட்டால் அதை மனத்திற்குள் வைத்துக்கொண்டு, நம்மால் முடியுமாகில் நாமும் அதை அடைய வெளிப்படையாய் முயற்சிக்கவேண்டும். அவ்வாறின்றி வீணாக அதைப்பற்றிப் பேசும் பேச்சோடுமாத்திரம்

நிறுத்திவிடலாகாது என்பது இப்பழமொழியின் கருத்து.

இப்பழமொழி இராமாயணத்தில் வரும் ரிசிய சிருங்கர் அதாவது கலைக்கோட்டு மாமுனியின் கதையோடு ஸம்பந்தப்பட்டது போலக் காணப்படும். காசிபர் பிள்ளையாகிய விபண்டக ரிஷிக்கு ஓர் பிள்ளை இருந்தார். அவருக்கு நெற்றி உச்சியில் ஓர் மான்கொம்பு முளைத்திருந்தது. அவரைக் கண்டு ரிஷிகள் எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். அவர் சிறுவயதிலேயே தகப்பனார் ஆச்சிரமத்தில் வளர்ந்து வருங்கால் மிகுந்த பரிசுத்த சித்தராக இருந்தார். அவருக்குப் பிரபஞ்ச விஷயமே தெரியாது ; ஸ்திரீகள் இன்ன குண முடையவர் என்பதே அவர் மனத்தில் தோன்றவில்லை. இந்தச் சுத்தாத்மாவை உள்ளபடி அறிந்த ரிஷிகள் இவருக்கு ஞானம்தான் முதிர்ந்து சிரஸுள் தங்க இடமின்றி நெற்றியில் கொம்பாகி வெளி எழுந்ததோ என்று மதித்து வியந்தனர். இப்படி இருக்கையில் மஹா சுத்தாத்மாவான ரிசியசிருங்கருக்கு விஷய ஸுகம் அனுபவிக்கும் பிராரப்த விசேஷம் வந்துவிட்டது.

அப்பொழுது சில வருஷங்களாக மழையே இல்லாது வருந்திய அங்கதேசத்தில், அதன் அரசனாகிய ரோமபாதன் ஓர் மஹாஜனஸபை கூட்டி மழையை உண்டாக்க வழிதேடினன். அந்தஸபையிலிருந்த பிராஹ்மணர்கள் சிலர் 'காட்டில் விபண்டகர் பிள்ளையாகிய ரிசியசிருங்கர் இருக்கிறார். அவரது நெற்றியிலிருக்கும் கொம்பால் அவரைக் கண்டு பிடிக்கலாம். அவர் மஹாதர்மாத்மா. உலக விஷயமென்பதே அவருக்குத் தெரியாது. அவரை மெதுவாக உமது ஊருள் அழைத்து வந்தால், அவர் அடிவைப்பது முதல் நல்ல மழை பொழிந்து உமது ராஜ்யம் செழிக்கும். வந்தவரை வீணாக விட்டு விடாது உமது பெண் சாந்தையை அவருக்கு விவாஹம் செய்து கொடுத்து நீர் கிருதார்த்தர் ஆகவேண்டும்' என்றனர். திசை தப்பித் தத்தளிக்கும் மாலுமி கரையைக் கண்டு ஸந்தோஷிப்பது போல அரசன் ஸந்தோஷப்பட்டு சில ஸ்திரீகளை ரிசியசிருங்கரிடம் அனுப்பி அவர் தகப்பனார் இல்லாத ஸமயம் பார்த்து ரிசியசிருங்கரை வனத்திலிருந்து தமது நாட்டிற்குக் கொண்டுவந்து விட்டான். மஹான் அங்கதேச எல்லையில் அடி வைத்ததும் மழை தாரை தாரையாகப் பொழிந்தது. மழையால் ரிஷிவரவை உணர்ந்த ரோமபாதர் எதிர்கொண்டு ரிஷியை அரண்மனை கொண்டுபோய் தனது பெண் சாந்தையை விவாகம் செய்து கொடுத்தார். விபண்டகர் இதை ஞானதிருஷ்டியால் அறிந்து தன் மகன் பிராப்தம் இத்தகையது என்றுமதித்து கோபியாதிருந்தார். ரிசியசிருங்கரும் உலக விஷயங்களில் மூழ்காது தமது காலத்தை நல்ல வழியில் கழித்து முடிவில் அழியாப்பதவி பெற்றார். கொம்பு முளைத்த இவர் சிறப்பிலிருந்தே 'அவனுக்கு ஒரு கொம்போ?' என்ற பழமொழி வந்திருக்கலாம்.

***

வேஷத்தின் திறம்.—இராவணன் ஸீதையை இலங்கைக்குக் கொண்டுவந்து அசோகவனத்துள் வைத்து அநேகவிதமாக நயவழியாலும், பயவழியாலும், பலவிதமான மாறு வேஷங்கள் தரித்து அவளை வசப்படுத்த முயன்றான். எல்லாம் முடிவில் பயன் படாதது கண்டு திகைத்து நிற்கையில் அவனுக்குத் தன்தம்பி கும்பகர்ணன் ஞாபகம் வந்தது. உடனே அவனை எழுப்பியாவது ஸீதையைப் பயமுறுத்தி அவளைத் தன் வசப்படுத்தி விடலாம் என்று அவனுக்குத் தோன்றியது. தன் தம்பி இடம் சென்று அவனை எழுப்பி அவன் தீர்க்க நித்திரைக்காரனுதலால் அவனிடம் சுருக்கமாக விஷயங்களைச் சொல்லத் தொடங்கினன்.

இராவணன்.—ஸீதை என்ற ஓர் அழகிய ஸ்திரீ இருக்கிறாள்.

கும்பகர்ணன்.—அவளை உடனே தூக்கி வந்து விடேன்.

இரா.—தூக்கிவந்து அசோகவனத்தில் வைத்தாய் விட்டது.

கு.—அப்படியானல் அவளை வசப்படுத்திக்கொள்ளேன்.

இரா.—என்ன முயன்றும், எவ்வித ரூபங்கள் தரித்தும் அவளை வசம் பண்ணமுடியவில்லை. ஆதலால் தான் உன் ஸஹாயத்தைத் தேடிவந்தேன்.

கு.—நீ முயற்சி செய்த காலங்களில் எல்லாம் ஸீதை எவ்வாறு நடந்து கொண்டாள் ?

இரா.—நான்எந்த உருவம் தரித்து எவ்வளவு விதமாகப் பேசியபோதிலும் அவள் என்னை ஓர் துரும்பாக எண்ணி 'என் நாதன் ஸ்ரீராமரைத் தவிர மற்றவரை ஓர் துரும்பாகக்கூட மதிக்கேன்! கண்ணெடுத்தும் பாரேன்!' என்று தலைகுனிந்து கொண்டு அச்சமின்றிக் கூறுகிறாள்.

கு.—ஆனால் இராமர் உருவமெடுத்து அவளை வசப்படுத்த முயன்றாயா?

இரா.—அப்படியும் செய்ய முயன்றேன். இராமர் உருவத்தை நான் தரித்ததும் எனக்கு ஸீதையிடம் இருந்த துர் ஆக்கிரஹம் எங்கேயோ மறைந்து போய் விடுகிறது. அந்த உருவத்தைத் தரித்துக் கொண்டு ஸீதையிடம் போனால் எனக்குமேல் ஒன்றும் செய்ய ஓடவில்லை. நிரபராதியான ஓர் ஸ்திரீயை நாம் ஏன் வருத்தவேண்டும் என்று எனக்குத்தோற்றுகிறது. எனக்கு மேல்யோசனை தோற்றவில்லை.

கு.—நான் வந்து அதிகமாக அவளை எவ்விதத்தில் பயமுறுத்தப் போகிறேன். நீ இவ்வளவு முயன்றும் உன்னால் முடியாமற் போய்விட்டபடியால் ஸீதை மஹா பதிவிரதையாய் இருத்தல் வேண்டும். அவள் புருஷனாகிய ராமன் உருத்தரித்தால் உன் கெட்ட எண்ணங்கள் அக்காலத்தில் மாறி உன் மனத்தில் நல்ல எண்ணங்கள் ஊறுவதால் அவரும் சிறந்த மஹானாய் இருத்தல் வேண்டும். ஆதலால் ஸீதையை இங்குப் பலாத்காரமாக நீ வைத்திருப்பது உனக்குக் கெடுதியாகவே முடியும். இப்பொழுதே இராமரிடம் ஸீதையைக் கொண்டுபோய் விட்டுச் சரணமடைந்துவிடு என்று புத்திமதி கூறினான்.

கும்பகர்ணன் வார்த்தை இராவணன் காதில் ஏறவே இல்லை. கும்பகர்ணனும் உறங்கத் தொடங்கினான்.

இக்கதையிலிருந்து வேஷத்தின் திறம் வெளியாகிறது. கெட்டவழி எளிதாகையால் அதற்குத் தகுந்த வேஷத்தின் பலன் சீக்கிரத்தில் தெரியும், சற்று நீடித்தும் நிற்கும். நல்லவழி மிகக் கடினமாக இருப்பினும் அவ்வழிக்குரிய பெரியோரைப்போல வேஷம் போடுவதின் பலன் அந்த ஸமயத்தில் இராமல் போகாது. அது நீடித்து நிற்பதும் நிற்காததும் வேஷம் போடுபவனது நோக்கம், மனதின் நிலை இவைகளைப் பொறுத்தது. ஆகவே நல்லோரைப் போல் ஒருவன் வெகுகாலம் மனப் பூர்வமாக நடித்து வந்தால் அவர்கள் எண்ணம் முடிவில் அவனிடம் குடி கொள்ளாமல் போகமாட்டாது.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

த்ரௌபதி அல்லது மனத்திணிலை

4. அவைநடுவேற்ற காதை

(தொடர்ச்சி)

உண்டாடுதல், விளையாடுதல், வெறியாடுதல் முதலிய பல ஆடல்களுமாயின. சேவலாடல், காளையாடல், குரவையாடல் முதலிய ஆடல்களுமாயின. வேட்டை முதலிய ஆட்டங்களுமாகி வீட்டையடைந்த பாண்டவ கௌரவர்கள் மலைநாட்டு அழகிற்கும் நகரத்தினழகிற்கு முள்ள வேற்றுமைகளை ஆராய்ந்தனுபவியாநின்றனர். பிறகிவ்வாறு ஆய்ந்தோய்ந்தானதும் நீர் விளையாடல் முதலிய ஆடி பழகினர். அதற்குப் பிந்தித் தம்நகரத்துட் புகுந்து செய்குன்று, தலை வீழ்அருவி முதலிய நோக்கிக் காலங் கழித்தனர். உய்யான வனத்தில் சிலநேரம் பொழுது போக்கினர். மண்டபத்தைப் பின் அடைந்தனர். அங்குச் சகுனி பொழுது போகாமையால் விளையாட்டாக வட்டாடியேனும் பொழுது போக்கலாமென்றனன். அரங்கத்துட்கார்ந்து இளஞ்சூதில் காலத்தைச் செலவிட்டனர். பித்து தலைக்கேறியதும் தருமர் தனக்கும் தெரியாது பந்தயமாகச் சிறு ஊரிலிருந்து நாடு நகரங்களெல்லாமிழந்தனர். பின் தன் உடன்பிறந்தார் நால்வரையும் தோற்றனர். அதன்பின் தன்னையும் தோற்றார். பின் என்செய்வது என்று தோன்றாது நிற்க சகுனி த்ரௌபதியைப் பந்தயமாக வைக்கலாமென்றான். ஆலோசியாது ஆகட்டும் என்று ஒத்துக் கொண்டனர். ஆட்டம் முழுதும் ஆகிவிட்டது. இவருக்கும் பந்தயத்திற்கு ஒன்றுமில்லை. சகுனிவேலையு முடிந்து விட்டது. விளையாட்டே வினையாகி முடியுமென்பதற்குப் படிப்பினை வேறு முண்டோ?

துரியோதனன் விதுரரை அனுப்பித் தருமன்முதலியோரை அழைத்து வருகவென்று சொல்ல, அவரும் அவ்வாறே சென்று சூது ஆடுவதற்காக வஞ்சனையினால் உங்களைக் கெடுக்கத் துரியோதனன் முயல்கிறான் என, தம்பிமார் தடுக்கவும் நாமே சூதாடுவது தகுதியன்று. அது கொடிது. அழைத்தால் வரமாட்டேன் என்பது அரசர்க்கு அழகன்று. எந்தக் கஷ்டம் வந்தாலும் வரட்டும் என்னும் மனத்துணிவோடு "எல்லாமவன் செயலே" என்னும்

பேரெண்ணத்திற் பதிந்தவனாகி சூது விளையாடி நாடுமுதல் மனைவியீறாகத் தோற்று நின்றனன். கொடுமையிலே பிரவர்த்தி யுடையவர்கள் நன்னிலைமையில் இருப்பார்க்குத் தாழ்வுவந்தால் தமக்கு வாழ்வு உண்டானாற்போல ஸந்தோஷமடைவர். கொடுங்கோன்மை முதிர்ந்த மொழிகளால் விதுரரைக் கூவி "நீர் என்னை யன்று இகழ்ந்து சிரித்த அச்சிறுக்கியை இங்கு அழைப்பியும். அவளை எனக்கு சேவகவேலை செய்யும்படிச் செய்யும்" என்றான் துரியோதனன். விதுரர் "அவள் செய்வது தகுதியல்ல, தன்னைத் தோற்றபின்தான் தருமன் அவளைத்தோற்றான். நீ சொல்வது முழுதும் அடாதது. உலகத்திற்கு ஒவ்வாது" என்றார். பின் துரியோதனன் கண்ணில் தீப்பொறி பறக்கச் சிரித்தான். கோபமூண்டவன் கொக்கரித்து ஆவேசத்தில் பட்டவனாகி தன் எதிரிலிருந்த பிரதிகாமி என்னும் தேர்ப்பாகன் மகனை த்ரௌபதியை அழைத்து வரும்படி ஏவினான். தலைமேல் பழிசுமந்தவன்போல அவன் சென்று கண்ணீரும் கம்பலையுமாகி த்ரௌபதியின் முன் தோன்றி ஒன்றும் சொல்லத்தோன்றாது, பிரமித்து ஒருவாறு தேறி, நடந்தவைகளைக்கூறி, இக்கொடும் தொழிற்குத் தானாளாகவேண்டியிருந்ததையுஞ் சொல்லி திரும்பிவந்து இராஜஸபையில் அவள் கேட்ட சில கேள்விகளைச் சொன்னான்.

தீயெழ விழித்து, பற்களைக் கடித்து அத்துரியோதனன், த்ரௌபதி கேட்ட கேள்விகள் எரியுமனலில் நெய் விட்டாற்போலக் கோபம் கொழுந்துவிட்டு எரிய தன் தம்பியாகிய துற்சாதனனை நோக்கி "நீ சென்று அவளைக் கைப்பற்றி இழுத்து வா" என்றான். சொல்லும் மொழி முடிவதன் முன்னமே அவன் அவள்பால் சென்று கொல்லென்று சிரித்துக் கொக்கரித்து "அடீஇ மஹா பதிவ்ராதா சிரோமணி! ஐந்து பேரோடு வாழுமண்ணி! உன்கணவர்களைச் சூதால் அரசன் துரியோதனன் வென்றான்! தருமன் உன்னையும் தோற்றான். ஊரையும் தோற்றான். யாவையும்தோற்றான். எங்களுக்கு ஊழியஞ்செய்யு முறைமையும் கொண்டான். இனி நீ இராசசபையில் வந்து ராஜதுரியோதனனுக்கு ஊழியஞ் செய்ய நட. முறையால் நாட்டையிழந்தவன் உன்னையு மிழந்தான். வா சீக்கிரம் புறப்படு, நில்லாது நடவாய். இனி தாமதித்தல் முடியாது. சபையில் வந்து உன் கணவர்களது பரிஹாஸ நிலைமையை நன்றாய்க் காண். அன்று துரியோதனனைக்கண்டு நீ நகைத்ததை இன்று உன்கணவரைக் கண்டு செய்யலாம் புறப்படு. ஐந்துபேர்களைக் கணவர்களாகப் படைத்துப் பொதுமகளிர்களைப்போல வாழ்ந்தும் மஹா பதிவ்ரதை போல நடிக்கிறாயே, அடீஇ நீ நற்குலத்தில் பிறந்தவளானால் என்பின்னால் கூசாமல் வா" என்று கூறியதுமல்லாமல் கீழ்மையென்னும் ப்ரவாஹத்தில் பட்டு எல்லை கடந்தவனாகி த்ரௌபதியின் கரங்களை நன்றாகப் பிடித்து இழுத்து ராஜசபையை அடைய முயன்றான்.

இங்கு ஒன்று கவனிக்கவேண்டியது. த்ரௌபதியின் கரத்தைத் துற்சாதனன் பிடித்திழுத்தால் அவளுடைய கற்பிற்கு ஒருஹானியும் நேரிடாது. அவள் மனதுக்கு த்ரோஹமாகிய எண்ணம் இருக்கும்பக்ஷத்தில் அது அவளது குணத்தைத்தாழ்த்தும். அவள்மனம் ஸரியாக இருக்கும்வரை துற்சாதனன் அவள் ஸம்மதமின்றி எதுசெய்யினும் பதிவ்ரத்ய பங்கமாகாது. தம்வசமின்றி நடப்பதற்குத் தானாளாக முடியாது.

தன் கரத்தைப்பற்றித்தீண்டினகாலத்திலும் தீண்டி இழுத்த துற்சாதனனது செய்கைக்கஞ்சி பதைபதைத்து கணவரால் பார்க்க முடியாமையால் தானும் பார்த்தலாகாதென்று கண்களை மூடிக்கொண்டு ஆழ்ந்த கற்பிற் சிறந்த காந்தாரியிடம் சென்று அவளிடம் தன்பக்கம் நியாயம் கிடைக்கும் என்று காலில் வீழ்ந்து தனக்கு நேர்ந்த விபத்தைக் கூறினாள். "ஸ்திரீகளை அந்நியன் தீண்டல் அழகோ! இது முறையோ. என்னைச் சபை நடுவழைத்துப் போதல் தருமமாகுமோ. தங்களுடைய குழந்தைதெரியாமற் செய்த தவறுகளைத் தாங்கள் தங்களுடைய குணவிசேஷங்களால் சரிப்படுத்தவேண்டும். தாங்களே இதைச் செய்வதற்குத் தகுந்த பாத்யமுடையவர். குணங்களாலும் முறைமையாலும் தாங்களே இதைச் செய்யத் தகுந்தவர். தம்மிடம் நியாயம் எனக்குக் கிடைக்காவிடில் யாரிடம் எனக்குக் கிடைக்கும். தம்மையே அடைக்கலம் என்று அடைந்தேன். இனி க்ஷணமும் பொழுது போக்காது என்னைக் காப்பீர். ஸ்திரீகளுக்கு கெடுதியன்றி அவர் மானத்திற்கும் கேடு வருமாயின் பதிவ்ரதைகளாகிய ஸ்திரீகள் அவர்களைக் காப்பாற்ற வேண்டாமோ? அம்மா உம்முடைய பெருமையா

இய குணங்களும் நடக்கைகளுமே எனது கற்பிற்கும் மானத்திற்கும் ஊன்றுகோலாகி நின்று என்னை எத்துயரத்தி லிருந்தும் காப்பாற்ற வேண்டும்" என்று பதைபதைத்து ஒன்றும் தோன்றாது ஆத்திரமும் பொறுக்காது கூறினள். ஆனாலும் மக்களிடம் கொண்ட ஆசையானது வரம்பு கடந்து நியாயத்தை அறியவொட்டாது காந்தாரியைச் செய்தது. அவள் "பயப்படவேண்டாம் நீ போ உனக்கொன்றும் கெடுதி வராது" என்றாள். இவ்வாறுசொல்வாள்என த்ரௌபதி ஒருநாளும் எண்ணவில்லை. பின் விதி வலிதென்று நடந்தாள். காந்தாரிக்குத் தனக்கும் தோன்றாதது ஒன்று தோன்றியது. அவள் துற்சாதனனைக் கூவி "நீ அவள் கையைப் பிடிப்பது அழகல்ல. அவள் தலைமயிரைப் பிடித்து செல்" என்ன, அவனுமவ்வாறே செய்தான்.

பிறர் கையிற்பட்டு, தன் கணவர்கள் தருமமென்னும் கட்டுப்பாட்டின் வழியில் செல்வதால், அவர் தங்கள் பூதசரீர மூலமாகத் தனக்கொன்றும் உதவி செய்ய முடியாதென்பதையு மறிந்தவளாகித், தானே தனது வலியால் தனக்கு நேரும் துன்பங்களைக் காத்துக்கொள்ளவேண்டும் என்னும் ஆத்திரம் த்ரௌபதிக்குண்டானது. துற்சாதன் குழல் குலுங்க இழுத்து வரும்பொழுதே அவள் உடலும் பதைத்தது. அவளுடலில் இருந்த மானமும் குலைய மனமும் குலைந்தது. ஆயினும் அவள் அறிவு சோர்வு அடையவில்லை. கற்பின் நிலையும் தாழவில்லை. எதனால் அவள் பெருமைக்கு மூலமுண்டோ அம்மூலம் கெடவில்லை. அதிலிருந்து நன்மை வேர்விட இடமிருந்தது என்பதற்கு ஸந்தேஹமில்லையாது.

மெய்ம்மறந்து பிறன் வசமாகி உடல் வரினும் மனமானது தன்கணவர் பாலும் அவரின் தரும நிலையின் பாலும் நுழைந்து நுழைந்து எண்ண அவளுக்கொரு தைரியம் உண்டாகியது. தருமமே ஜயமடையும் என்றும் அறிந்தாள். அதற்குமுன் வரும் கஷ்டங்களையும் தானே அழிக்கவும் முயலலாம் என்றும் எண்ணினள். அது ஸரியோ ஸரியில்லையோ என்பதுதானே தெரியும்.

இவ்வாறு · தூண்டப்பட்டவளாகி ஸபை நடுவுற்றதும், தன் கணவர்கள் நிலைமையைக்கண்டு வருத்தமடையினும் அதற்கஞ்சாது அங்கிருந்தவர்களை நோக்கி "பெரியோர்களே! நான் கேட்பதற்கு ஆலோசித்துப் பதில் சொல்லுங்கள். நான் ஓர் எளிய ஸ்திரீ. நான் சொல்வதில் தவறிருப்பினும் இருக்கலாமாயினும் நான் சொல்வதற்குத் தாங்கள் பதில் கூறவேண்டும். மஹாத்மாவாகிய தருமர் தம்மைத் தோற்பதற்கு முன் என்னைத் தோற்றாரா? அல்லது தோற்றபின் என்னைத் தோற்றாரா? முன்னம் என்னைத்தோற்றுப் பின் தன்னைத்தோற்றால் நான் ஊழியாவதற்கு ஒரு தடையுமில்லை. அவ்வாறின்றித் தன்னைத் தோற்று என்னைத் தோற்றாராயின் அது பொருந்தாது. நியாயமும் ஆகும். தருமத்திற்சிறந்த மஹான்களே! நீங்கள்தான் இந்த ஸங்கைக்குத்தரமளிக்க வேண்டும்" என்றாள். விதுர விகர்ணரிருவர் மாத்திரமே அவள் சொல்லுவது நியாயமென்றார். மற்றவர் கொடுங்கோலுக்கஞ்சி மனத்தை விற்று மயங்கி இருந்தார்.

ஸபை நடுவில் நியாயம் கூறத்திறமை வாய்ந்தவர் ஒருவருமின்றி அநீதி இருள்மூண்டு நிற்பதைக்கண்ட வீமன் முதல் நால்வரும் கோபக்கனலால் ஒளிமூட்ட முயல எண்ணங்கொண்டதை பொறுமையிற் சிறந்த தருமர் தரும ஸங்கடத்திலகப்பட்டு ஒன்றுஞ் செய்யத்தோன்றாது திகைத்து, அவரது கோபத்தைத் தணிக்கும்படி அருள் வீசிநிற்கும் கண்களை த்ரௌபதையும் கண்டனள். அவரது எண்ண முற்றையுங் கொண்டனள்.

இதுநிற்க மறுபடியும் ஸபையோரைக் கண்டு "நான் சொல்லுவது உமது மனத்திலேறாவோ? ஆணோடும்பெண்ணோடும் பிறந்தவரில்லையோ? உங்களுடைய வீட்டில் பெண்களுமில்லையோ? என்னை இவ்வாறு ஒரு அந்நிய மனிதன் கைப்பற்றி இழுத்து வரவும் உம்மனம் பொறுக்குமோ? உம் மனங்கல்லோ? உம்முடைய மகளிவ்வாறு துன்பமுற்றால் அவள் கோ கோ என்று அலறும் பொழுது நீங்கள் என்ன செய்வீர்கள்? கைப்பற்றி யிழுப்பதையுங் கண்டு களித்தது போதாதென்று கொடுமொழிகளை அப்பாதகர் கூறவும் நீர் கேட்கிறீர்கள். ஆண்சிங்கம் ஒருவருமிங்கில்லையோ? தன் தகப்பனை முறையாக அடைந்து வரும் ஒருவருமிங்கு இல்லாது போய்விட்டாரோ? என் ஞான மென்பதிங்குச் சூனியமாய்விட்டதா? என் மேல் உங்களுக்குக் கிருபையில்லாமல் போய்விட்டதா? நான் கேட்ட மொழிக்குப் பதில் கூறிரோ?" என்று கதறினள். பதிலொன்று மில்லை. எங்கும் ஸ்தப்தமாகவே இருந்தது. காற்றுமசைய பயந்தாற்போல மயங்கியது.

200.

"மேலும் நீண்டாக்காலத்தில் சீலை கட்டி நிற்கும் ஓர் எளிய ஸ்திரீயை—கேவலம் அற்பமாகிய ஸ்திரீயை—கைப்பற்றி யீழ்த்து, பின் குழலை அவிழ்த்துத் தடதடவென்று தள்ளி ஸபைநடுவிழுத்துவரல்—ஹா! என்ன காலத்தின் கோலம். காலத்திற்கேற்ற அலங்கோலம். இத்தனையும் கண்டும் உமக்குக் கண்கள்தான் இல்லையோ? அவை படத்திற் பதித்த வெறும் ஓவிய வுருத்தோற்றமோ? சீ! சீ! நீங்களும் அரசர்களென்று கையில் வில்லேந்தி மீசையை முறுக்கி மண்ணை ஆளும் அரசரென்று பெயரும் வஹித்தீர்களே! நீங்களல்லவா குலத்திற்கலங்கார சிகாமணிகள்! வெட்கம் மானம் ஹீனம் ரோஷம் ஒன்றும் உமக்குக் கிடையாவோ? தோளின்மேல் உமக்குத் தலைகளுமில்லையோ? அன்றிப் பிரமன் அன் எழுதியநாள் பதுமைகளைச் செய்து இது த்ரோணன்; இது பீஷ்மன் எனப் பலபெயர் வைத்து இப்பதுமையமைந்த இச்சிங்காரசபையை ஏற்படுத்தினனோ? நான்சொல்வது கொஞ்சமேனும் உங்கள் செவியில் ஏருவோ? மனிதர்களாகப் பிறந்து, மறைகளெல்லாம் அறிந்தவர்களெனப் பெயரும் பூண்டீர்? ஏன் இந்த வீண் பெருமை! சீ! சீ! நான் இந்த அநியாய ஸபையை என்னவென்று மதித்தேன். நியாயம் பிறப்பதற்கு ராஜஸபை என்பது போய் பொய்யும், சூதும், வஞ்சனையும், பொறாமையும், குதூஹலமுமாக நாட்டியம் செய்யும் சாலையாகவா இது முடிந்தது! ஹஸ்திநாபுரமோ! சந்திரவம்சத்தரசரது சபையோ! எனக்கு நீதி என்பது கிடைக்காதோ?" என்றாள். கண்ணில் நீர் அருவியே நீண்ட தாரை தாரையாய் வீழ்ந்தது. உடல் முழுதும் வியர்த்தது. மனமும் படபடத்தது. ஹ்ருதயமும் துடித்தது. ஆவேசமும் ஓடியது. ஆயினுமவளைக் கவனித்தவர் முன்சொன்ன இருவர் தவிர வேறு யாவருமில்லை. மதியாதவர் ஸபையில் வந்தகப்பட்டபின் என்செய்வாள். ஆண்டிசொல்லு அம்பலமேறுமோ?

இதற்குள் "போதும் போதும். உன் வாயை மூடு. நீ மஹாபதிவிரதை! நன்னடத்தையுடையவள்! மஹாசீலை! உன்மொழி இங்கேறுத விட்டது! உன் தோல்வாயை மூடு; போதும்! உன் வள்ளல் முழுதும் வெளியிட வேண்டாம்! என்னைக்கண்டு நீ சிரித்த சிரிப்பு இப்பொழுது எங்குப் போய்விட்டது! அதைவிட்டு விட்டு வாயுள் வந்தவாறு பிதற்றிக்கொண்டு ஏன் குரைக்கிறாய். மானமுள்ளவளாயின் ஐவரோடு வாழ்வையோ படுநீலி. நீ ஓர் பொதுமகள். உனக்கிவ்வளவு வாய்ப்பதட்டமுண்டோ, ஸரி உன்பெருமை எல்லார்க்கும் நன்கு வெளியிட்டது போதும்! போதும்!" என்று சொல்லிக்கொண்டு தன் பற்களை நறநறவென்று கடித்து உதடு அசைய மீசை துடிக்க முகம் வியர்த்து கண் சிவக்கத் தன் தம்பியாகிய துற்சாதனனைக் கூவி "இவளுடைய அஹங்கார மடங்கவில்லை. இனி அவளை வீணே விடாதே. அவளை நிர்வாணமாக்கி இந்நடு ஸபையில் நிறுத்து. பலரும் பார்த்து நகைக்க பரிபவப்படுத்து" என்றான். வெள்ளத்தில் அடித்து வரும் பொருள்போல துரியோதனனுடைய மனோவழியின் வழியாக யாவும் செய்யத் தயாராகி த்ரௌபதியின் துயிலைக் களையமுயற்சித்தான். கைகளை மடக்கி மார்பகம் மூடி மானத்தைக்காக்கவேண்டுமென்று முயற்சி செய்தாள். "எல்லாரும் இதற்குடந்தை யாயிருக்கிறார்கள். ஆஹா இதுவும் காலத்தின்கொடுமை. பகவானது லீலை. ஆயினும் என் மானம் போக நான் விடேன்" என்று எண்ணி துற்சாதனனுடைய கைகளைத்தடுக்க முயன்றாள். மானமென்னும் வலிமையால் உண்டாகிய் ஆவேசசக்தியால் எவ்வளவு முயன்றாலும் ஸ்த்ரீயினுடைய வலிமை எவ்வளவு தாங்கும். மெதுவாகிய கரங்களும் வலியற்றது. உடல்மேல் இருந்த ஆசையும் ஒருவாறு ஒழிந்தது. இனி தன்னால் ஒன்றும் முடியாதென்று தீர்மானித்தாள். துயிலைப்பிடித்து மார்பகங் காட்டாது மூட முயற்சித்த கரங்களைத் தலைமேல் குவிய நீட்டினாள். மேல்நின்ற துயில் நெகிழ்ந்ததோ இல்லையோ என்பதை அவள் அறியவில்லை. தன் மானத்தின்மேல் அபிமானங்கொண்டவளாகவும் நிற்கவில்லை. தன்னால் ஒன்றுமாகாது தன்கணவர்களது ஸ்தூலாகாரத்தாலுமொன்றுமாகாது; அது தருமமென்னும் வலையுள் சிக்கி பிணியுண்டு இருக்கின்றது. ஆகையால் அவர்களது ஆத்மஸ்வரூபமாகி அவ்விடத்தந்தராத்மாக விளங்குங் கிருஷ்ண பரமாத்மாவே தன்னைக் காக்கவேண்டுவது. அவன் செயல்தான். எல்லாம் அவன் செயல்தான். தன்னால் ஒன்றுங் கிடையாது. அவர் ஆட்டியகோலத்திற்காள்தான் தான் என்றிவ்வாறு எண்ணிஎண்ணி ஒன்றுந்தோன்றாது "ஹே கிருஷ்ணா! த்வாரகாவாஸா! கோவிந்தா! எல்லாவற்றையுங் காண்பவனே! எங்குமுள்ளாய்! அரசசரண்ய! ஆபத்பாந்தவ! மூவருள் முதல்வோய்! மூலபுருஷா! அப்பா! என்னாலினி ஒன்றுமில்லை. சக்தியுடையவளாக யான் எண்ணியது தவறு. உன்னையே அடைக்கல மடைந்தேன். தருமத்தின் நிலையில் நின்று உடலால் உதவி செய்ய முடியாவிடினும் உண்மையறிவு, எண்ணம், மனம், ஆத்மா இவைகளின் மூலமாக என்னைக்காக்க முதல்வராக நிற்கும் அவரது உள்ளும் புறம்புமாய் நின்று அநாதியாயபரம் பொருளே! லீலாமானுஷ விக்ரஹமாகி ஆயர்பாடியிம் அம்மையார் கையில் அகப்பட்டு எளியவனாகி நிற்கும் கண்ணா! கடல் வண்ணா! இனி என்னால் பொறக்க

முடியாது'' என்று கூவினாள். கதறினாள். குளறினாள். பேய்போலலறிக்கூவினாள். தன்னிடை நின்ற ஒருவரையும் அவள் காணவில்லை. அரசஸபையிலிருந்ததாகவும் அவளுக்குப் படவில்லை. தன்மேல் பூண்ட துயில் களைய ஒருவன் முயற்சித்ததாகவும் அவள் அறியவில்லை. அவள் மனமங்கு எங்குமில்லை. ஆத்மஸ்வரூபமாகக் கண்ணனையே அவள் தன் மனத்தில் கொண்டாள். கண்களில் நீர் தாரைதாரையாகச் சிந்தியது. கண்கள் படம்போல் நிலைத்தது. ரோமம் சிலிர்த்தது. உடல் வியர்த்தது. மனங் களைத்தது. பொறி வாயில்கள் செயலொழிந்தன. மனோ வியாபாரமெல்லாம் நின்றுவிட்டன. பரவசமாகி அயர்ச்சி அடைந்தவள் போல் நின்றாள். கூப்பிய கை தலைமேல் வைத்தது ஒன்றுதான் எல்லாருங் கண்டார். அவளது பக்தியின் தீவிர விருத்தியையும் ஒழுங்கையும் யாரால் காணமுடியும்? மார்பின்மேலிருந்த துயில் களைந்து விழுமென்று துற்சாதனன் த்ரௌபதி கையைத் தலைமேற்கொண்டதும் இழுத்தான்; அது வரவுமில்லை. மறுபடியுமிழுத்தான்; சற்று நெகிழ்ந்தது. மற்றும் வலிய இழுத்தான்; ஓர் புடைவை கீழே தனியாய் விழுந்தது. ஆனால் அவன் மனோபீஷ்டம் முடியவில்லை. அவன் இன்னமும் த்ரௌபதி மற்றொரு புடைவைகட்டி இருப்பதாக எண்ணவில்லை. அதையும் உரிந்தான். ஆனால் மற்றொன்று அவளுடம்பில் விளங்கியது. அவள் மனத்துப் பரமஞானம் செழித்தது போலவே அவள் உடலிலும் துயில்களும் கிளைத்தன. இழுத்து இழுத்துக் கீழ்த்தள்ளிய புடைவைகுவியல் கிடக்க, அவன் கையும் சோர்ந்தது. அவன் உடலும் சோர்ந்தது. அவன் மனமும் சோர்ந்தது. அவன் எண்ணமும் சோர்ந்தது. த்ரௌபதியின் திடமான பக்தி கொஞ்சமேனும் சோரவில்லை. அவள் உடலிலிருந்த கலை கொஞ்சமேனும் நெகிழ்ந்து, சோரவில்லை. பரம்பொருளின் பெருந்தன்மைக்கு ஈடுபட்ட பெரும் பாக்கிய மவளதே யல்லவா?

இவ்வைசித்திரியச் செயல் எல்லார் மனத்தும் துரியோதனன் செய்கை தவறு என்பதை நாட்டியது. குருட்டரசனும் மனங் கொதித்தான். ஆனதைப்பற்றி என்செய்வதென்று சென்றதைப் பற்றி மன்னிக்கும்படியாய் மிகக் கேட்டுக் கொண்டான். நீ கேட்கும் வரனும் யான் அளிப்பன் என்றும் த்ருதிராஷ்டிரன் அபயம் கொடுத்தான். என்கணவரையும் அவரது நாட்டையும் எனக்குத்தந்து அவரது அடிமைத் தொழிலும் நீங்கச் செய்யவேண்டுமென்று கணவர்பால் கொண்ட அன்பு தூண்ட நல்லறவுருவாக வந்த தமது கணவரது ஸுகமேதனது ஸுகமென்று எண்ணிப் பொங்கிய ஆனந்தத்தோடு கேட்டாள். அவனுமதற்கிசைந்தான். இந்திரப் பிரஸ்தம்செல்ல ஐவரும் பாஞ்சாலியும், தேர் ஏறினார்கள்.

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

புதிய இராஜப்பிரதிநிதி.-நமது இராஜப்பிரதிநிதி லார்டு ஹார்டிஞ் இம்மாதம் 3உ வியாழக்கிழமை, லண்டனைவிட்டு இந்தியாவுக்காகப் பிரயாணமாகி விட்டார். இவரை வழியனுப்ப, லார்டு மார்லியும், இன்னும் அநேக கனவான்களும் விக்டோரியா ஸ்டேஷனில் வந்திருந்தார்களாம்.

***

புதிய இந்திய மந்திரி.—லார்டு மார்லி இந்தியா மந்திரி வேலையை ராஜினாமா கொடுத்துவிட்டார். அவருக்குப்பதிலாக லார்டு க்ரூ இந்தியா மந்திரியாய் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் இதுவரை குடியேற்ற மந்திரியாய்(Secretary of State for Colonies) இருந்து வந்தார். இவர் லார்டு ஸபையில் லிபரல் கக்ஷியாருக்குத்தலைவர்.

***

தஞ்சாவூரில் கல்விப் பொருட் காக்ஷி.—சென்ற அக்டோபர்மீ 1, 2, 3, 4-தேதிகளில் தஞ்சாவூரில் கவர்ன்மெண்டு ட்ரெயினிங் ஸ்கூலில் கல்வி ஸம்பந்தமான பொருட்காக்ஷியொன்று, ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ, V. R. வெங்கட்டராமய்யர் B.A.,L.T., அவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் வெகு விமரிசையாக நடந்தேறியது. எலிமெண்டரி பாடசாலை உபாத்திமார்கள் அநேகர் கல்வி ஸம்பந்தமான காக்ஷிப் பொருள்கள் அனுப்பியிருந்தார்கள். அநேகம் உபந்நியாஸங்களும் அவ்விடத்தில் நடந்தன. தஞ்சாவூர் ஸப் அஸிஸ்டெண்டு Mr. சீனிவாஸாசாரியர் இக்காக்ஷியில் மிகவும் ஊக்கம் எடுத்துக்கொண்டார்கள்.

***

மைலாப்பூர், பி. எஸ். ஹைஸ்கூலைச் சேர்ந்த லிடரரி ஸொஸைடி.—(Literary Society)யின் 2-வது வருஷ மஹோத்ஸவம், ரானடே ஹாலில் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. கனம் ஹைகோர்ட் ஜட்ஜ் வி. கிருஷ்ணஸாமி அய்யர் அக்கிராஸனம் வஹித்தார். ரெவரண்டு D. G.M. லீத் என்பவர், மாணவர் காலம் (Student-Life) என்பதைப்பற்றி ஓர் பிரஸங்கம் செய்தார். லீலாவதி ஸுலோசனா என்னும் நாடகத்திலிருந்து ஓர் அங்கத்தை அப்பள்ளிக்கூடமாணவர் நடித்துக் காண்பித்தது நிரம்பவும் சிலாக்கிக்கத் தக்கதே. இதைப்பற்றி அடுத்த பத்திரிகையில் விரிவாய் எழுதப்படும்.

***

ஓர் உபாத்தியாயரின் பெருந்தன்மை.—இந்த மாதம் சேலம்ஜில்லா வாணியம்பாடி என்னும் ஊரில் ஓர் உபாத்தியாயர் பள்ளியில் படிக்கும் 17 சிறுவர்களுடன் சிலகாக்ஷிகளைக் காட்டிப் போதித்து வந்த காலத்து ஓர் தோணியில் ஆற்றைக் கடக்க வேண்டி வந்தது, ஆற்றுப்பெருக்கில் நடுவில் தோணி கவிழ்ந்ததால் சிறுவர்கள் எல்லோரும் ஜலத்தில்

மூழ்கிவிட்டார்கள். தப்பிப்பிழைத்த உபாத்தியாயரும், சிறுவர் இறந்த துயரம் பொறுக்காது தானும் அப்பிரவாகத்தில் விழுந்து உயிரை விட்டதாகத் தெரியவருகிறது. அவ்வுபாத்தியாயரின் பெருந்தன்மை மனத்திற்குஉத்ஸாஹம் மூட்டினும் சிறுவர் இறந்த விஷயம் துயரத்தை உண்டாக்குகிறது. இத்துயரத்தில் அவர் தாய்தந்தையர் முதலானவர்களுக்குக் கடவுள் துக்கத்தை அனுபவித்துக் கரையே நமனோதிடம் அளிப்பாரெனப் பிரார்த்திக்கிறோம்.

***

வெடிமருந்து விபத்து—கீழ் வங்காளத்தில் சந்தப்பூர் கடைத்தெருவில் தீபாவளிப்பண்டிகை சமயத்தில் ஒரு வெடிமருந்து விபத்து நேர, சில உயிர்ச்சேதங்கள் நேர்ந்தன. ஒரு காலன் பிடிக்கும்படியான ஒரு தகரத்தில் 10-பவுண்டு நிறையுள்ள வெடிமருந்தைப் போட்டு அந்தத்தகரத்தைப் பூமிக்குள் ஓர் வைத்தியசாலைக் கெதிரேவைத்து யாரோ ஒருவன் கொளுத்திவிட அது வெகுபலமாய் வெடித்தது. அப்படி அம்மருந்து வெடித்ததில் அந்த வைத்தியசாலை டாக்டர் நிவாரன் சந்த்ரா உடனே இறந்து போய்விட்டார். அவர்தம் கையில் வைத்துக் கொண்டிருந்த 8-மாதக்குழந்தை ஒன்றுக்கு ஒரு கால் போய்விட்டது. அந்த டாக்டர் தவிர மூன்று பேர் இறந்தனர். 10,12 பேர்களுக்குப் பலத்த காயம் பட்டது.

***

போஸ்டாபீஸ் விடுமுறை நாள்கள்.—இப்போது இந்திய கவர்ன்மெண்டார் வருஷத்திற்கு 6-நாள் லீவ் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். ஷை தினங்கள் இன்னவை என்பது அடுத்த ஜனவரிமாதத்தில் பிரசுரம் செய்யப்படும்.

***

உலகத்தில் அதிக பெரிய பழந்தோட்டம்.—பல பிரமாண்டமான காரியங்களுக்கு அமெரிக்கா இருப்பிடமாயிருப்பதுபோல, மிகப் பெரிய பழத்தோட்டமும் அக்கண்டத்தில்தானிருக்கிறது. மிஸ்ஸூரி மாகாணத்தில் மார்ஷ்பீல்ட் என்ற சிற்றூருக்கருகாமையில் உவைனான்ஸ் என்ற ஓர் தோட்டமிருக்கிறது. அதில் 89,000 சீர்மை இலந்தைமரங்களும், 40, 000 பீச்சு மரங்களும், 10,000 பேரிமரங்களும் கனிதரும் பிராயமுள்ளவைகளாய் இருக்கின்றன. இவைகளல்லாமல் பருவமடையாத சிறு செடிகள் இலக்ஷக் கணக்காயிருக்கின்றன. 1240 எக்கரா கொண்ட அந்தத் தோட்டத்தில் மரமொன்று 10 ரூபாய்க்குமேல் மதிக்கப்படுகிறது. ஆகையால் அந்தத் தோட்டத்தை விக்கிரயம் செய்கிறதாயிருந்தால் 15-இலக்ஷத்துக்குக் குறையாமல் விற்கலாம். அந்தத்தோட்டமிருக்கிற கிராமத்தில்தானே கனிதரும் மரங்கள் 10 இலக்ஷத்துக்கு மேலிருக்கின்றனவென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. சேகரிக்கப்படும் கனிகள் ரெயில் மார்க்கமாய் மற்றப்பட்டணங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

வாழை நார்த்தொழில்.—வாழைத் தோட்டங்களில் தாறுவெட்டியான மரங்களை வெட்டியெறிந்துவிடாமல் அம்மரங்களின் மட்டைகளிலிருந்து நார் எடுக்கலாமென்றும், அந்த நார்களைக் கொண்டு நல்ல வஸ்திரங்கள் நெய்யலாமென்றும் நம்மவர்கள் சிறிதுகாலமாய்த் தெரிந்து கொண்டிருக்கிறார்களானாலும், அவர்கள் வாழைநாரைக்கொண்டு வஸ்திரங்கள் நெய்ய முற்பட்டிருப்பதாய்க் காணவில்லை. சீனர்களோ வாழை நார்கொண்டு வஸ்திரங்கள் நெய்துவருகிறார்கள். அவ்வஸ்திரங்கள் உடைதாங்குமென்றும் இந்நாட்டைப்போன்ற உஷ்ணப் பிரதேசத்தார் உடுப்பதற்கு ஏற்றனவாயிருக்குமென்றும் சொல்லப்படுகிறது. சீனர்கள் நெய்யும் வாழை நார் வஸ்திரச் சுருட்டொன்று 5-கஜ நீளம் 1 கஜ அகலம் ரூபா $17\frac{1}{2}$-க்கு விலை போகிறதாம். அது அவ்வளவு கிராக்கியாய் விற்பதற்கு அது வெகு சொற்பமாய் நெய்யப்படுவதே காரணமாயிருக்கக்கூடும். வாழைநார் நெசவுத்தொழிலுக்கு அதிக மூலதனம் வேண்டியிராததலால் அத்தொழிலைச் செய்ய இந்நாட்டார் முற்படாதிருத்தல் அறியாமையேயாகும்.

***

பர்மா மாணிக்கங்கள்.-பர்மா தேசத்தில் மாணிக்கம் நீலம் ஆகிய இரத்தினங்கள் விசேஷமாய்க் கிடைக்கின்றன. நவரத்னங்களில் இவைகள் விசேஷ மதிப்புப் பெற்றவைகளாகையால், செல்வவான்கள் அவைகளைப் பிரியமாய் வாங்கி ஆபரணங்கள் செய்கிறார்கள். அனாதிகாலந்தொட்டு இப்படி நடந்து வருகின்றது. ஆனால் இயற்கையாய்க் கிடைக்கும் உண்மையான இரத்தினங்கள் போய், ரஸாயன சாஸ்திரோபாயங்களாற் செய்யப்படும் பொய் ரத்னங்கள் பிரபலமாய் விடும்போலத்தோன்றுகின்றது. சமீபத்தில் ஐரோப்பாவில் பிரஸ்ஸல்ஸ் நகரத்தில் நடந்த பொருட்காட்சியில் பொய்ச் சிவப்பும் பொய் நீலமும் காட்டப்பட்டனவாம். இந்தப் பொய்ச் சிவப்பும் பொய் நீலமும் உண்மையான இயற்கை ரத்னங்களைப்போலவே அழகிலும்காந்தியிலும் இருக்கிறபடியால் அவைகளை வர்த்தகர்கள் பொய் ரத்னமென்று சொல்லாமல் உண்மையான ரத்னமென்றே சொல்லுகிறார்கள். இவைகளைச் செய்யும் உபாயம் உண்மையில் எளிதாயிருந்தாலும் அதைப் பரம இரகசியமாய் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பிரான்ஸ் தேசத்தில் மட்டும் பொய் சிவப்புகள் 50-லட்சம் காரட்டு (Carat) வரையில் செய்யப்பட்டு மார்கெட்டுகளில் விலைக்கு வந்திருக்கின்றனவாம்.

***

தென்னிந்தியா ரெயில்வே ப்ளாட்பாரம் டிக்கட்டுகள்.—சென்ற அக்டோபர்மாதம் முதல்தேதிவரை 2-அணாவுக்கு விற்கப்பட்ட ப்ளாட்பாரம் டிக்கட்டுகள் இப்போது ஒரு அணாவுக்கு விற்கப்படுகிறது.

விவேக போதினி

ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை 1908-ம் ௵ முதல் பிரசுரமாகிவருகிறது. யாவராலும் சிலாகிக்கப்பெற்றது

இப்பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோர்களைக்கொண்டே, இதன் பெருமையை நன்கு அறியலாம். மிகவும் சுலபமான நடையில் எழுதப்படுகிறது. சிறுவர்கள் சிறுமிகள்கூட உத்ஸாகத்துடன் வாசிக்கக்கூடியது. ஒவ்வொரு மாதமும் ஒழுங்காகப் பிரசுரமாகிறது. சித்திரப்படங்கள் ஒவ்வோர் சஞ்சிகையிலும் உபயோகிக்கப்படுகின்றன. எத்திறத்தாரும் வாங்கி வாசித்து நற்பயனடையும் பொருட்டே சந்தாத்தொகையும் மிகவும் ஸௌலபமாய் வைக்கப்பட்டிருக்கிறது. [இம்மாதிரி யாவருக்கும் உபயோகத்தையும் உத்ஸாஹத்தையும் கொடுக்கக்கூடிய பத்திரிகை இன்னமும் எவராலும் பதிப்பிக்கப்படவில்லையென்று தைரியமாய்ச் சொல்லுவோம்.]

இப்பத்திரிகையில் பிரசுரமாகும் விஷயங்கள்

1. நீதிகளைக் கற்பிக்கக்கூடிய பொது விஷயங்கள்.
2. பொது நன்மைக்காகப் பாடுபட்ட மஹான்களின் ஜீவிய சரிதைகள்.
3. இயற்கை அற்புதங்கள்.
4. உலக ஒழுக்கங்கள்.
5. கல்வியபிவிருத்திக்குரிய பாஷா விஷயங்கள்.
6. வியவஸாயம், கைத்தொழில், வியாபார விஷயங்கள்.
7. தக்க நிபுணர்களைக்கொண்டு எழுதப்பட்டு வரும் உயர்தரமான நாவல்கள், நாடகங்கள்.
8. சிறுவர்க்காகவென்று எழுதப்படும் நீதியைப் புகட்டும் சிறந்த கதைகள்.
9. ஸ்திரீகளுக்கேற்ற நற்போதங்கள்.
10. சாஸ்திரீகமான விசேஷ வர்த்தமானங்கள்.

தபாற்கூலி உள்பட சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன்,					பிணுங்கு, சிங்கப்பூர், நேட்டால், ஆ இடங்களுக்கு				
ஒரு வருஷத்துக்கு	ரூ.	3	0	0	ஒரு வருஷத்துக்கு	ரூ.	4	8	0
ஆறு மாதத்திற்கு	,,	1	12	0	ஆறு மாதத்திற்கு	,,	2	4	0
தனிப்பிரதி	,,	0	5	0	தனிப்பிரதி	,,	0	6	0

☞ சந்தாத்தொகை முன்பணமாகத்தான் அனுப்பவேண்டும். அல்லது, முதல் சஞ்சிகையை ஒரு வருஷத்துக்கு, அல்லது ஆறு மாத சந்தாவுக்கு வி. பி. மூலமாய் அனுப்பிப் பெற்றுக்கொள்ளப்படும்.

இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு மட்டுமே எங்களிட சொந்தப்புத்தகங்களும், இன்னும் அநேக தமிழ்ப் புத்தகங்களும் குறைந்தவிலைக்கு அனுப்பப்படும். ஆகையால், இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு எப்பொழுதும் நஷ்டமில்லை. பத்திரிகையின் அபிவிருத்தி விஷயமாய் எழுதப்படும் நிருபங்களை எங்களால் இயன்றமட்டில் கவனித்து, முடிந்தவரையில் சீர்திருத்தமுயலுவோம். மற்றும்வேண்டிய விபரங்கள் எழுதித்தெரிந்துகொள்ளலாம்.

குறிப்பு :—மாதிரிக்காப்பி வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பினால், உடனே அனுப்பப்படும்.

மானேஜர், "விவேக போதினி" ஆபீஸ்,

மைலாப்பூர், மதராஸ்.

நமது பத்திரிகைக்கு விஷயதானம் செய்யும்

கனவான்களில் சிலர் :—

ம-ா-ா-ஸ்ரீ மஹா மஹோபாத்யாயர் பண்டித-ஸ்ரீ வே. சாமிநாதய்யரவர்கள்.

,, மஹா மஹோபாத்யாயர் பண்டித-ஸ்ரீ சந்திரசேகர சாஸ்திரிகளவர்கள்.

,, கனம் ஆர். ரகுநாதராவ் அவர்கள், திவான் பஹதூர், ஸி.எஸ்., ஐ.

,, பண்டித-ச. ம. நடேச சாஸ்திரியாரவர்கள்.

,, டி. செல்வகேசவராய முதலியார் அவர்கள், எம்.ஏ.

,, த. கனகஸுந்தரம் பிள்ளை அவர்கள், பி.ஏ.

,, டி. ஏ. கோபிநாத ராவ் அவர்கள், எம்.ஏ.

,, வ. சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள், எம்.ஏ.

,, பி. வி. ஸ்வாமி ராவ் அவர்கள், எம்.ஏ.

,, எஸ். குப்புஸாமி சாஸ்திரிகள் அவர்கள், எம்.ஏ.

,, டி. எஸ். சுப்பிரமணிய அய்யரவர்கள், எம்.ஏ., எல்.டி.

,, ஏ. பஞ்சாபகேசய்யர் அவர்கள், எம்.ஏ., எல்.டி.

,, வி. அப்பாஸாமி அய்யர் அவர்கள், எம்.ஏ.

,, மஹேச குமார சர்மா அவர்கள்.

,, ஏ. எஸ். கஸ்தூரிரங்கய்யர் அவர்கள், பி.ஏ., எல்.டி.

,, வ. சேஷகிரி சாஸ்திரியார் அவர்கள்.

,, வி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், பி.ஏ.

,, ஜே. ஆர். ரங்கராஜு அவர்கள்.

,, ஏ. மாதவய்யா அவர்கள், பி.ஏ.

,, எஸ். சிதம்பர அய்யர் அவர்கள்.

,, கே. நாராயண அய்யர் அவர்கள், பி.ஏ., எம்.பி., ஸி.எம்.

,, பண்டித-ஸ்ரீ கோபாலகிருஷ்ண அய்யர் அவர்கள்.

,, ஐ. வே. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், பி.ஏ.

,, ஸி. ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள், பி.ஏ.

,, வி. ஜி. சுப்பய்யர் அவர்கள், பி.ஏ., எல்.டி.

,, ஜீ. சுந்தரேச அய்யரவர்கள். பி.ஏ., எல்.டி.

,, ஜீ. தாதாசாரியாரவர்கள், பி.ஏ.

,, ப. சம்பந்த முதலியாரவர்கள், பி.ஏ., பி.எல்.

,, ஆர். நரஸிம்மய்யங்கார் அவர்கள், பி.ஏ., எம்.எல்.

,, ப. கிருஷ்ணஸாமி சாஸ்திரி அவர்கள், பி.ஏ., பி.எல்.

,, டி. எஸ். நாராயண சாஸ்திரியாரவர்கள், பி.ஏ., பி.எல்.

,, எஸ். ஈ. சங்கர அய்யர் அவர்கள், பி.ஏ., பி.எல்.

,, என். ஆர். கே. தாதாசாரியார் அவர்கள், பி.ஏ., பி.எல்.

,, ஸி. சுந்தரம் அய்யர் அவர்கள், பி.ஏ.

,, ஸி. எஸ். சுந்தரம் அய்யர் அவர்கள், பி.ஏ., எல்.டி.

,, த. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் பி.ஏ.

,, ஸி. பி. வெங்கிடராமய்யரவர்கள் பி.ஏ.

குறிப்பு:—இன்னும் அனேகம் நிபுணர்களும், ஸ்திரீகளும் நமது பத்திரிகைக்கு வியாஸங்கள் எழுதுகிறார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டபடியாலும், இங்கு இடம் இல்லாமை பற்றியும் அவர்கள் பெயர்கள் இவ்விடம் அச்சிடப்படவில்லை.

நம்மது பத்திரிகைப்பற்றிச் சில முக்கிய அபிப்பிராயங்கள்

Press and Public Opinions

சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ம-ள-ள-ஸ்ரீ மஹாமஹோபாத்யாய வே. சாமிநாதய்யரவர்கள்:—** மதஸம்பந்தமான விஷயங்களும், நீதிகளை கற்பிக்கும் சிறுகதைகளும் புதிய நாடகங்களும் சில மொழிபெயர்ப்புகளும், தற்காலத்திற்கேற்ற நாகரீக விஷயங்களும் இப்பத்திரிகையில் மிக எளிய நடையில் எழுதப் பெற்றிருக்கின்றன; சிறுவர்களும் பெண்பாலரும் இதனால் பல விஷயங்களையும் வருத்தமின்றித் தெரிந்துகொள்ளலாம். தமிழ் பாஷாபிமானிகளாகிய பிரபுக்கள் இதனை ஆதரித்து இதைப்பிரசுரஞ் செய்துவரும் ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாருக்கு ஊக்கம் அளிப்பார்களென்று நம்புகிறேன்.

"இந்து நேசன்"—விவேகபோதினி.—"பார்க்கும்போது எத்தகையோனுக்கும் இது விவேகத்தை விளக்கி நற்போதத்தை நாடும் இனிய செந்தமிழ் பத்திரிகையாகுமென்று புலப்படாமலிராது.

"கலாநிதி":—* * * நல்ல தமிழில் எழுதப் பெற்று அழகாக பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது. இப்போது தென்னிந்தியாவில் பதிப்பிக்கப்பெறும் பல தமிழ் மாதாந்திரப் பத்திரிகைகளில் இதுவே சிறந்ததென்று சொல்லுவோம்.

இந்தியா.—ஆவலாக வருமென்று காத்திருந்த "விவேக போதினி" யென்னும் பத்திரிகையை இன்று வரப்பெற்றோம். போதினியின் ஒவ்வொரு பக்கமும் மனத்தை மேன்மைப்படுத்த நிச்சயமாக பிரயாஸப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது. மதம், கல்வி, வியவஸாயம், சுகாதாரம் முதலிய பக்கங்கள் சொல்லமுடியா வகையோடு எழுதப்பட்டிருக்கிறது. சாதாரணமான ஜனங்களுக்காக நாவல், கதை, நாடகங்களும் மனதைக்கவரும்படி எழுதப்பட்டிருக்கின்றன. சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் வேண்டிய பக்கங்களை இப்போதினி ஒன்றுதான் சரியாக பிரசுரம் செய்கின்றது.

உதயதாரகை.—* * இப்பத்திரிகை இது காலம் தமிழ் நாட்டிலே உற்பத்தியான பத்திரிகைள் யாவுக்கும் கிரீஷமெனத்தக்கதாய் வித்யா விஷயம், கைத்தொழில், சாஸ்திர சம்பந்தமான விஷயங்கள் கல்வியிலும் மதியூகத்திலும் சிறந்த பெரியோரது சரிதம், இதிஹாஸபுராணாதிகளின் ஸாராம்சங்கள், தமிழ் இலக்கண இலக்கிய விஷயங்கள், நீதியும் அறிவும் புகட்டும் நன்னெறிக்கதைகள், ஆசார சீர்திருத்த ஸம்பந்தமான விஷயங்கள், சுகாதார விளக்கம் ஆகியவற்றைத் தாங்கி வெளிவந்திருக்கிறது. பெண்பாலர்க்கும் சிறுவர்க்குபயோகமான சிறந்த போதனா விஷயங்களும் பிரத்தியேகமான வகுப்புகளாய் இதில் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு விஷயமும் அறிவையும் விவேகத்தையும் வளர்ப்பதுஞ் சன்மார்க்கபோதனமமைந்ததும் விசேஷமான கிளர்ச்சியையும் இனிமையையும் பயப்பதுமாயிருக்கின்றது * *

லோகோபகாரி.—* இதில் ஸ்திரீ புருஷ, பாலக பாலகிகளுக்கு மிகவும் யுக்தமான விஷயங்கள் எழுதப்படுகின்றன. தமிழ்நாட்டு ஜனங்களுக்கு மிகவும் பிரயோஜனத்தை விளைவிக்கும் என்பதிற் சந்தேகமில்லை. வியவஸாயம், வித்யாபிவிருத்தி, ஸ்திரீகளின் பாதிவிரத்யம், அனேக கதைகள், தேச விதேசீய விஷயங்கள் வெகு நன்றாய் வெளிவந்திருக்கின்றன.

தக்ஷிண்தீபம், சேலம்.—* * இதற்குச் சிறந்த கல்விமான்கள் வியாஸங்களும் நிரூபங்களும் எழுதி வருகின்றனர். முதல் பகுதியைப்போலவே இரண்டாம் பகுதியில் அநேக சிறந்த வியாஸங்கள் அடங்கியிருக்கின்றன. * * *

'திராவிடாபிமானி' * * இதில் கல்வி, வியவஸாயம், கைத்தொழில், மத ஸம்பந்தமான விஷயங்கள், மற்றும் பல சமாசாரங்களும் அடங்கியிருப்பதோடு ஸ்திரீகளுக்கான பக்கங்களும், சிறுவர்களுக்கான பங்கங்களும் நன்றாய் எழுதப்பட்டிருக்கின்றன. * * தன் பேருக்கேற்ப இப்பத்திரிகை அறிவை பரவச்செய்யும் என்பதற்கு ஐயமில்லை.

"சுதேசமித்திரன்"—"பார்த்தமட்டில் அப்பத்திரிகை அதற்கிடப்பட்டிருக்கும் பேருக்கேற்ப அறிவைப் பரவச்செய்யும் சாதனங்களுள் ஒன்றாகுமென்று நாம் சொல்லக்கூடும். அடங்கியுள்ள விஷயங்களில் அப்பத்திரிகை வாங்கிப்படிக்கும் எல்லாருக்கும் அதனிடத்தில் சுவையுண்டாகக் கூடியனவாயிருக்குமென்றும் நாம் எதிர்ப்பார்க்கிறோம். ஸ்திரீகளுக்கான பக்கங்களும், சிறுவர்களுக்கான பக்கங்களும் நன்றாய் எழுதப்பட்டிருப்பவனவாக காண்கின்றன."

"ஆபிரிக்கன் வர்த்தமானி".—இங்கிலீஷ் பத்திரிகைகளைப்போலொற்ற வெகு இனியநடையில் பற்பல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. விவசாயம், கைத்தொழில், காவியம், சாஸ்திரம், மதம், தேசச்செல்வர்களின் சரித்திரம், நல்லொழுக்கம், சுகாதாரம் முதலியவைகளைப்பற்றியும் தக்க பண்டிதர்களால் எழுதப்பட்டிருக்கின்றன. மேலும், சிறுவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் அறிவைக்கொடுக்கக்கூடிய முக்கியஅம்சங்களுமிருக்கிறது. ஆங்கிலேய பாஷையில் கணிக்கப்பட்ட முக்கியமான காவியங்களையும் மொழிபெயர்த்து அச்சிட்டு வருகிறார்கள்.

The "Madras Mail".--
This interesting Tamil Monthly contains as usual a number of useful and well-written articles on Nature, Education, Literature, Agriculture and Hygiene and judging from the standard which the publishers have set before themselves, this little monthly is likely to prove more and more popular and useful. *The special pages for children and for the enlightenment of Indian women continue to be interesting*. The Journal deserves more encouragement and will be found useful for boys' and girls' schools.

The "Hindu."-The current number of this very useful and interesting Magazine is now before us and it gives us great pleasure to congratulate the publishers, the General Supplies Co., Mylapore, Madras, on the uniform standard of excellence they have been able to maintain and the wide variety and range of useful subjects dealt with in the several articles published.

M. R. Ry Dewan Bahadur R. Ragoonatha Row Avergal, C. S. I., writes :—
* * * It is written in good easy Tamil and deals with subjects of importance and usefulness to the general public. Its annual subscription is Rs. 3 so that even the poor can have valuable and useful reading in good Tamil for a small sum.

The Hon'ble Mr. P. S. Sivaswami Aiyar B.A., B.L., C. I. E., says:—
* * * * *The articles are written in an easy, redable style and deal with a variety of interesting subjects*. Its usefulness and cheapness, will I hope commend it to the Tamil public and secure popularity.

M. R. Ry. Dewan Bahadur V. Raghavacharlu, Avergal B.A.,—
As the subjects dealt with are interesting and useful, the articles are written in good style and a few pages are specially devoted for the instruction of children and ladies, I hope this journal will increase in its popularity and meet with the encouragement it deserves from the public. I am glad the journal does not dabble with polities.

T. S. Subramania Aiyar, Esq., M. A., L. T., of the Presidency College, writes :—
The commendable features of the journal are the *modesty of its aim, the simplicity of its diction and the variety of its topics*. Its articles on religion, aspects of nature and practical life should be especially appealing to young minds and the Magazine has much to present to the general readers also. It will be appreciated more and more by the public.

"African Chronicle":—* * * * In fact, it is replete with information on social and agricultural subjects, hygiene, religion, drama and a score of other things bring out to light the hidden treasures of India, are endeavouring to translate into vernacular the English classics. And pages are set apart for stimulating knowledge among women and children. The style, is simple and majestic. Unlike some of the Vernacular Journals that are disfigured by sheer verbiage of Pundit's ebullition it is refreshing to observe that the Viveka Bodhini, as its name indicates, instructs the Tamil speaking people in a manner befitting a simple people.

K. S. Gopalaratanam Aiyar, Esq., B.A., B.L. District Munsiff, Sivaganga, writes * * * "The articles are interesting and written in an attractive style —I wish you every success."

M. V. Minakshisundra Mudaliar Esq., B.A., Coimbatore writes:—It is full of interesting and readable matter and the style is chaste—I am sure it really supplies a long-felt want. * *

Pundit Mr. Thandalam Balasundra Mudaliar, says :—
The several articles appearing therein are really interesting as well as instructive, and must be highly useful to those for whom they are intended. It is gratifying to note that some of the articles are so artistically written that to the popular reader new things are made familiar and familiar things are made new, which ought to be the engaging power of every effective writer.

His Holiness Swami Ramakrishnananda writes :—
There are many good and intelligent ladies who for lack of their knowledge in English, are deprived of the benefit which the western savants and scholars have brought to the very doors of our homes ; and your Magazine by rendering their thoughts into Tamil has become a source of great benefit to all the Tamil knowing population. Thus its usefulness is immense.

The United India and Native States :—We feel it a pleasure to recommend it to our Tamil readers. The Editor has managed to get a numbar of able contributors, who, learned though they are, do not despise to write in a style easily understood. The articles wil satisfy men and women of various tastes.

The "South Indian Mail."—It is an excellent Tamil Monthly Journal. It is for the interest of the vast bulk of our people only conversant with Tamil. Its object is to educate our people along all lines, which aim it will eminently accomplish. Every article is written in easy, elegant style. The special attraction of the journal is, its ladies' and children's pages replete with didactics and short stories.

S. Muthu Aiyar, Esq., B. A., Masulipatam :—"I feel much obliged to you for the specimen copy of your *valuable*, and *most instructive* Journal Viveka Bodhini."

A large number of very useful Tamil Publications are given away only to subscribers of "Bodhini" at concession rates. Sample copy forwarded on receipt of One Anna Stamp.

Address:—MANAGER, The Viveka Bodhini, *MADRAS, SOUTH.*

இருபாலர்க்கும் மிகவும் பயன்படக்கூடியவை
மிகவும் சுலபமான செந்தமிழ் நடையில்
எழுதப்பட்டிருக்கின்றன

சந்திரசேகரன்

அற்புதமான நாவல்

இது ஆனந்தமடம் என்ற தேசபக்தி புகட்டும் நாவலின் ஆசிரியராகிய ஸ்ரீ பங்கிம் சந்திர சட்டோபாத்யாய நாவலரால் பங்காளி பாஷையில் இயற்றப்பட்டு அந்தப்பங்காளிபாஷையிலிருந்தே நேராக தமிழில் மஹேசகுமார சர்மாவால் மொழி பெயர்க்கப்பட்டது. இதின் மூல அர்த்தத்தின் சொன்னயம் பொருணயமெல்லாம் சிறிதேனும் குன்றாமல் கற்பின் பெருமையும், வைராக்கியச்சிறப்பும் தன்மறுப்பின் மாட்சியும் விசேஷமாய் அமைந்த அற்புதக்கதை அழகாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. கற்பு நிலையினின்றும் தவறுதற்குச் சிறிது முயன்ற சைவலினி யென்னும் பெண்ணுக்குத் தனது பர்த்தா யோகசக்தியால் அருளிய வசீகர நித்திரையின் பிரபாவத்தால் அவள் துர்க்குணம் மாறி கிருதார்த்தமான வைபவத்தைப் புத்தகத்தைப் படித்தாலன்றி வேறுவிதமாய் உரைக்கமுடியாது. விலை அணு 8.

ஆனந்தமடம்.—இது ஸ்ரீ பங்கிம் சந்திர சடோபாத்தியாயரால் பங்காளி பாஷையில் இயற்றப்பட்ட நவரஸாலங்காரங்களும் செறிந்த தேசபக்தி புகட்டும் நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு. ஸ்ரீ மஹேசகுமார சர்மாவால் பங்காளி பாஷையிலிருந்தே நேராகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. விலை அணு 8.

கிரிஸெல்டா

அல்லது

'பொறுமையுள்ள மனைவி.'

இப்புத்தகம் பெண்பாலர் அவசியம் வாசிக்க வேண்டிய புத்தகங்களில் ஒன்று. இப்புத்தகத்தில் ஒருபெண் தன் கணவனிடம் நடந்துகொண்ட மிகவும் சிலாகிக்கத்தக்க மாதிரியை நன்கு விளக்கிக் காட்டியிருக்கிறது. விலை அணு 3.

ஸ்ரீராமாயண வினவிடை, 2-ம் பதிப்பு.—இதில் அநேக நூதனமான விஷயங்கள் ஒழுங்குபடுத்திச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனந்த ராமாயணம், அத்யாத்ம ராமாயணம் இவைகளிலிருந்து எடுத்தெழுதிய சுருக்கமும் ராமாயணத்தின் உட்பொருளும் அடங்கியது. 226-பக்கங்கள் கொண்டது. ஸ்ரீராம பட்டாபிஷேக படத்துடன். விலை அணு 12.

ஸ்ரீ மகாபாரத வினவிடை, முதல்பாகம்.—இது ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்தியோக பர்வங்களடங்கியது. புதிய பதிப்பு. இப்பதிப்பில் சிற்சில சீர்திருத்தங்களும் ஒழுங்குகளும் புதிதாகச் செய்யப்பட்டிருக்கின்றன. பீடிகையில் சிற்சில பாகங்கள் புதிதாக ஸம்ஸ்கிருத பாரதத்திற்கு ஏற்பமாற்றி எழுதப்பட்டிருக்கின்றன. ஒவ்வோர் பர்வ ஆரம்பத்திலும் அவ்வவ்விடத்தில் வில்லிபுத்தூரார் எழுதியுள்ள காப்பு செய்யுள் அமைக்கப்பட்டிருக்கிறது. முடிவில் எழுதியுள்ள அனுபந்தத்தில் தமிழ்ப்பாரதத்திலுள்ள புதிய கதைகளைச் சுருக்கமாக எடுத்து எழுதியிருக்கிறது. விலை அணு 12.

ஆரியமத உபாக்கியானம், 3-ம் பதிப்பு.—உயர்ந்த தர்மங்களைத் தெளிவாய் எடுத்துக்காட்டும் 50-இனியகதைகள் கொண்டது. ஒவ்வோர் கதையும் நமது புராணங்களிலிருந்தே எடுத்து எழுதியது. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு நீதியை நன்கு விளக்குகிறது. விலை அணு 2.

ஸ்ரீ மஹா பாரத வினவிடை, 2-ம் பாகம், இது பீஷ்ம, துரோண, கர்ண, சல்லிய ஸௌப்திக, பர்வங்களடங்கியது. மிகவும் இனிய நடையில் எழுதப்பட்டது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, அர்ச்சுனனுக்குக் கீதை உபதேசம் செய்யும் பாகம் மிகவும் அழகாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய புத்தகம் ஒவ்வோர் ஹிந்துக்கள் வீட்டிலும் அவசியமிருக்கவேண்டும். விலை அணு 12.

ஸ்ரீமத் பாகவத வினவிடை, முதல்பாகம், முதல் ஒன்பது ஸ்கந்தங்களடங்கியது. இவ்வருமையான புத்தகம் இதுவரை எவராலும் பதிப்பிக்கப்பட்டதில்லை. தசாவதாரங்களையும் நன்கு விளக்கும்படி, மிகவும் அழகான 10 சித்திரப்படங்கள் இப்புத்தகத்தில் நடுநடுவே சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஹிந்துக்கள் ஒவ்வோர் வீட்டிலும் அவசியமிருக்கவேண்டிய புத்தகங்களில் இதுவும் ஒன்று. விலை ரு. 1.

இவை யாவராலும் புகழப்பெற்றது. அநேகம் பாடசாலைகளிலும் பாடப்புத்தகமாக உபயோகப்பட்டு வருகின்றன. மிகவும் சுலபமான நடையில் எழுதப்பட்டிருக்கின்றன.

கவனியுங்கள் ! கவனியுங்கள் !! கவனியுங்கள் !!!

மிகவும் பெருத்த லாபம்

நமது சந்தாதாரர்க்கு மாத்திரமே — இத்தகைய ஸந்தர்ப்பம் இனி நேருவது அரிது

"விவேகபோதினி" சந்தாதாரர்கள் மாத்திரம், இவ்விளம்பரத்தைச் சற்றுகவனிக்கவும் ரூ 8-4-0 விலையுள்ள புத்தகங்கள் சந்தாதாரர்க்கு மாத்திரமே ரூ 6-8-0 க்கு கொடுக்கப்படுகின்றன. இக்குறைந்த விலைக்கு இப்புத்தகங்கள் கொஞ்சகாலம் தான் கிடைக்கும். பிறகு முழு விலை கொடுக்கவேணும்.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயண வசனம்

பண்டித-நடேச சாஸ்திரியாரால் எளிய தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, தகுந்த வித்வான்களைக்கொண்டு பார்வையிட்டு, பிழையறப் பரிசோதித்துக் கண்ணைக் கவரும்படி கனமில்லாத காகிதத்தில் (Feather weight paper) அச்சிடப்பெற்றது.—

ஸ்திரீகளும், சிறுவர்களும்கூட எளிதில் தெரிந்துகொள்ளக்கூடிய தெளிவான எளிய நடையில் வசன ரூபமாய் இவ்வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது. இப்பதிப்பு இதன் ஆதி கிரந்தத்தின் கௌரவத்திற்கும், மஹிமைக்கும், தக்கவாறு பெரிய எழுத்தில் பிழையறப் பரிசோதித்துச் செவ்வையாய் அச்சிட்டு, நேர்த்தியான கலிகோவில் அழகாய் பைண்டு செய்திருக்கிறது. ஒவ்வொரு புத்தகசாலைக்கும் இன்றியமையாதது.

தயாராயிருக்கும் காண்டங்கள்

பால காண்டம் ...	... 1 12 0	ஆரண்ய காண்டம் ...	... 1 12 0
அயோத்யா காண்டம் ...	... 3 0 0	கிஷ்கிந்தா காண்டம் ...	... 1 12 0

இந்நான்கு காண்டங்களும் சேர்த்து வாங்கும் "விவேக போதினி" சந்தாதாரருக்கு மாத்திரம் ரூ 6—8—0-க்குக் கொடுக்கப்படும். மற்றையவர்களுக்கு இவ்விலைக்குக் கிடைக்க வேண்டுமானால், அவர்கள் முதலில் சந்தாதாரர்களாய்ப் பதிவு செய்துகொண்டால், குறைந்த விலைக்கு அகப்படும்.

மற்றைய காண்டங்கள் விரைவாய் அச்சிடப்பட்டு வருகின்றன. அவைகளும் சந்தாதாரர்க்குக் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும்.

மஹாபாரதம் சாந்தி பர்வம்

கும்பகோணம் பிரும்மஸ்ரீ-பாரத சாமாசாரியாரவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுப் பிழையறப் பரிசோதித்து நல்லகாகிதத்தில், பெரிய எழுத்தில் அச்சிட்டுக் கலிகோவில் நன்றாய்ப் பைண்டு செய்திருக்கிறது.

பாரதத்தில் இப்பர்வமானது பலவகைப்பட்ட தருமங்களையும், உபாக்கியானங்களையும் தெரிவிக்கும் ஸாரமான பகுதியென்பதும், அவற்றைத் தெரிந்துகொள்ளுதல் இருபாலார்க்கும் பெரும்பயனை விளைவிக்குமென்பதும் யாவரும் அறிந்த விஷயங்கள்.

இப்பொழுது தயாராயிருக்கும் முதல்பாகம்	2 0 0
"விவேக போதினி" சந்தாதாரருக்கு மட்டுமே	**1 8 0**

இரண்டாம்பாகம் அச்சிலிருக்கிறது. வெளியானவுடன் அப்பாகமும் சந்தாதாரர்க்குக் குறைந்த விலைக்கு அகப்படும்.

இந்த குறைந்த விலைக்குப் புத்தகங்கள் சிறிதுகாலம் தான் கிடைக்கும். பிற்பாடு அதன் முழு விலை கொடுக்கவேணும்.

வேண்டுவோர் காலதாமத மன்னியில், "விவேகபோதினி" மானேஜருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

விலாஸம்.—மானேஜர், "விவேக போதினி ஆபீஸ்"

மைலாப்பூர், மதராஸ்.